# ஐந்நூல்

## பாடம் 01

**1.** ஐந்நூலுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?

1. தோரா 2. பஞ்சாகமம் 3. திருச்சட்டம் 4. நீதிச்சட்டம் 5. மோசேயின் சட்டம்

**2.** ஐந்நூலை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?

"தோரா"

**3.** "தோரா" என்பதன் பொருள் யாது?

திருச்சட்டம் அல்லது படிப்பினை

**4.** ஐந்நூல் எவ்வாறு தோற்றம் பெற்றது?

இஸ்ரேல் மக்கள் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறை நம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றது.

**5.** ஐந்நூல் தோற்றம் பெறுவதற்கு உதவிய நூல்கள் எவை?

1. யாவே மரபு 2. ஏலோகிம் மரபு 3. இணைச்சட்டம் மரபு 4. குரு மரபு

**6.** வாய்மொழிப் பாரம்பரியம் என்றால் என்ன?

திருவிவிலியம் எழுதப்படுவதற்கு முன் இஸ்ரயேல் மக்கள் இறைவன் தமக்கு செய்த நன்மைகளையும், இறை அனுபவங்களையும் வாய் மொழியாக தமக்குப் பின்வரும் சந்ததியினருக்குக் கொடுத்து வந்ததையே வாய்மொழிப் பாரம்பரியம் என்கின்றோம்.

**7.** வாய்மொழிப் பாரம்பரியங்கள் எவை?

1. யாவே 2. ஏலோகிம் 3. இணைச்சட்டம் 4. குரு

**8.** ஐந்நூலின் உள்ளடக்கம் யாது?

1. இறைவன் பிரபஞ்சத்தையும் மனிதனையும் படைத்தல்
2. மனிதன் பாவத்தில் விழுதல்
3. குலமுதுவர்கள்
4. இஸ்ரேயலரின் எகிப்திய அடிமைத்தனம்
5. விடுதலைப் பயணத்தின் போது இறை பராமரிப்பு

**9.** ஐந்நூலில் அடங்கும் நூல்கள் எவை?

1. தொடக்கநூல் 2. விடுதலைப்பயணம் 3. லேவியராகமம்
4. எண்ணிக்கையாகமம் 5. இணைச்சட்டம்

**10.** யாவே பாரம்பரியத்தின் சிறப்புக்கள் யாவை?

1. இறைவன் யாவே என அழைக்கப்படுகிறார்.
2. இதன் இலக்கியநடை எளிமையானது.
3. பல் தன்மை கொண்டது.
4. கதைப்பாணியையும், நாடகப்பாணியையும் கொண்டது.
5. கற்பனை பண்ணி பார்க்கக் கூடியது.

**11.** " யாவே என்பதன் பொருள் யாது?

"ஆண்டவராகிய கடவுள்"

**12.** யாவே மரபுக்குரிய கதைகள் எவை?

1. படைப்புப்பற்றிய இரண்டாம் கதை
2. ஆதாம் ஏவாள் கதை
3. காயின் ஆபேல் கதை

MRS.N.STELLA (B.A (HONS)

**13.** யாவே பாரம்பரியம் எழுதப்பட்ட காலம் எது?

கி.மு. 950 - கி.பி - 900 வரை.

**14.** ஏலோகிம் பாரம்பரியத்தின் சிறப்புக்கள்?

1. இங்கு இறைவன் ஏலோகிம் என அழைக்கப்பட்டார்.
2. இறைவன், மனிதனைவிட மேன்மையும், மகத்துவமும் மிக்கவராகக் காண்பிக்கப்படுகிறார்.
3. இதில் இறைவன் மனிதனுடன் காட்சிகள், கனவுகள் மற்றும் வானதூதர் வழியாகப் பேசுகிறார்.
4. இதன் இலக்கிய நடை குறுகியது.
5. சொல்லவரும் விடயத்தை நேரடியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

**15.** ஏலோகிம் மரபுக்குரிய கதைகள் எவை?

1. ஈசாக்கைப் பலியிடல் 2. யாக்கோபு பெத்திலில் கண்ட கனவு

**16.** இணைச்சட்டப் பாரம்பரியத்தின் சிறப்புக்கள்?

1. இஸ்ரேயேலர் இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டும் என கூறுகின்றது.
2. ஒரே இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என அறிவுரை கூறப்படுகின்றது.
3. இதன் மொழிநடை அறிவுரைப் பாணியைக் கொண்டது
4. இம்மரபு இணைச்சட்ட நூலுக்கு மட்டுமே உரியது.

**17.** குருக்கள் பாரம்பரியம் சிறப்புக்கள்?

1. இங்கு இறைவன் அதி மேன்மை வாய்ந்தவராக காட்டப்படுகின்றார்.
2. இதில் குருக்களின் படிப்பினைகள் காணப்படுகின்றது.
3. இங்கு சமயத்தியான வழிபாடுகள், சடங்குகள் பற்றி விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.
4. இதற்குரிய கதைகளாக படைப்புப் பற்றிய முதல் கதையும், நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் குறிப்பிடலாம்.
5. ஓய்வு நாளின் முக்கியத்துவம் பற்றி கூறுகின்றது.

**18.** குருக்கள் மரபுக்குரிய கதைகள் எவை?

1. படைப்புப் பற்றிய முதல் கதை
2. நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை

**19.** தொடக்க நூலிலுள்ள விடயங்கள்

1. உலகப்படைப்பு, மனிதப்படைப்பு பற்றிக் கூறுவது.
2. படைப்பு வரலாறு மூலம் இறைவனே இவ்வுலகின் படைப்பாளி என எண்பிக்கின்றது.
3. இதிலுள்ள செய்தி நிலையானதும் எக்காலத்திற்கும் உரியதுமாகும்.

**20.** விடுதலைப்பயண நூலிலுள்ள விடயங்கள்

1. இஸ்ரேயேல் மக்கள் எகிப்தில் அடிமையாக வாழ்ந்த போது அனுபவித்த துன்பங்கள்.
2. மோயீசன் வழியாக அவர்கள் மீட்டது.
3. சீனாய் மலை உடன்படிக்கை வழியாக இறைவனின் மக்களானதும்.
4. யோசுவா வழியாக வாக்களிக்கப்பட்ட நாடான கானான் நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டதை கூறுகின்றது.

**21.** லேவியர் ஆகமம் என்பது யாது?

இஸ்ரேயேல் மக்கள் வழிபாட்டின்போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள் ஒழுங்குகள் பற்றிக் கூறுவது.

**22.** எண்ணிக்கை ஆகமம் என்பது யாது?

இஸ்ரேயேல் மக்களின் பாலைவனப் பயணத்தின் போது மோசேயால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கள் பற்றி கூறுவது.

MISS.STELLA (B.A (HONS)

**23.** இணைச்சட்டம் என்பது யாது?

1. இது மோசேயினால் இஸ்ரேயேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பாகும்.
2. மக்கள் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு அவருடைய வார்த்தையின் படி வாழ வேண்டும்
3. இறை வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்ந்தால் அனைவருக்கும் இறையாசீர் கிடைக்கும்.

**24.** ஐந்நூலின் முக்கியத்துவம் யாது?

1. உலகைப் படைத்த இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்றும் இஸ்ரேயேல் மக்களுக்கு மட்டுமல்ல எமக்கும் எடுத்துரைக்கின்றது.
2. இறைவன் இஸ்ரேயேல் இனத்தை தெரிந்து எடுத்து, அவர்களை எகிப்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்து சென்றது.
3. இணைச்சட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் இறையாசீர் பெறலாம் .

**25.** ஒவ்வொரு பாரம்பரியத்தில் இருந்தும் உமது வாழ்க்கைக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் எழுதுக?

1. யாவே பாரம்பரியத்தில் இருந்து நாம் இறைவனை நெருங்கிச் சென்று அவரின் அன்பைப் பெறலாம் என்பதை வழிகாட்டுகின்றது.
2. ஏலோகிம் பாரம்பரியத்தில் இருந்து இறைவன் எம்மோடு எம் அன்றாட வாழ்வின் செயற்பாடுகள் வழியாக எம்மோடு பேசுகின்றார் நாம் அவரது குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று வழிகாட்டுகின்றது.
3. இணைச்சட்டத்திலிருந்து நாம் உண்மையான ஒரே இறைவனை மட்டுமே வழிபட்டு அவருக்கே உரிய ஆராதனையையும், மகிமையையும் கொடுக்க வேண்டும்.
4. குரு பாரம்பரியத்திலிருந்து நாம் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஞாயிறு தினத்தை தூய்மையாக கடைப்பிடிப்போம்.

**26.** ஐந்நூலைப் படிப்பதனால் உமது வாழ்க்கைக்கு கிடைக்கும் பயன்கள் 5 எழுதுக?

1. இறைவனே உலகத்தைப் படைத்தார் என்ற உண்மையை அறிய முடிந்தது.
2. எகிப்திலிருந்து இஸ்ரேயேல் மக்களை மீட்டது பொல் என்னைப் பாதுகாத்து வழிநடத்துவார்
3. வழிபாட்டு சட்ட ஒழுங்குமுறைகளின் படி இறைவனை வழிபடும் முறையை அறிய உதவுகிறது.
4. இஸ்ரேயேலரினர் பாலைவனப் பயணத்தின் வழியாக இறைபராமரிப்பை உணர முடிகிறது.
5. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்தால் இறையாசீர் கிடைக்கும்.

## பாடம் 02

## இணைத்திருமறை நூல்கள்

**27.** திருவிவிலிய நூல்களின் பிரிவுகள் எவை?

1. பழைய ஏற்பாடு
2. புதிய ஏற்பாடு

**28.** யூதர்கள் ஏற்றுக் கொண்ட பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?

39

**29.** யூதர்கள் ஏற்றுக் கொண்ட (39) பழைய ஏற்பாட்டு நூல் எந்த மொழியில் எழுதப்பட்டது?

எபிரேய மொழியில்

**30.** கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட பழைய ஏற்பாட்டு நூல் எத்தனை?

46

**31.** யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயன்படுத்திய எபிரேய மொழியில் எழுதப்பட்ட 46 நூல்களை வேறு எவ்வாறு அழைப்பர்?

மசோரோடிக் பிரதி

MRS.N.STELLA (B.A (HONS))

**32.** யூதர்கள் புதிய ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டார்களா?

இல்லை.

**33.** கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட நூற்பிரிவுகள் எவை?

1. பழைய ஏற்பாடு - **46**
2. புதிய ஏற்பாடு - **27**

**37.** கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்ட நூல்கள் எவை?

1. பழைய ஏற்பாடு - **39**
2. புதிய ஏற்பாடு - **27**

**38.** கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட பழைய ஏற்பாட்டு 46 நூலில் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்கள் எந்த நூல்களை ஏற்றுக் கொள்ளவில்லை?

மறைவு நூல்களை (இணைத் திருமுறை நூல்கள்)

**39**. யூதர்கள் இணைத்திருமுறை நூல்களை ஏற்றக் கொண்டார்களா?

இல்லை

**40.** இணைத்திருமுறை நூல்கள் எத்தனை?

**07**

1. தோபித்து
2. யூதித்து
3. சாலமோனின் ஞானம்
4. சீராக்கின் ஞானம் 5. பாரூக்
6. மக்கபேயர் - 1
7. மக்கபேயர் - 2

**41.** யூதர்கள் ஏற்றுக் கொண்ட எபிரேய மொழியில் எமுதப்பட்ட 39 நூல்களுக்கு வழங்கப்பட்ட பெயர்?

தனக்

**42.** கத்தோலிக்கரும், கிரேக்க மொழி யூதர்களும் ஏற்றுக் கொண்ட பழைய ஏற்பாட்டு நூலுக்கு (46) வழங்கப்பட்ட பெயர்?

செப்துவாஜித்

**43.** யூதரின் பிரிவுகள் எவை?

1. பலஸ்தீன யூதர்
2. கிரேக்க மொழி பேசுகின்ற யூதர்

**44.** கிரேக்க மொழி பேசுகின்ற யூதர்களுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?

1. சிதறுண்டு போன யூதர்கள்
2. யௌன பண்பாட்டினர்.

**45.** செப்துவாஜித் என்பதன் பொருள்?

எபிரேய மொழியில் இருந்த திருவிவிலியத்தை கிரேக்க மொழிக்கு மொழிக்கு மொழி பெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இம் பெயர்ப்பை 72 கிரேக்க மொழி பேசும் யூதர்கள் செய்தார்கள். அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை செப்துவாஜித் என அழைத்தனர்.

**46.** செப்துவாஜித் மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு எது?

கி.மு 3ம் நூற்றாண்டு (கி.மு 333)

**47.** செப்துவாஜித் எழுதப்பட்ட இடம் எது?

அலெக்ஸ்சாந்திரியா

**48.** செப்துவாஜித் எழுதப்பட காரணமாக இருந்த அரசன் யார்?

திமிதிரியஸ் என்னும் 2ம் தொலமி

MRS N.STELLA ( B.A ( HONS)

**49.** இணைந்திருமுறை நூல்களுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?

மறைவு நூல்கள்

**50.** இணைந்திருமறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டன என்பதற்கான காரணங்கள் தருக?

1. ஆதித் திருச்சபையினர் இணைந்திருமுறை நூல்களை திருவழிபாட்டின் போது பயன்படத்தப்பட்டது.
2. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நூல்களை எழுதுவதற்கு கிரேக்க நூல்களை எழுதுவதற்கு இணைந்திருமறை நூல்களிலிருந்து 18 மேற்கோள்களை எடுத்துள்ளனர்.
3. திருவிவிலியத்தில் கிரேக்க நூல்கள் வேறு இணைந்திருமுறை நூல்கள் வேறு எனப் பிரித்துக் காட்டப்படவில்லை. உதாரணமாக கிரேக்க நூலாகிய நெகோமியா நூலுக்குப் பின் தோபித்து இணைக்கப்பட்டுள்ளது.

## பாடம் 03
## இஸ்ரயேல் இறைவாக்கினர்கள்

**51.** இறைவாக்கினர் எனப்படுவோர் யார்?

1. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்
2. இறைவனுக்காகப் பேசுபவர்கள்
3. இறைவனின் எண்ணங்களை, திட்டங்களை அவரிடம் இருந்து அறிந்து மக்களுக்கு அறிவிப்பவர்கள்.
4. கடவுள் ஒருவரே என நிலைநாட்டினர்.

**52.** இறைவாக்கினரின் காலம் எது?

கி.மு 8 - 4ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியாகும்.

**53.** இறைவாக்கினருக்கு வழங்கப்பட்ட பெயர்கள் எவை?

"நபி"

**54.** "நபி" என்ற எபிரேயச் சொல்லின் பொருள் யாது?

இறை சித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பர்

**55.** அக்காடி மொழியில் "நபி" என்ற சொல்லின் பொருள்?

அழைக்கப்பட்டவர்

**56.** நபி என்ற சொல்லை கிரேக்க மொழியில் எவ்வாறு அழைப்பர்?

"ப்றோபேரஸ்"

**57.** 'ப்றோபேரஸ்' என்பதன் பொருள்?

ஒருவருக்காக பேசுபவர்

**58.** இறைவாக்கினரை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

02

1. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்
2. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.

**59.** எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

02

1. பெரிய இறைவாக்கினர்
2. சிறிய இறைவாக்கினர்

MRS.N.STELLA ( B.A ( HONS)

**60.** பெரிய இறைவாக்கினர் யார்?

1. ஏசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல்

**21** சிறிய இறைவாக்கினர் யார்?

1. ஒசேயா 2. யோவேல் 3. ஆமோஸ் 4. ஓபதியா 5. யோனா 6. மீக்கா 7. நாகூம் 8. ஆபக்கூக்கு 9. செப்பனியா 10. ஆகாய் 11. செக்கரியா 12. மலாக்கி

**61.** எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் யார்?

1. நாத்தான் 2. ஏலியா 3. எலிசா 4. குல்தா 5. அஹியா 6. மீக்சாயா

**62.** எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் நூல்கள் எழுதினார்களா?
இல்லை

**63.** எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பண்பு யாது?

1. தியானத்தில் ஆழ்ந்திருப்பர்
2. குழுவாக பணி செய்வர்
3. தமது தூதுப் பணியை உறுதிப்படுத்த அடையாளங்களைச் செய்வர்.

**64.** இறைவாக்கினரின் பணிகள் எவை?

1. இஸ்ரேயேல் மக்களை இறைவன் வழியில் நடத்தி சென்றனர்.
2. இறைவனின் விருப்பத்தைமக்களுக்கு அறிவித்தனர்.
3. இஸ்ரேயேல் மக்கள் தவறும் போது கண்டித்து திருத்தினர்.
4. இஸ்ரேயேல் மக்கள் நல்லதைச் செய்யும் போது அவர்களை உற்சாகப்படுத்தினர்.
5. இஸ்ரேயேல் மக்கள் நாடு கடத்தப்பட்ட காலங்களில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினர்

**65.** இறைவாக்கினர் இறைவாக்கு உரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்கள் எவை?

1. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.
2. என்கிறார் ஆண்டவர்.
3. ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது.

**66.** இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பை (எசா.6:1-13) சுருக்கமாக தருக?

எசாயா இறைவாக்கினர் காட்சியில் தான் ஜெருசலேம் ஆலயத்தில் இருப்பதாகவும், இறைவன் உயரமான ஒரு அரியணைமீது அமர்ந்திருப்பதாகவும் அவருடைய தொங்கலாடை கோவிலை நிரப்பி இருப்பதாகவும், அங்கு ஆறு இறக்கைகள் கொண்ட சேரான்பிகள் (வானதூதர்) அவருக்கு பணிபுரிய அவரைச் சூழ்ந்து நிற்பதாகவும் அவை சேராபின்களில் ஒன்று "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர்" என பாடின. இதைக் கண்ட எசாயா இறைவாக்கினர் **"ஐயோ நான் அழிந்தேன் ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான் படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே"** என்றார். உடனே ஆண்டவர் வானதூதர் வழியாக நெருப்பு தனலை குறட்டால் எடுத்து அவரின் வாயில் வைத்து **"இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது, உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது உன் பாவம் மன்னிக்கப்பட்டது"** என்றார். பின் இறைவன் எசாயாவிடம் எனது பணியைச் செய்ய யாரை அனுப்புவேன் நமது பணிக்காக யார் போவார் என்றார். அதற்கு எசாயா இறைவாக்கினர் நான் என் தலைவரின் குரலைக் கேட்டேன். **'இதோ நானிருக்கின்றேன் அடியேனை அனுப்பும்'** என்று பதிலளித்தனர்.

**67.** எசாயா என்பதன் பொருள் யாது?
யாவே மீட்பராயிருக்கிறார்

MRS.N.STELLA (B.A (HONS))

**68.** எசாயா பிறந்த ஆண்டு எது?

கி.மு 765

**69.** எசாயா இறைவாக்கினர் எங்கு பிறந்தார்?

எருசலேமில்

**70.** எசாயா இறைவாக்கினர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

யூத நாட்டை

**71.** எசாயாவின் தந்தை பெயர் யாது?

ஆமோஸ்

**72.** எசாயா இறைவாக்கினர் எத்தனை ஆண்டுகள் பணி செய்தார்?

40

**73.** எசாயா இறைவாக்கினர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

காட்சி மூலம்

**74.** "ஐயோ நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்" எனக் கூறியவர் யார்?

எசாயா இறைவாக்கினர்

**75.** "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்ற கூற்றோடு தொடர்புடையவர் யார்?

எசாயா இறைவாக்கினரும் இறைவனும்

**76.** எசாயா இறைவாக்கினர் கண்ட காட்சியின் மூலம் நீர் உணர்ந்து கொண்டவை எவை?

1. கடவுள் பரிசுத்தமானவர்
2. கடவுள் ஆலயங்களில் பிரசன்னமாக இருக்கின்றார்
3. இறைவன் வாழும் இல்லமாகிய ஆலயத்தில் நாம் பக்தி பற்றுதலுடன் நடந்து கொள்ள வேண்டும்.
4. இறைவாக்கினர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள்.

**77. யாரால் யாருக்குக் கூறப்பட்டது.**

1."ஐயோ நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான், படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே".

எசாயா இறைவாக்கினரால் தனக்கு தானே

2."இதோ நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது, உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது.

செராபீனால் எசாயாவுக்கு

**78.** எசாயா இறைவாக்கினர் மக்களால் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

சமூக நீதியின் இறைவாக்கினர்

**79.** எசாயா இறைவாக்கினர் எப்போது இறைவாக்குரைக்கும் பணிக்கு அழைக்கப்பட்டார்?

கி.மு 742ல் உசியா அரசன் இறந்த ஆண்டில்

**80.** எசாயா இறைவாக்கினர் பணி செய்த இடம் எது?

தென்னரசு

MRS N STELLA (B A (HONS)

## எரேமியா இறைவாக்கினர்

**81.** எரேமியா இறைவாக்கினரின் அழைப்பை சுருக்கமாக தருக?

இவர் உரையாடல் மூலமாக இறைவனின் அழைப்பைப் பெற்றார். ஆண்டவர் எரேமியா இறைவாக்கினரை நோக்கி **"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்னே உன்னை திருநிலைப்படுத்தினேன், மக்கள் இனங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்"** என்றார். இதைக் கேட்ட எரேமியா **" என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாது சிறு பிள்ளை தானே"** என்றார். அதற்கு ஆண்டவர் நான் உன்னோடு இருக்கின்றேன் எனக் கூறி அவரைத் திடப்படுத்தி யாரிடம் எல்லாம் நான் உன்னை அனுப்புகிறேனோ அவர்களிடம் சென்று நான் சொல்வதை அவர்களுக்குச் சொல் என்றார். மேலும் இறைவன் **"இதோ பார் என் சொற்களை உன் வாயில் தைத்துள்ளேன் பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்கள் இனங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாகவும் ஏற்படுத்தியுள்ளேன் என்றார். அத்துடன் "நீயோ உன் இடையை வரிந்து கட்டிக்கொள் புறப்படு நான் கட்டளையிடும் அனைத்தையும் அவர்களிடம் சொல் அவர்கள் முன் கலக்கமுறாதே ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன்"** என்றார்.

**82.** "எரேமியா" என்பதன் பொருள் யாது?

யாவே உயர்த்துகின்றார்

**83.** எரேமியா பிறந்த இடம் யாது?

அனத்தோப்பு என்ற சிறிய கிராமத்தில்

**84.** எரேமியா பிறந்த ஆண்டு யாது?

கி.மு 646ல்

**85.** எரேமியா இறைவாக்கினர் அழைக்கப்பட்ட ஆண்டு?

கி.மு 627 - 626 வரையுள்ள காலப்பகுதியில்

**86.** எரேமியா இறைவனால் அழைக்கப்பட்ட போது அவருக்கு வயது?

25

**87.** எரேமியா இறைவாக்கினர் இறைவனால் அழைக்கப்பட்ட போது அதை ஏன் ஏற்க மறுத்தார்?

1. தான் சிறு பிள்ளை என்பதால்
2. சமுதாயம் தன்னை ஏற்றுக் கொள்ளாது என நினைத்ததால்

**88.** எரேமியா இறைவாக்கினர் பணி செய்த இடம்?

யூதா

**89.** எரேமியா இறைவாக்கினர் பணிக்காலத்தில் பணிபுரிந்த இறைவாக்கினர்?

1. எசேக்கியேல்
2. செப்பனியா
3. அபக்கூக்கு
4. நாகூம்

**90.** எரேமியா இறைவாக்கினர் பணி செய்த காலம் எத்தனை?

40 ஆண்டுகளுக்கு மேல்

**91.** எரேமியா இறைவாக்கினர் எவ்வாறான சமூகப் பின்னணிக் காலத்தில் பணிபுரிந்தார்?

நீதி குலைந்து, விபச்சாரமும், எளியோரையும், அநாதைகளையும் நசுக்கி வதைக்கப்பட்ட ஒரு குழப்பமான அரசியல் சமூக, சமய பின்னணியில் அழைக்கப்பட்டு பணி செய்தார்.

**92.** இறைவாக்கினர் எரேமியாவின் அழைப்பு எமக்கு தரும் கற்பித்தல் யாது?

எரேமியா இறைவாக்கினர் போன்று நாமும் பலவீனங்கள் மத்தியில் இறைவன் எமக்கு தரும் கடமைகள் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை.

MRS.N.STELLA (B.A(HONS))

**93.** இறைவாக்கினர் எரேமியாவின் தந்தையின் பெயர்?
இலிக்கியா

### எசேக்கியேல் இறைவாக்கினர்

**94.** எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பை சுருக்கமாக தருக?
எசேக்கியேல் இறைவாக்கினர் அடையாளங்கள் மூலம் இறைவனால் அழைக்கப்பட்டார். அக்காட்சியை கண்ட எசேக்கியேல் அச்சத்தால் மயங்கி முகங்குப்புற விழுகின்றார். ஆண்டவர் அவரை ஆவியால் நிரப்பி எழுந்து நிற்க கட்டளையிடுகின்றார். பின் ஆண்டவர் எசேக்கியேலை நோக்கி **“மானிடா நான் உனக்குத் தருகின்ற இச் சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு”** என்றார். எசேக்கியேலும் அதை உண்டார். அது தேன் போல் இனித்தது. பின் இறைவன் அவருக்கு இறைவாக்கு உரைக்கும் பணியின் பொறுப்பை ஒப்படைத்து, **“மானிடா எனக்கெதிராக கிளர்ச்சி செய்யும் மக்களிடம் நான் என்னை அனுப்புகிறேன். வுன் கண்ணும் கடின இதயமும் கொண்ட அம்மக்களிடம் நான் உன்னை அனுப்புகின்றேன். நீ அவர்களிடம் போய் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே என்று சொல், நீ அவர்களுக்கு அஞ்சாதே”** என்றார்.

**95.** “எசேக்கியேல்” என்பதன் பொருள் யாது?
இறைவன் (யாவே) பலப்படுத்துகிறார்.

**96.** “எசேக்கியேல்” இறைவாக்கினர் தந்தை பெயர் என்ன?
பூசி

**97.** “எசேக்கியேல்” இறைவாக்கினர் எந்த நாட்டில் வசித்த போது இறைவாக்கினரால் அழைக்கப்பட்டார்?
பபிலோனியாவில் தோல் - அபீபு என்ற இடத்தில்

**98.** “எசேக்கியேல்” இறைவாக்கினர் அழைக்கப்பட்ட காலப்பகுதி எது?
கி.மு 593ல்

**99.** எருசலேமை பபிலோனிய அரசு எத்தனை தடவை முற்றுகை இட்டது?
3 தடவை (கி.மு 604, 597, 586)

**100.** எசேக்கியேல் இறைவாக்கினர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?
சாதோக்கின் வழிவந்த குருகுலத்தைச் சார்ந்தவர்

**101.** எசேக்கியேல் இறைவாக்கினரின் இறைவாக்கு எதை மையக் கருத்தாகக் கொண்டிருந்தது?
இறை நம்பிக்கையை

**102.** இறைவன் ஓட்டுச்சுருளை யாருக்கு உண்ணக் கொடுத்தார்?
எசேக்கியேல் இறைவாக்கினருக்கு

**103.** எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பின் மூலம் உணர்த்தப்படும் செய்தி யாது?

1. யாவே ஒருவரே இறைவன்
2. யாவே ஒருவரே இயற்கையில் இருந்து வேறுபட்டவர்.
3. இறைவன் மேன்மையானவர்.
4. காட்சியில் கண்ட நெருப்பும், தீப்பிழம்பும் இறைவனின் தெய்வீகத் தன்மையையும் தூய்மையையும் உணர்த்துகிறது.

MRS.N.STELLA (B.A (HONS))

**104.** திருமுழுக்கின் மூலம் இறைவாக்கும் பணிக்கு அழைக்கப்பட்ட உமது கடமைகள் பொறுப்புக்கள் 5 தருக?

1. இறைவாக்குப்பணி கடவுளிடமிருந்து வந்த ஒரு பெருங்கொடை அதை ஏற்று, இறைவன் என் மூலமாக மக்களுக்கு சொல்ல விரும்பியதை அறிந்து சொல்லுவேன்.
2. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களைப் போல் ஒழுக்க சீலராக வாழிவேன்.
3. நற்செய்தியை எல்லோர் மத்தியிலும் பரப்புவேன்
4. கிறிஸ்துவின் போதனைகளுக்கு ஏற்ப முன்மாதிகையாளனாக வாழ்வேன்.
5. சமூகத்தில் நீதியை நிலை நாட்ட உழைப்பேன்.

**105.** இறைவார்த்தையை எடுத்துரைக்க உமக்கு கிடைத்த 5 சந்தர்ப்பங்கள்?

1. பாடசாலையில் காலை வழிபாட்டின் போது
2. திருப்பலியில் இறைவார்த்தை வாசிக்கும் போது
3. எனது சகோதரனுக்கு சமயப் பாடத்தை விளக்கிக் கூறும் போது
4. இறைவனை அறியாத எனது நண்பிக்கு தெரியப்படுத்தும் போது
5. சமூகத்தில் நடைபெறும் பொது வழிபாடுகளின் போது

## பாடம் 04

## நற்செய்தி

**106.** “நற்செய்தி” என்ற சொல்லின் கருப்பொருள் யாது?

மெசியா கொண்டு வந்த விடுதலை பற்றிய நல்ல செய்தியே நற்செய்தி ஆகும்.

**107.** நற்செய்தி தோற்றம் பெறுவதற்கு உதவிய 3 படி நிலைகள் எவை?

1. இயேசுவின் பங்களிப்பு
2. அப்போஸ்தலரின் பங்களிப்பு
3. நற்செய்தியாளர்களின் பங்களிப்பு

**108.** நற்செய்தி நூல்கள் எத்தனை? அவை எவை?

1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

**109.** நான்கு நற்செய்திகளுக்குரிய அடையாளங்கள் எவை?

1. மத்தேயு – மனித முகம் 2. மாற்கு – சிங்கம்
3. லூக்கா – எருது 4. யோவான் - கழுகு

## மத்தேயு நற்செய்தி

**110.** மத்தேயு நற்செய்திக்கு மனிதமுகம் ஏன் அடையாளமாக கொடுக்கப்பட்டது?

இயேசுவின் தலை முறை (பரம்பரை) அட்டவணையுடன் ஆரம்பித்தலை மனிதமுகம் அடையாளமாக கொடுக்கப்பட்டது.

**111.** மத்தேயு நற்செய்தி எழுதப்பட்ட காலம் எது?

கி.பி 80 -90

**112.** மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் யார்?

புனித மத்தேயு

MRS.N.STELLA (B.A (HONS)

**113.** மத்தேயு பற்றி 5 கருத்துக்கள் தருக?

1. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் ஆவார்.
2. இவர் சுங்கவரி அதிகதரியாக இருந்தார்.
3. இவரது வேறு பெயர் லேவி.
4. இவரது மத்தேயு நற்செய்தி அரேமேய மொழியில் எழுதப்பட்டது.
5. இவர் இயேசுவின் சீடராவார்.
6. இவரது தந்தை பெயர் அல்பேயு

**114.** புனித மத்தேயு நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?

1. இறையரசின் நற்செய்தி
2. மறைபரப்பு நற்செய்தி
3. திருச்சபையின் நற்செய்தி

**115.** புனித மத்தேயு நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?

பலஸ்தீனா யூதர்களுக்காக

**116.** புனித மத்தேயு நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி யாது?

யூதர்களுக்கும் யூதக்கிறிஸ்தவர்களுக்கும் ஒரு குழப்பமான காலத்திலும் ஜெருசலேம் ஆலயம் உரோமையரால் அழிக்கப்பட்ட சூழ்நிலையிலும் நற்செய்தியை எழுதினார்.

**117.** புனித மத்தேயு எழுதப்பட்டதன் நோக்கம் யாது?

இயேசு யூதர்களால் எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்பதை எண்பித்த நோக்கமாகும்.

## புனித மாற்கு நற்செய்தி

**118.** புனித மாற்கு எழுதப்பட்ட காலம்?

கி.பி 64 - 66

**119.** புனித மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் யார்?

புனித மாற்கு

**120.** புனித மாற்கு நற்செய்திக்குரிய அடையாளம் எது?

சிங்கம்

**121.** புனித மாற்கு நற்செய்திக்கு ஏன் சிங்க முகம் அடையாளமாக் கொடுக்கப்பட்டது?

புனித மாற்கு நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் ஆற்றிய போதனையுடன் ஆரம்பித்தாலும் திருமுழுக்கு யோவானின் போதனை சிங்கம் கர்ச்சிப்பது போன்று இருந்ததாலும் இவ்வடையாளம் மாற்கு நற்செய்திக்குக் கொடுக்கப்பட்டது.

**122.** புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட இடம் எது?

உரோமை

**123.** புனித மாற்கு நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?

பாடுகளின் நற்செய்தி

**124.** புனித மாற்கு நற்செய்தியை யாருக்காக எழுதினார்?

புறவின கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது

**125.** புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?

உரோமைய அரசன் நீரோவினால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இச்சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் தமது விசுவாசத்தில் உறுதியாக இருப்பதற்காக அவர்களைத் தைரியப்படுத்தும் பொருட்டே இந்நற்செய்தி எழுதப்பட்டது.

**126.** புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திகளிலும் எது முதல் எழுதப்பட்ட நற்செய்தியாகவுள்ளது?

மாற்கு நற்செய்தி

MRS.NSTELLA (B.A (HONS)

**127.** மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி?

கிறிஸ்தவம் ஆரம்பித்து அது பலஸ்தீன, யூத செமித்திய பண்பாடுகளில் இருந்து விலகி, உரோமைப் பேரரசின் புறவினப் பண்பாட்டு மாற்றமடைந்த பின்னணியில் தான் நற்செய்தி எழுதப்பட்டது.

**128.** புனித மாற்கு பற்றி 5 வசனம் தருக?

1. இவர் மாற்கு நற்செய்தியின் ஆசிரியராவார்.
2. இவர் ஜெருசலேமில் வாழ்ந்த மரியா என்ற பெண்ணின் மகனாவார்.
3. இவரை முதன் முதலில் கெத்சமெனித் தோட்டத்தில் காண்கின்றோம்.
4. இவர் பேதுருவின் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.

புனித லூக்காஸ் நற்செய்தி

**129.** புனித லூக்காஸ் நற்செய்தியின் ஆசிரியர் யார்?

புனித லூக்காஸ்

**130.** புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட ஆண்டு?

கி.பி 80 - 85

**131.** புனித லூக்காஸ் நற்செய்தியின் அடையாளம் எது?

எருது

**132.** புனித லூக்காஸ் நற்செய்திக்கு ஏன் எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது?

ஆரம்ப காலங்களில் பலிக்கு எருது பயன்படுத்தப்பட்டது. புனித லூக்காஸ் நற்செய்தியும் குரு செக்கரியாசின் பலியோடு ஆரம்பிப்பதால், புனித லூக்காஸ் நற்செய்திக்கு எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது.

**133.** புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட இடம் எது?

சிரியா அந்தியோக்கியாவில்

**134.** புனித லூக்காஸ் நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?

1. ஏழைகளின் நீதி
2. புற இனத்தவர் நீதி
3. அன்பின் நீதி
4. செபத்தின் நற்செய்தி
5. பெண்களின் நற்செய்தி

**135.** புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?

இயேசுக் கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் மீட்பர் என்பதை எடுத்து காட்டவே நற்செய்தியை எழுதினார்.

**136.** புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி யாது?

புற இனக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் எதிர்ப்புக்கள் வந்த சூழ்நிலையில் நற்செய்தியை எழுதினார்.

**137.** புனித லூக்காஸ் நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?

யூதர்களுக்காகவும், புற இனத்தவர்களுக்காகவும்

**138.** புனித லூக்காஸ் பற்றி 5 விடயங்கள் தருக?

1. இவர் புனித லூக்காஸ் நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் ஓர் வைத்தியர்.

. புனித பவுலின் பயணத் தோழன்.

4. இவர் ஒரு புறவினத்தவர்.
5. இவரது பெற்றோர் கிரேக்கர்.

MRS.N.STELLA (B.A (HONS)

## புனித யோவான் நற்செய்தி

**139.** புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர் யார்?
புனித யோவான்

**140.** புனித யோவானின் வேறு பெயர்?
அருளப்பர் அல்லது அன்புச்சீடர்

**141.** புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட ஆண்டு?
கி..பி 90 - 100

**142.** புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட இடம்?
எபேசு

**143.** புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட அடையாளம் எது?
கழுகு

**144.** புனித யோவான் நற்செய்திக்கு ஏன் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது?
கழுகு உயரப் பறக்கும் பறவை, அது மட்டுமல்ல கூரிய பார்வை கொண்டது, யோவான் நற்செய்தியும் இயேசுவின் வாழ்வு போதனையை கூறுவதைத் தவிர்த்து, அவரது வாழ்வு போதனைகளுள் காணப்படும் ஆழமான இறையியல் கருத்துக்களை காண்பதால் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது.

**145.** புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்?
ஆன்மீக நற்செய்தி

**146.** புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட நோக்கம் யாது?
இயேசுவே இறைமகனாகிய மெசியா என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவே நற்செய்தியை எழுதினார்.

**147.** புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி?
யூத திருச்சபை, புற இனத் திருச்சபையாக மாற்றம் அடைந்த பின்னணியில்

**148.** புனித யோவான் பற்றி அறிந்துள்ளதை தருக?

1. புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் இயேசுவால் விசேடமாக அன்பு செய்த சீடர்களுள் ஒருவர்.
3. இவர் செபதேயு, சலோமையின் புதல்வர்.
4. இவரது சகோதரன் யாக்கோபு.

## பாடம் 05

## படைப்பு

**149.** விவிலிய வரலாற்றை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
**02**

1. வரலாற்றுக்கு முற்பட்ட முற்பட்ட காலம்
2. வரலாற்றுக் காலம்

**150.** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினுள் அடங்கும் அதிகாரங்கள் எவை?
தொடக்க நூல் 1 - 11அதிகாரங்கள்

**151.** வரலாற்றுக் காலத்தினுள் அடங்கும் அதிகாரங்கள் எவை?
தொடக்கநூல் 11 - 50 வரையான அதிகாரங்கள்

**122.** தொடக்கநூல் வரலாறு யாருடன் ஆரம்பமாகிறது?
ஆபிரகாமுடன்

MRS.N.SHEELA (B.A (HONS))

**123.** படைப்பு வரலாற்றை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

**02**

1. உலகப் படைப்பு
2. மனிதப் படைப்பு

**124.** தொடக்க நூலில் படைப்பைப் பற்றி எத்தனை கதைகள் உண்டு? அவை எவை?

1. படைப்பைப் பற்றிய முதல் கதை
2. படைப்பைப் பற்றிய இரண்டாம் கதை

**125.** படைப்பு வரலாற்றில் வரும் கதைகள் உவமைகளின் நோக்கம் யாது?

இக்கதைகள் எதாவது ஒரு செய்தியினை சொல்லுவதாக இல்லை, மாறாக உலகத்தின் தொடக்கமும் முடிவும் கடவுளே என்பதை எண்பிப்பதாகவே உள்ளன.

**126.** படைப்புத் தொடர்பான முதலாவது கதையினுள் காணப்படும் விடயங்கள் எவை?

1. இது குரு பாரம்பரியத்தினைச் சேர்ந்தது.
2. ஓய்வு நாள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.
3. படைப்பு 7 நாட்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. இறைவன் மனிதனை தனது சாயலுக்கும் உருவுக்கும் ஏற்ப படைத்தான்.
5. மனிதனில் காணப்படும் இறைசாயலின் பண்புகள் அறிவு, சுதந்திரம், அழியாத ஆன்மா
6. ஏனைய படைப்புக்களுக்கு பண்புகள் இல்லை.
7. படைப்புக்களில் மனிதனே சிறந்த படைப்பாகும்.

**127.** படைப்பு தொடர்பான இரண்டாம் கதையில் காணப்படும் விடயங்கள் எவை?

1. இதுவே யாவே பாரம்பரியத்தைச் சார்ந்ததாகும்.
2. படைப்புக்களில் மேன்மையான படைப்பாக மனிதன் காணப்படுகின்றான்.
3. இறைவன் தனது உயிர் மூச்சை மனிதனுக்குக் கொடுத்தார்.
4. ஏனைய படைப்புக்களுக்கு இறைவனின் உயிர் மூச்சு ஊதப்படவில்லை.
5. மண்ணினால் மனிதன் உண்டாக்கப்பட்டு, அவன் விலா எழும்பிலிந்து பெண் படைக்கப்பட்டாள்.
6. ஆகையால் ஆணும் பெண்ணும் அன்பில் வாழ அழைக்கப்படுகிறார்கள்.
7. ஆண், பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து தமது மாண்பினை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**128.** படைப்பு படைக்கப்பட்டதை படைப்பு வரலாற்றின் ஒழுங்கு முறையில் தருக.

| நாள் | படைப்பு |
|---|---|
| 1ம் நாள் | ஒளி – பகல், இரவு |
| 2ம் நாள் | விண்ணுலகு, மண்ணுலகு |
| 3ம் நாள் | புற்பூண்டு, செடி, மரம் |
| 4ம் நாள் | சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் |
| 5ம் நாள் | புறவைகள், நீரில் வாழ்பவை, பாம்புகள் |
| 6ம் நாள் | கால்நடைகள், ஊர்வன, காட்டு விலங்குகள், மனிதன் |
| 7ம் நாள் | ஓய்வு நாள் |

MRS.N.STELLA (B.A(HONS)

**129.** இறைவன் பெண் படைத்து மனிதனிடம் அழைத்து வந்த போது மனிதன் என்ன கூறினார்?

"இதோ இவளே என் எலும்பின் எழும்பும் சதையின் சதையும் ஆனவள், ஆண்டவரிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவால்" என்றார்.

**130.** இறைவனால் படைக்கப்பட்ட படைப்புக்களுக்கு பெயரிட்டது யார்?

ஆதாம் ஏவாள்

**131.** மனிதன் யாருடைய சாயலாக படைக்கப்பட்டான்?

இறைவனுடைய

**132.** இறைவனால் படைக்கப்பட்ட படைப்புக்களில் மனித படைப்பு ஏன் மேன்மையடைந்துள்ளது?

மனிதன் இறை சாயலை கொண்டிருப்பதால்

**133.** ஏதேன் தோட்டம்" எதை குறிக்கின்றது?

மனிதனின் இணையில்லா அருள் நிலையை

**134.** உலகப் படைப்பைப் பற்றிய கோட்பாடுகள் எவை?

1. பரிணாம வாதக் கொள்கை
2. பிக்பானட் கொள்கை
3. லாப்லாஸ் கொள்கை

## பாடம் - 06

## பாவம்

**135.** பாவம் என்றால் என்ன?

இறைவனின் சொல்லை, விருப்பத்தை மீறுவது பாவமாகும்.

**136.** பாவத்திற்கு காரணம் யாது?

ஆசை

**137.** ஆதிப் பெற்றோர் யார்?

ஆதாம், ஏவாள்

**138.** ஆதாம், ஏவாளுக்கு இறைவன் கொடுத்த கட்டளை என்ன?

தோட்டத்தில் இருக்கும் மரஙங்களின் பழங்களை உண்ணலாம், ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை உண்ணக்கூடாது. ஆதை தொடவும் கூடாது மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று சொன்னார்.

**139.** விவிலியத்தில் பாம்பு என்னவாறு உருவகிக்கப்படுகின்றது?

சாத்தானாக

**140.** பாம்பு ஆதாம் ஏவாளுக்கு கூறியது யாது?

நீங்கள் சாகமாட்டீர்கள் ஏனெனில் அதை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் நீங்கள் கடவுளைப் போல நன்மை தீமை அறிவீர்கள்.

**141.** ஏவாள் நன்மை, தீமை அறியும் மரத்தின் கனியை உண்டதற்கு கூறிய காரணம் யாது?

1. அந்த மரத்தின் கனி உண்பதற்கு சுவையானது.
2. கண்களுக்கு களிப்பூட்டுவது
3. அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது.

**142.** ஆசைக்கு அடிமைப்பட்டு எடுக்கும் முடிவு எவ்வாறானது?

தவறானது

**143.** நாம் தீர்மானம் எடுக்கும் போது எதற்கு செவிசாய்க்கின்றோம்?

எமது மனச்சான்றுக்கு

MRS.N.STELLA (B.A (HONS)

**144.** வாழ்வளிக்கும் மரம் எதைக் குறிக்கின்றது?
சாகா வரத்தை

**145.** இன்பவனம் எதைக் குறிக்கின்றது?
அமைதியான, மகிழ்ச்சியான எக்குறையுமில்லாத, நிறைவான வாழ்வைக் குறிக்கின்றது.

**146.** இறைவன் ஆதாமிடம் வினாவியது என்ன?
"நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக் கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?

**147.** இறைவனின் கேள்விக்கு ஆதாம் அளித்த பதில் யாது?
என்னுடன் இருக்கும் படி நீர் தந்த அந்தப் பெண் மரத்தின் கனியை எடுத்துக் கொடுத்தாள் நானும் உண்டேன் என்றாள்.

**148.** இறைவன் பெண்ணிடம் நீ ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்க பெண் அளித்த பதில் என்ன?
பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்.

**149.** ஆதாம் ஏவாள் ஆடையின்றி இருப்பதாக கூறினார். இங்கு "ஆடையின்றி" என்ற சொல் குறிப்பது?
பாவ நிலையை உணருவதை

**150.** பாவத்தில் விழுந்த மனிதனுக்கு கடவுள் கொடுத்த தண்டனை யாது?

**ஏவாளுக்கு**

1. உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்.
2. வேதனையில் நீ குழந்தையைப் பெறுவாய்.
3. உன் கணவனின் மேல் வேட்கை கொள்வாய் அவனோ என்னை ஆள்வான்

**ஆதாமுக்கு**

1. உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது.
2. உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து உண்பாய்.
3. முட்செடியையும் முட்புதரையும் உனக்கு முளைப்பிக்கும்.
4. வயல் வெளிப் பயிர்களை நீ உண்பாய்.
5. நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் மண்ணுக்கே திரும்புவாய்.

**151.** பெண்ணைப் பாவம் செய்ய தூண்டிய பாம்புக்கு இறைவன் கொடுத்த தண்டனை யாது?

**பாம்புக்கு**

1. கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய்.
2. வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியை உண்பாய்.
3. உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்.

**152.** இறைவன் ஆதாம் ஏவாளுக்கு ஏன் தண்டனை கொடுத்தார்?
அவர்கள் மேல் கொண்ட அன்பினால்

**153.** "உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய்" என்பதன் ஊடாக இறைவன் கூற விளைவது?
மெசியாவினால் நிறைவேற்றப்படவுள்ள மீட்பை

MRS.N.STELLA (B.A (HONS))

154. “உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய்” என்பதல் **வித்து** எனக் குறிக்கப்படுவது யாரை?

இயேசுவை

155. ஆதாம் ஏவாள் கதை மூலம் இறைவன் உணர்த்த விரும்புவது?

1. பாவம்
2. தண்டனை
3. இறைவனுக்கு உரியவர்

156. ஆதாம் ஏவாளுக்கு இறைவனின் இரக்கமும் உண்டு என்பதை உணர்ந்தார்கள்?

1. அவர்களுக்கு தோல் ஆடை செய்து கொடுத்ததன் மூலம்.
2. மேசியாவை அனுப்புவதாக வாக்களித்ததிலிருந்து.

157. பாம்பு பெண்ணிடம் வினாவியது என்ன?

கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக் கூடாது என்றது உண்மையா?

158. ஏவாள் கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனமைக்கு காரணம் யாது?

கடவுளைப் போல் ஆக ஆசைப்பட்டதால்

159. நாம் நேரிய வழியில் வாழ எமக்கு வழிகாட்டுபவர்கள் யார்?

1. எமது மனச்சான்று
2. பெற்றோர்
3. பெரியோர்
4. ஆசிரியர்கள்
5. சமயத்தலைவர்கள்

160. ஆதிப் பெற்றோரின் பிள்ளைகள் யார்?

1. காயின் 2. ஆபேல்

161. காயினின் தொழில் யாது?

வேளாண்மை செய்தல்

162. ஆபேலின் தொழில் யாது?

மந்தை மேய்த்தல்

163. இறைவன் யாருடைய காணிக்கையை ஏற்றுக் கொண்டார்?

ஆபேலின்

164. ஏன் காயின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை?

காயின் நினைத்து கொண்டது போல் விளைச்சலில் நல்லதை இறைவனுக்கு காணிக்கையாகக் கொடுக்கவில்லை.

165. இறைவன் காயினின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளாததால் காயின் என்ன செய்தார்?

ஆபேல் மீது எரிச்சல் கொண்டு ஆபேலைக் கொலை செய்தான்

166. ஆண்டவர் காயினிடம் என்ன கேட்டார்?

உன் சகோதரன் ஆபேல் எங்கே?

167. ஆண்டவர் வினாவியதற்கு காயின் அளித்த பதல் யாது?

எனக்கு தெரியாது நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியோ?

168. காயின் ஆபேலை கொலை செய்ததால் இறைவன் காயினுக்கு கொடுத்த தண்டனை யாது?

1. நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.
2. நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்கு பலன்தராது.
3. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய் என்றார்.

MRS.N.STELLA (B.A (HONS)

**169.** காயினைக் கொல்பவன் எத்தனை மடங்கு பழி சுமப்பான்?
ஏழு முறை

**170.** காயின் ஆபேல் கதை மூலம் இறைவன் எமக்கு கற்பிப்பது யாது?
1. பாவம் செய்தால் தண்டனை உண்டு.
2. பாவத்தின் விளைவாகவே கோபம், வஞ்சகம்,பொறாமை, கொலை என்பன சமூகத்தில் தோன்றின.

**171.** நோவானின் தந்தையின் பெயர் யாது?
இலாமேக்

**172.** "நோவா" என்பதன் பொருள் யாது?
"ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும் உழைப்பிலும் நமக்கு ஆறுதல் அளிப்பான்"

**173.** நோவாவின் பிள்ளைகள் பெயர்?
1. சேம் 2. காம் 3. எப்பேத்து

**174.** நோவாவின் குணப் பண்புகள் எவை?
1. நீதிமான்
2. குற்றமற்றவர்
3. இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்.

**175.** நோவாவின் கால மக்களின் குற்ற செயல்களை கண்டு இறைவன் கூறியது யாது?
நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர் முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன். வானுலகின் கீழுள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்காக மண்ணுலகின் மேல் வெள்ளப் பெருக்கு வரச் செய்வேன். முண்ணுலகில் உள்ளவை எல்லாம் மடிந்து போகும்.

**176.** நோவா பேழை செய்யப் பயன்படுத்திய மரம் எது?
கோபர் மரம்

**177.** இறைவன் நோவா அமைத்த பேழையினுள் எத்தனை சோடி பிராணிகளை வைக்கச் சொன்னார்?
இரண்டு சோடி

**178.** வெள்ளப் பெருக்கு கதை எழுதப்பட்ட மரபுகள் எவை?
யாவே, குரு

**179.** வெள்ளம் எத்தனை நாட்களாக நின்றது?
150 நாட்களாக

**180.** நோவா வெள்ளம் வற்றி விட்டதை அறிய முதலில் எதை அனுப்பினார்?
காகத்தை

**181.** நோவா வெள்ளம் வற்றி விட்டதை அறிய இறுதியாக எதை அனுப்பினார்?
புறாவை

**182.** வெள்ளம்வற்றிவிட்டது என்பதை காட்ட புறா கொண்டு வந்தது என்ன?
ஒலிவ இலையை

**183.** இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?
சதையிலுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது, மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வராது.

MRS.N.STELLA (B.A (HONS)

**184.** இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக கொடுக்கப்பட்டது என்ன?

வானவில்

**185.** நோவாவின் நேர்மையான செயலால் அவரும் அவரது குடும்பமும் காப்பாற்றப்பட்டது போல் நீர் செய்யும் நல்ல செயலால் யாது விளையும்?

1. எனக்கு தனிப்பட்ட முறையில் நன்மையை நற்பெயரைத் தரும்.
2. எனது குடும்பத்திற்கு நன்மையை நல்ல பெயரைத் தரும்.
3. எனது சமூகத்திற்கு நன்மையை நல்ல பெயரைத் தரும்.
4. எனது நாட்டிற்குநன்மையை நல்ல பெயரைத் தரும்.
5. இறைவனின் ஆசீரைப் பெற்றுத் தரும்.

**186.** நோவாவைப் போன்று நீதிமானாக வாழ, உமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் 5 தருக?

1. நேர்மை உள்ளவராக வாழுதல்.
2. இறைவனோடு நல்லுறவை வளர்த்துக் கொள்ளல்.
3. கடமைகளை பொறுப்புடன் செய்தல்.
4. தேவையுடையோருக்கு உதவுதல்.
5. பெரியோர் சொற்படி நடத்தல்.
6. குற்றமற்றவராக இருத்தல்.

**187.** வெள்ளப் பெருக்கின் நோக்கம் யாது?

பாவத்தை இவ்வுலகில் இருந்து அகற்றுதல்.

**188.** வெள்ளப் பெருக்கு நிகழ்வின் மூலம் விவிலிய ஆசிரியர் எதை உணர்த்த விளைகின்றார்?

புதிய தொரு யுகம் ஆரம்பிக்கப்பட்டதை உணர்த்துகிறார்.

**189.** வெள்ளப் பெருக்குக்குக் காரணம் யாது?

மனிதனின் பாவம்

## பாடம் 07

## விடுதலைப்பயணம்

**190.** குலமுதுவர் என்ற பதம் எதை குறிக்கின்றது?

ஒரு இனத்தின், குலத்தின் தந்தையைக் குறிக்கின்றது.

**191.** குலமுதுவர்களுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர் யாது?

பிதாப்பிதாக்கள்

**192.** குலமுதுவர்கள் யாவர்?

1. ஆபிரகாம் 2. ஈசாக் 3. யாக்கோபு

**193.** ஆபிரகாமை இறைவன் அழைத்து கூறியது யாது?

நீ உன் நாட்டை விட்டும் இனத்தை விட்டும் புறப்பட்டு நான் காட்டும் நாட்டிற்குப் போ"

**194.** ஆபிரகாமிற்கு இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் எவை?

1. உன் சந்ததியை பெருகச் செய்வேன்.
2. உனக்கு ஒரு நாட்டைத் தருவேன்.
3. உன் பொருட்டு உன் இனம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்.

MRS.N.STELLA ( B.A ( HONS)

**195.** பாரவோன் மன்னன் காலத்தில் எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த துன்பங்கள் எவை?

1. சாந்து வேலைகள்
2. வயல்வெளி வேலைகள
3. புதிய நகரங்களைக் கட்டுவித்தல்

**196.** இஸ்ராயேலர் எகிப்தில் காட்டிய இரு நகரங்கள் எவை?

1. பித்தோம் 2. இராம்சேசு

**197.** இஸ்ராயேல் மக்களின் ஆண்குழந்தைகளை கொல்ல நியமிக்கப்பட்ட தாதியர் யார்?

1. சிப்ரா 2. பூவா

**198.** இஸ்ராயேல் இனம் பெருகுவதை தடுக்க மன்னன் கையாண்ட வழிமுறைகள் எவை?

1. கடுமையான வேலைகள்
2. ஆண்குழந்தைகளைக் கொல்லுதல்
3. பிறக்கும் போது கொல்லத் தவறிய ஆண்குழந்தைகளை நைல்நதியில் எறிதல்.

**199.** "மோசே" என்பதன் பொருள்?

நீரில் இருந்து எடுத்ததல்

**200.** மோயீசன் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

லேவி இனத்தை

**201.** மோயீசனை பெற்றோர் எத்தனை மாதம் வரை மறைத்து வைத்தனர்?

3 மாதம்

**202.** மோயீசனின் பெற்றோர் மோயீசனை எந்த நதியில் விட்டனர்?

நைல் நதியில்

**203.** மோயீசனை நைல் நதியில் விட்டபோது அவரை பேழை ஒன்றினுள் வைத்து விட்டனர் அந்த பேழை செய்யப்பட்ட புல் எது?

கோரைப் புல்

**204.** மோயீசனின் தொழில் யாது?

ஆட்டு மந்தை மேய்த்தல்

**205.** மோயீசனுக்கு இறைவன் என்ன வடிவில் காட்சி கொடுத்தார்?

எரியும் முட்செடி வடிவில்

**206.** எரியும் முட்செடி வடிவில் இறைவன் "மோசே மோசே" என அழைத்த போது அவர் அளித்த பதில் யாது?

இதோ நான்

**207.** "இங்கே அணுகி வராதே உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றி விடு, ஏனெனில் இது பரிசுத்த பூமி என இறைவன் யாருக்கு கூறினார்?

மோயீசனுக்கு

**208.** இறைவன் மோயீசனுக்கு தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்தினார்?

"உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நானே"

**209.** மோயீசன் கடவுளிடம் "யார் உம்மை அனுப்பியது என இஸ்ராயேல் மக்கள் கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்" என்று கேட்க கடவுள் யாது கூறினார்?

இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே

MRS.N.STELLA (B.A (HONS)

**210.** மோயீசன் ஏன் இறைவனின் அழைப்பை ஏற்க மறுத்தார்?

1. எகிப்தியனைக் கொன்றதால் பார்வோனுக்குப் பயந்து.
2. தனக்கு திக்கு வாய் என்பதால்
3. மக்கள் தன்னை நம்பமாட்டார்கள் என்பதால்.

**211.** இறைவன் மோயீசனுக்கு எங்கு காட்சி கொடுத்தார்?
ஒரேபு மலையில்

**212.** இறைவன் மோயீசனுக்கு கொடுத்த வியத்தகு ஆற்றல் என்ன?
புதுமை செய்யும் ஆற்றல்

**213.** இறைவன் மோயீசனுக்கு துணையாகக் கொடுத்தது என்ன?

1. கோல்
2. அவரது சகோதரன் ஆரோன்

**214.** மோயீசனின் மனைவியின் பெயர் என்ன?
சிப்போராள்

**215.** மோயீசனுக்கு இறைவன் கொடுத்த அழைப்பு யாது?
இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்துச் செல்லுதல்.

**216.** இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு எது?
கானான்

**217.** கானான் நாட்டில் வாழும் இனத்தவவர் யார்?
1. கானானியர் 2. இத்தியர் 3. எமோரியர் 4. பெரிசியர் 5. இவ்வியர்
6. எபூசியர்

**218.** கானான் நாடு எப்படிப்பட்டது?
பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்த நாடு

**219.** இஸ்ராயேல் மக்களை பாரவோன் மன்ன் விடுதலை செய்யாத போது மனம் தளர்ந்த மோயீசனுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி யாது?
நான் உன்னோடு இருப்பேன்

**220.** எகிப்தில் நிகழ்ந்த 10 துன்பங்களும் எவை?

1. தண்ணீர் இரத்தமாதல்
2. தவளைப் பெருக்கம்
3. கொசுக்களின் பெருக்கம்
4. ஈக்களின் பெருக்கம்
5. கால்நடைகள் சாவு
6. கொப்பளங்கள் தோன்றுதல்
7. கல்மழை
8. வெட்டுக் கிளிகள் பரவுதல்
9. காரிருள்
10. தலைமகன் சாவு

**221.** பத்துக் கொள்ளை நோய்களில் முதலாவது கொள்ளை நோய் எது?
தண்ணீர் இரத்தமாதல்

**222.** பத்துக் கொள்ளை நோய்களில் இரண்டாவது கொள்ளை நோய் எது?
தவளைப் பெருக்கம்

**223.** பத்துக் கொள்ளை நோய்களில் மூன்றாவது கொள்ளை நோய் எது?
கொசுக்களின் பெருக்கம்

**224.** பத்துக் கொள்ளை நோய்களில் நாலாவது கொள்ளை நோய் எது?
ஈக்களின் பெருக்கம்

**225.** பத்துக் கொள்ளை நோய்களில் ஐந்தாவது கொள்ளை நோய் எது?
கால்நடைகள் சாவு

MRS.N.STELLA (B.A (HONS)

**226.** பத்துக் கொள்ளை நோய்களில் ஆறாவது கொள்ளை நோய் எது?
கொப்பளங்கள் தோன்றுதல்

**227.** பத்துக் கொள்ளை நோய்களில் ஏழாவது கொள்ளை நோய் எது?
கல்மழை

**228.** பத்துக் கொள்ளை நோய்களில் 8 வது கொள்ளை நோய் எது?
வெட்டுக் கிளிகள் பரவுதல்

**229.** பத்துக் கொள்ளை நோய்களில் 9 வது கொள்ளை நோய் எது?
காரிருள்

**230.** பத்துக் கொள்ளை நோய்களில் 10 வது கொள்ளை நோய் எது?
தலைமகன் சாவு

**231.** இஸ்ராயேல் மக்கள் இறை பராமரிப்பை உணர்ந்து கொண்ட சந்தர்ப்பங்கள்?
1. செங்கடலைக் கடத்தல் 2. நெருப்புத்தூண், மேகத்தூண் மூலம் வழிகாட்டல்
3. மாராவில் தண்ணீர் கிடைத்தல் 4. உணவிற்காக மன்னா, காடைகள் கிடைத்தல்
5. மாசா, பெரிபாவில் குடிக்க நீர் கிடைத்தல்

**232.** இஸ்ரயேல் மக்கள் தண்ணீரை பெற்றுக் கொண்ட எங்கே?
1. மாரா
2. மாசா, பெரிபா

**233.** அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியால் மிகவும் பிரபல்யமான அடிமை வேலையை நீக்குவதற்கான சட்டங்களை கொண்டு வந்தவர் யார்?
ஆபிரகாம் லிங்கன்

**234.** உமது வாழ்வில் இறைபராமரிப்பை உணர்ந்து கொண்ட சந்தர்ப்பங்கள் 5 தருக?
1. வன்னிப் போரின் மத்தியில்
2. வீதியில் போகும் போது ஏற்பட விருந்த விபத்தின் போது
3. இரவில் நித்திரையின் போது எதுவுமே நடக்காத நிலையில்
4. தனிமையில் வாடும் போது
5. கஸ்டத்தில் இருக்கும் போது

**235.** மன்னா என்ற எபிரேய சொல்லின் பொருள் யாது?
அப்பம்

**236.** ‘‘நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றது’’ எனக் கூறும் திருமுகம்?
யாக்கோபு

## பாடம் 08

## சீனாய் உடன்படிக்கை

**237.** உடன்படிக்கையின் என்பதன் பொருள் யாது?
இருநபர்களுக்கிடையே அல்லது இரு குழுக்களுக்கிடையே ஒரு விடயம் பற்றிய நிபந்தனையோடு சம்மதம் தெரிவித்தலே உடன்படிக்கை ஆகும்.

**238.** உடன்படிக்கையின் பண்புகள் எவை?
1. இருவர் அல்லது குழுக்கள் சம்மந்தப்பட்டது.
2. செய்யப்பட்ட உடன்படிக்கையை எச்சந்தர்ப்பத்திலும் மாற்ற முடியாது.

**239.** உடன்படிக்கைக்கும் ஒப்பந்தத்திற்கும் இடையேயான வேறுபாடு யாது?
உடன்படிக்கையை முறிக்க இயலாது ஆனால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவரில் அல்லது குழுக்களில் ஒருவர் விரும்பாவிடினும் அதில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

MRS.N.STELLA ( B.A (HONS)

**240.** பொது வாழ்வில் நாம் காணும் உடன்படிக்கைகள் எவை?

1. பொருளாதார உடன்படிக்கை
2. அரசியல் உடன்படிக்கை
3. சமாதானஉடன்படிக்கை.
4. திருமண உடன்படிக்கை.

**241.** சாதாரண உடன்படிக்கைக்கும் திருவிவிலியத்தில் காணப்படும் உடன்படிக்கைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

1. திருவிவிலிய உடன்படிக்கைக்கு முன் நிற்பவர் இறைவன்
2. இறைவனுக்கும்மனிதனுக்கும் இடையில் எல்லையற்ற இடைவெளி காணப்படுகின்றது.

.3. இறைவன் உடன்படிக்கைக்கு நம்பிக்கைக்கு உரியவராக இருந்த போதும் மனிதன் உடன்படிக்கையை மீறுபவனாக இருக்கின்றார்.

**242.** இறைவன் மனிதனுக்கு செய்து கொண்ட உடன்படிக்கை எவை?

1. இறைவன் - ஆதிப்பெற்றோர்
2. இறைவன் - நோவா
3. இறைவன் - ஆபிரகாம்

**243.** இறைவன் ஆதிப்பெற்றோருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கான காரணம் யாது?
ஆதிப்பெற்றோர் இறைவனுக்கு கீழ்ப்படியாமையால் அவரது கட்டளையை மீறி இறை உறவை இழந்தமையால்

**244.** இறைவன் ஆதிப் பெற்றோர் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?
பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்கான மீட்பரொருவரை அனுப்புவதாக உடன்படிக்கை செய்தார்.

**245.** இறைவன் நோவாவுடன் உடனடபடிக்கை செய்து கொண்டமைக்கான காரணத்தை தருக?
ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்குட்பட்ட மனிதன் பாவ நிலையில் படிப்படியாக வளர்ந்ததால் மனிதரை வெள்ளப்பெருக்கின் மூலம் அழிக்க நினைத்தமையால்

**246.** இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை விளக்குக?
சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வரவே வராது.

**247.** இறைவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்ய காரணம் யாது?
ஆதிப் பெற்றோருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவே (மெசியாவை அனுப்புவேன்)

**248.** இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை கூறும் மரபுகள் எவை?
1. – யாவே    2. – குரு

**249.** இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரதான காரணிகள் யாது?

1. பெரியதொரு சந்ததியைப் பெற்றுக் கொடுத்தல்.
2. எக்காலத்திற்கும் உரிமையான ஓர் நாட்டைப் பெற்றுக் கொடுத்தல்.

**250.** இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளம் யாது?
விருத்தசேதனம்

**251.** இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?
"நான் சொல்வதுபடி நீங்கள் நடந்தால் நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள்"
"ஆம் நீர் சொல்வதற்கும் கீழ்ப்படிவோம்"

MRS.N.STELLA (B.A (HONS))

**252.** இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளம் யாது?
பத்துக்கட்டளை

**253.** இஸ்ராயேல் மக்களது வாழ்வில் மிக முக்கியமாக விளங்குவது எது?
சீனாய் உடன்படிக்கை

**254.** இறைவன் பத்துக்கட்டளையை யாரிடம் கொடுத்தார்?
மோயீசனிடம்

**255.** மோயீசன் பத்துக்கட்டளைளை எங்கு கொடுத்தார்?
சீனாய் மலையில்

**256.** மோயீசன் பத்துக்கட்டளை எத்தனை கற்பனைகளில் வாங்கி வந்தார்?
இரண்டு (2)

**257.** பத்துக்கட்டளைகளும் எவை?

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர் என்னைத் தவிர வேறு கடவுள் உனக்கு இருத்தல் ஆகாது
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.
3. ஓய்வு நாளைத் தூய்மையாகக் கடைப்பிடி.
4. உன் தந்தை, தாயை மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே.
8. பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.
10. பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

**258.** பத்துக் கட்டளைகளில் இறைவன் மட்டில் நமது கடமைகளை கூறும் கட்டளைகள் எத்தனை?
03

**259.** பத்துக்கட்டளைகளில் அயலவர் மீது நமது கடமைகள் கூறும் கடமைகள் கூறும் கட்டளைகள் எத்தனை?

**07**

**260.** திருமுழுக்கு வார்த்தைப்பாடுகள் எவை?

1. இறைவனில் நம்பிக்கை வைக்கிறேன்.
2. சாத்தானையும் அதன் செயல்களையும் விட்டு விடுகிறேன்.

**261.** இறைவன் ஆதிப்பெற்றோருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வாக்குறுதி யாது?
"உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும் நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்"

**262.** இறைவன் ஆபிரகாமுடன் **J** மரபில் செய்து கொண்ட உடன்படிக்கையின் வாக்குறுதி யாது?

1. அப்பொழுது ஆண்டவர் ஆபிரகாமை வெளியே அழைத்து வந்து "வானத்தை நிமிர்ந்து பார் முடியுமானால் விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்"
2. "எமோரியர், கானானியர், கிரக்காகியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை உன் வழி மரபினரக்கு வழங்குவேன்.

MRS.N.STELLA (B.A (HONS))

**263.** இறைவன் ஆபிரகாமுடன் P மரபில் செய்து கொண்ட உடன்படிக்கையின் வாக்குறுதி யாது?

1. மிகப்பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன், உன்னிடமிருந்து நாடுகளை உருவாக்குவேன், உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவார்கள்.

2. நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப் பின் உன்வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்.

## பாடம் 09

## தூய திருமுழுக்கு யோவான்

**264.** திருமுழுக்கு யோவானின் தந்தையின் பெயர் யாது?

செக்கரியா – எலிசபேத்

**265.** திருமுழுக்கு யோவானின் பிறப்பு யார் மூலம் செக்கரியாவுக்கு அறிவிக்கப்பட்டது?

கபிரியேல் வானதூதர் மூலம்

"செக்கரியா அஞ்சாதீர் உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபேத் உமக்கு ஒரு மகனை பெற்றெடுப்பார் அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர்.

**266.** பழைய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானைப்பற்றி முன்னறிவிக்கப்பட்டது என்ன?

இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்.

**267.** எசாயா இறைவாக்கினர் திருமுழுக்கு யோவான் பற்றி கூறியது யாது?

பாலைவனத்தில் கேட்கும் கூக்குரல் இவரே.

**268.** திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு எத்தனை மாதத்தால் மூத்தவர்?

6 மாதத்தால்

**269.** திருமுழுக்கு யோவானின் பணி யாது?

இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்வது.

**270.** புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானின் பணி எவ்வாறு முன்னறிவிக்கப்படுகின்றது?

"அவர் இஸ்ராயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார்.

**271.** செக்கரியா இறை செய்தியை நம்பாததால் எவ்வாறு தண்டிக்கப்பட்டார்?

"இதோ பாரும் உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர் உம்மால் பேசவே இயலாது என்றார்.

**272.** செக்கரியாவும் எலிசபெத்தும் வயதானவர்களாயிருந்தும் அவர்கள் வழியாக திருமுழுக்கு யோவானைப் பிறக்கச் செய்ததன் மூலம் வெளிப்படுத்தப்படும் செய்தி யாது?

இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை.

MRS.N.STELLA (BA (HONS))

**273.** கபிரியேல் வானதூதர் செக்கரியாவுக்கு திருமுழுக்கு யோவானின் பிறப்பு பற்றி அறிவித்தபோது அவரைப் பற்றி கூறியது யாது?

1. அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார்.
2. திராட்சை மதுவோ வேறு மதுவோ அருந்தமாட்டார்.
3. தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார்.

**274.** புனித மரியாள் எலிசபெத்தைவாழ்த்திய நேரம் என்ன நடந்தது?

எலிசபேத்தின் வயிற்றில் இருந்த குழந்தை அக்களிப்பால் துள்ளியது. இவ்வாழ்த்துரையால் அக்குழந்தை சென்மபாவத்திலிருந்து நீக்கப்பட்டார்.

**275.** யூதரின் முறைப்படி ஆண் குழந்தை பிறந்து எத்தனையாம் நாள் விருத்த சேதனம் கொடுப்பார்கள்?

8ம் நாள்

**276.** திருமுழுக்கு யோவானின் போதனைப்படி மன்னிப்பு பெற என்ன செய்ய வேண்டும்?

பாவங்களுக்கு மனம் வருந்தி மன்னிப்புப் பெற வெண்டும்.

**277.** "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்ற கூற்றோடு தொடர்புடையவர்கள்?

மக்கள் கூட்டத்தினர் - திருமுழுக்கு யோவான்

**278.** திருமுழுக்கு யோவான் மக்களுக்கு திருமுழுக்கு எங்கு கொடுத்தார்?

யோர்தான் நதிக்கரையில்

**279.** திருமுழுக்கு யோவான் மக்களுக்கு கூறிய அறிவுரை யாது?

1. இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்
2. உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.

**280.** திருமுழுக்கு யோவான் வரிதண்டுபவர்களுக்கு கூறிய அறிவுரை யாது?

உங்களுக்கு குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்

**281.** திருமுழுக்கு யோவான் படைவீரருக்கு கூறிய அறிவுரை யாது?

1. நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள், யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள்
2. உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்.

**282.** திருமுழுக்கு யோவான் மக்களுக்கு வரிதண்டுபவர்களுக்கு படைவீரர்களுக்கு கூறிய அறிவுரை இன்று எமக்கு எவ்விதம் பொருந்தும்?

1. நாம் எமது தேவைக்குரியதை கூட பகிர்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.
2. நீதியான தொழிலில் ஈடுபட வேண்டும். நாட்டு மக்களின் நலன் கருதி நேர்மையான முறையில் கடமைகளை நிறைவேற்றுதல்
3. ஊதியத்திற்கு ஏற்று சேவை செய்தல். மனித நேயம் பொது நன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு நாட்டின் நன்மைக்காக நீதியோடு உழைக்க வேண்டும்.

**283.** திழுமுழுக்கு யோவானின் போதனையில் அடங்கும் முக்கிய அம்சங்கள் எவை?

நீதி, சமத்துவம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு, இரக்கம்

MRS.NSTELLA (B.A (HONS)

**284.** திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் பிரதான இரு காலங்களும் எவை?

1. திருவருகைக் காலம்
2. தபக்காலம்

**285.** திருமுழுக்கு யோவானின் மரணத்திற்கு காரணம்?

கலிலேயாவின் குறுநில மன்னன் ஏரோது தனது சகோதரனின் மனைவியை தன்னோடு வைத்திருந்ததனை பகிரங்கமாக சுட்டிக் காட்டிக் கொண்டதாகும்.

**286.** திருமுழுக்கு யோவான் எவ்வாறு இறந்தார்?

தலை வெட்டுண்டு

**287.** திருமுழுக்கு யோவான் இறந்த பின் அவரது உடலை யார் அடக்கம் செய்தனர்?

திருமுழுக்கு யோவானின் சீடர்கள்

**376. யாரால் யாருக்கு**

1. "பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசீர் பெற்றதே"

யாரால் - எலிசபேத்தால்

யாருக்கு – மரியாளுக்கு

2. பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்கு பெறுங்கள்

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு – மக்களுக்கு

3."விரியன் பாம்புக் குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களுக்கு சொன்னவர் யார்"?

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு – மக்களுக்கு

4. "ஏற்கனவே மக்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று நற்கனி கெடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்."

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு – மக்களுக்கு

5. "நான் தண்ணீரினால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுக்கின்றேன் ஆனால் என்னைவிட வலிமை மிக்கவர் ஒருவர் வருகின்றார். அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக் கூட எனக்கு தகுதி இல்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுப்பார்".

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு – மக்களுக்கு

6. "இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன், அது போல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே"

யாரால் - செக்கரியாவால்

யாருக்கு – வானதூதருக்கு

7. "வரவிருப்பவர் நீர் தாமே? ஆல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா"?

யாரால் - திருமுழுக்கு யோவானின் சீடரால்

யாருக்கு - இயேசுவுக்கு

MRS.N.STELLA (B.A (HONS))

8. "நீங்கள் கண்டதையும் கேட்டதையும் யோவானிடம் போய் அறிவியுங்கள்"

யாரால் - இயேசுவால்

யாருக்கு –யோவானின் சீடர்களுக்கு

9. "நான் தான் உம்மிடம் திருமுழுக்கு பெற வேண்டியவன் நீரா என்னிடம் வருகிறீர்"

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு - இயேசுவுக்கு

10. "இவர் தான் கடவுளின் செம்மறி உலகின் பாவங்களைப் போக்குபவர்"

யாரால் - திருமுழுக்கு யோவானால்

யாருக்கு - இயேசுவைச் சுட்டிக்காட்டி

**377.** இயேசு திருமுழுக்கு யோவான் பற்றி கூறியது?

1. அவர் காற்றில் அசையும் நானல் புல்லைப் போல் எதிர்ப்புக்கள் முன் மனம் தளர்ந்து பணிந்து விட்டுக் கொடுப்பவர் அல்லர்.
2. தம் பணிக்கு இறுதி மட்டும் பிரமாணிக்கமாய் இருந்து சிறைவாசத்தையும் ஏற்றுக் கொள்ள தயங்காத துணிவுள்ள இறைவாக்கினர்.
3. முற்றும் துணிந்த முனிவர்.

**378.** திருமுழுக்கு யோவான் போன்று இன்றும் நீதி சமத்துவத்திற்கு தம் உயிரை தியாகம் செய்தவர்கள்?

1. அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார்.
2. அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார்.

**379.** திருமுழுக்கு யோவானின் மரணம்.

கலிலேயாவின் குறநில மன்னன் ஏரோது தனது சகோதரனின் மனைவியைத் தன்னோடு வைத்திருந்தான். இதை திருமுழுக்கு யோவான் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி கடிந்து கொண்டார். இதனால் ஏரோது அவரைக் கொல்ல வழி தேடினான். ஏரோதின் பிறந்த நாள் வந்தது. ஏரோதியாளின் மகள் நடனமாடி ஏரோதை மகிழச் செய்தாள். அதனால் ஏரோது எதை வேண்டுமானாலும் கேட்கும் படி மகளிடம் கூறினான். சந்தர்ப்பம் பார்த்திருந்த ஏரோதியாள் திருமுழுக்கு யோவானின் தலையை தரும்படி கேட்கும் படி மகளைத் தூண்டினால். மகளும் திருமுழுக்கு யோவானின் தலையை கேட்டாள், அரசன் வருந்தினான். ஆனாலும் தன் விருந்தினர் முன் ஆணையிட்டதால் கேட்டபடி தலை வெட்டிக் கொடுத்தான். பின் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் வந்து அவரது உடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர்.

## பாடம் 10

## இயேசுவின் இறையாட்சிப் பணி

**380.** இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்?

திருமுழுக்கு யோவானிடம்

**381.** மூவொரு கடவுளின் வெளிப்பாடு இடம்பெறும் சந்தர்ப்பம் எது?

இயேசுவின் திருமுழுக்கு

**382.** இயேசுவின் திருமுழுக்கின் போது ஆவியானவர் என்ன வடிவில் தோன்றினார்?

புறாவடிவில்

**383.** இயேசு இறைமகன் என்பதை அவரது திருமுழுக்கு எவ்வாறு எடுத்துக் காட்டுகிறது?

''என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்ற குரலொலி வழியாக



MRS.N.STELLA (B.A (HONS))

**384.** இயேசு திருமுழுக்கு பெற்ற பின் எங்கு சென்றார்?
பாலைவனத்திற்கு

**385.** இயேசு அலகையினால் எத்தனை நாள் சோதிக்கப்பட்டார்?
40 நாட்கள்

**386.** கிறிஸ்தவர்களுக்கு மனஸ்தாபத்தின் காலம் (தவக்காலம்) எப்போது ஆரம்பிக்கிறது?
விபுதிப் புதனோடு

**387.** இயேசு எத்தனை முறை சோதிக்கப்பட்டார்?
3 முறை

**388.** இயேசு முதல் முறை அலகையினால் சோதிக்கப்பட்டதையும் அதற்கு இயேசு அளித்த் அலகை நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும் படி கட்டளையிடும் இயேசு மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை.

**389.** இயேசுவின் முதலாவது சோதனையின் மூலம் நமக்கு தரும் செய்தி யாது?

1. தமக்குள்ள அதிகாரத்தையும், ஆற்றல்களையும் தன்னலம் இன்றிச் சமுதாய நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

2. உணவினால் ஊட்டம் பெறும் உடல்சார் வாழ்க்கைக்கு மேலாக இறைவார்த்தையினால் ஊட்டம் பெறும் ஆன்மீக வாழ்வு மேலானதாகும்.

**390.** இயேசு இரண்டாவது முறை அலகையினால் சோதிக்கப்பட்டதை அதற்கு இயேசு அளித்த் பதில் யாது?

அலகை "நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்".

இயேசு உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக.

**391.** இயேசுவின் இரண்டாவது சோதனையில் நமக்கு தரும் செய்தி யாது?
எமது வாழ்வில் இறைவனுக்குரிய இடத்தை உலக சொத்துக்கும் அதிகாரத்திற்கும் கொடுக்கக் கூடாது.

**392.** இயேசு மூன்றாம் முறை சோதிக்கப்பட்டதை அதற்கு இயேசு அளித்த பதில்?

"நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் உம்மைப் பாதுகாக்கும் படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக்குறித்து கட்டளையிவார். ஏன்றும் உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது".

இயேசுவின் பதிலாக "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளதே"

**393.** இயேசுவின் மூன்றாவது சோதனை எமக்கு தரும் செய்தி என்ன?
புகழை விரும்பி செயற்படக் கூடாது.

**394.** இயேசு தமது ஊரிலுள்ள தொழுகைக் கூடத்திற்கு சென்றபோது அவரிடம் கொடுக்கப்பட்ட ஏட்டுச் சுருள் பகுதிஎது?

எசாயா இறைவாக்கினர் எழுதிய ஏட்டுச் சுருள் பகுதி "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.

**395.** எலியா இறைவாக்கினருக்கு உதவி செய்த பெண்மணி யார்?
சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்

**396.** எலிசாவின் காலத்தில் தொழுநோயால் பலர் பாதிக்கப்பட்டனர் அவர்களுள் குணமடைந்தவர் யார்?

சீரியாவைச் சேர்ந்த நாமான்

**397. யாரால் யாருக்கு**

இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படவதில்லை.

யாரால் - இயேசுவால்

யாருக்கு – தொழுகைக் கூடத்தில் இருந்தவர்களுக்கு

**398.** இயேசுவின் பணியின் நோக்கம் யாது?

ஏழைகள், அடிமைகள், துன்புறுவோர், பார்வையற்றோர் ஒடுக்கப்பட்டோருக்கு நல்வாழ்வை பெற்றுக் கொடுப்பதே.

**399.** புதுமை என்றால் என்ன?

இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு

**400.** இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு புதுமை எனக் கூறியவர்?

புனித அகுஸ்தீனார்.

**401.** இயேசு செய்த புதுமைகளை எத்தனை வகைப்படுத்தலாம்?

**04**

1. நோய்களைக் குணமாக்குதல்
2. அசுத்த ஆவிகளை விரட்டுதல்
3. இயற்கையோடு தொடர்பான புதுமைகள்
4. இறந்தோரை உயிர்ப்பித்தல்

**401. இயேசு செய்த புதுமைகளை குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணம் தருக.**

**1. நோய்களைக் குணமாக்குதல்**

உம் - 1. கைசூம்பியவர் ஓய்வு நாளில் நலமடைதல்

2. முடக்குவாதமுற்றவர் குணமடைதல் (லூ 5:17-26)
3. தொழுநோயாளரின் நோய் நீங்குதல் (லூ 5:12-16)
4. இரத்தப்போக்குடைய பெண் நலம் அடைதல் (லூ 8:40-56)

2. **அசுத்த ஆவிகளை விரட்டுதல்**

உ +ம் - 1. கெரசேனர் பகுதியில் பேய் பிடித்தவரை குணமாக்குதல் (மாற் 5:1-20)

2. பேய் பிடித்தவரை குணப்படத்தல் (மாற் 1:21-28)
3. இயேசுவும் பெயல் செபூலும் (மத் 12:12-32)
4. பேய் பிடித்திருந்த சிறுவனைக் குணமாக்குதல் (மத் 17:14-21)

3. **இயற்கையோடு தொடர்பான புதுமைகள்**

உ +ம் - 1. கடல் மீது நடத்தல் (மத் 14:22-31)

2. காற்றையும் நீர் கொந்தளிப்பையும் அடக்குதல் (லூ 8:22-25)

4. **இறந்தோரை உயிர்ப்பித்தல்**

உ +ம் - 1. இலாசர் உயிர் பெறுதல் ( யோ 11:14-38)

2. சிறுமி உயிர் பெறல் (மத் 9:18-26)
3. நயீன் ஊர் கைம்பெண் மகள் உயிர் பெறல் (லூ 07:11-17)

MRS.N.STELLA (B.A (HONS)

**402.** இயேசு செய்த புதுமைகள் இயேசுவை யார் என எண்பித்துக் காட்டுகின்றன?

1. இயேசு மெசியா இறைவனின் மகன் என்பதை எண்பித்துக் காட்டகின்றது.
2. இறைவன் மனிதனுக்கு காட்டும் அளவற்ற அன்பை விளக்குகின்றது.
3. இறைவன் தான் யார் என்பதை வெளிப்படுத்துகின்றார்.
4. இயேசுவின் மறைதூதுப் பணி உறுதிப்படத்தப்படகின்றது.
5. இறையாட்சியின் அடையாளமாக மிளிர்கின்றது.

**403.** இறையாட்சி வந்து விட்டது என்பதை எண்பிக்கும் அடையாளம் எது?

புதுமைகள்

**404.** **இறைவார்த்தை** – "நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகின்றேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்ததுள்ளது அல்லவா".

**405.** ''புதுமைகள் இடம் பெற நம்பிக்கை அவசியம்'' இதை எண்பிக்கும் சான்றுகள் எவை?

1. எரிக்கோவில் பார்வையற்ற இருவர் -

''இயேசுவே தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று கத்தினார். இயேசு அவர்களை பார்த்து உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்றார். (லூ 18:42)

2. முடக்குவாதமுற்றவர் குணமடைதல் -

''மகனே துணிவோடிரு உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.'' என்றார். (மத் 9:3)

3. இரத்தப் போக்குடைய பெண குணமடைதல் -

''நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும் நலம் பெறுவேன்'' என்றாள். அதற்கு இயேசு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று'' என்றார். (மத் 9:22)

4. தீய ஆவி பிடித்திருந்த கானானியப் பெண்ணின் மகள் குணமடைதல் -

''அம்மா உமது நம்பிக்கை பெரிது நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்'' என்றார்.

**406.** 72 சீடரை பணிக்கு அனுப்பும் செய்தி எந்த நற்செய்தியில் தரப்படுகின்றது?

லூக்காஸ்

**407.** இயேசு 72 சீடர்களை பணிக்கு அனுப்பிய போது கூறிய அறிவுரை யாது?

**1.** அறிவுரையோ மிகுதி வேலையாட்களோ குறைவு ஆகையால் தமது அறுவடைக்கு தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளிடம் மன்றாடுங்கள்.

**2.** ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம்.

**3**. வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம். நீங்கள் எந்த வீட்டிற்குள் சென்றாலும் இந்த வீட்டிற்கு அமைதி உண்டாகுக எனக் முதலில் கூறுங்கள்.

**4.** நீங்கள் அவர்கள் வீட்டில் உண்ட குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள் ஏனெனில் வேலையாளர் கூலிக்கு உரிமை உடையவர்.

MRS.N.STELLA ( B.A ( HONS)

5. வீடுவீடாய் செல்லவேண்டாம். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக் கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள் அங்கு உடல் நலம் குன்றியவர்களை குணமாக்கி இறையரசு நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்.

**408.** திருமுழுக்கின் மூலம் மறைபணிக்கு அழைக்கப்பட்ட நீர் மறைபணி ஆற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?

1. வீட்டில் என் முன்மாதிரிகையான வாழ்க்கை மூலம் மறைபணிக்கு உதவுவேன்.
2. சமூகத்தில் சிறுவர்களுக்கு மறைக் கல்வியைக் கற்பிப்பதன் மூலம்.
3. ஒவ்வொரு நாளும் திருப்பலி பங்கு கொண்ட மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக வாழ்வதன் மூலம்.
4. திருப்பாலத்துவ சபையில் இணைந்து மறையை கற்றுக் கொடுப்பதன் வழியாக.
5. ஆலயத் தொண்டுகளில் என்னை ஈடுபடுத்துவதன் வழியாக.

**409. மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ**

தென் அமெரிக்காவின் எல்சல்வடோர் நாட்டிலே மக்கள் 10 வருடங்களாக யுத்தத்தினால் துன்பப்பட்டனர். 1977. 02. 22 ல் பேராயர் ஒஸ்கார் நியமனம் பெற்றார். இவரில் ஆழ்ந்த பற்றுறிதியும், அன்பு, சுயகட்டுப்பாட்டு, தாழ்மை, நேர்மை போன்ற பண்புகள் காணப்பட்டன. இவர் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். நாட்டில் நிலவிய ஊழல் ஒழுங்கீனங்கள், பயங்கரம், அநியாயங்கள் என்பன பற்றி பகிரங்கமாக விமர்சனம் செய்தார். சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்த அவருடன் இணைந்து கொண்டனர்.
1980. 03. 24ம் திகதி வைத்திய சாலை ஒன்றில் இருந்த சிறு ஆலயத்தில் மறையுரை ஆற்றுகையில் நாம் நம்பிக்கையோடும் எதிர் நோக்கோடும் ஒன்று சேர்வோம் எனும் வார்த்தைகளை கூறிமுடிக்கையில் எதிரியின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இறைவனடி சேரந்தார்.

**410.** மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோவிடம் காணப்பட்ட நல்ல பண்புகள்?
1. அன்பு 2. சுயகட்டுப்பாடு 3. தாழ்மை 4. நேர்மை

**411.** மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ தென் அமெரிக்காவின் எல்சல்வடோர் நாட்டில் பணி செய்ய நியமிக்கப்பட்ட ஆண்டு?
1977

**412.** மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ இறந்த ஆண்டு?
1980

**413.** மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ எவ்வாறு இறந்தார்?
சுட்டுக் கொல்லப்பட்டார்

**414.** மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ இறக்கும் முன் கூறிய வார்த்தைகள்?
நாம் நம்பிக்கையோடும் எதிர் நோக்கோடும் ஒன்று சேர்வோம்.

## பாடம் 11

## இறையாட்சி

**408.** இறையாட்சி என்பது யாது?
இறை விருப்பத்திற்கு பணிவது

**409.** புனித அம்புறோசியார் இறையாட்சி பற்றிக் கூறியது யாது?
வாழ்வு என்பது கிறிஸ்துவோடு இருப்பதாகும் கிறிஸ்து எங்கு இருக்கிறாரோ அங்கு வாழ்வும் இறையாட்சியும் இருக்கும்.

MRS.N.STELLA (B.A(HONS))

**410.** உவமைகள் என்றால் என்ன?

அறிவற்ற பாமர மக்களுக்கு அரிய ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்கப்படும் இலக்கிய நடையாகும்.

**411.** உவமை என்பதை கிரேக்கத்தில் எவ்வாறு அழைப்பர்?

பராபோலே

**412.** இறையாட்சி பற்றிய உவமைகள் எவை?

1. விதைப்பவன் உவமை
2. வயலில் தோன்றிய களைகள் உவமை
3. கடுகு விதை,
4. புதையல் முத்து,
5. புளிப்பு மா உவமை
6. வலை உவமை

**413.** இறையாட்சிக்குள் நுழைய வேண்டமாயின் நாம் நிபந்தனைக்கு உட்பட்டிருக்க வேண்டம் அவ் நிபந்தனைகள் எவை?

1. மனம்மாற வேண்டும்.
2. நற்செய்தியை நம்ப வேண்டும்

**414.** விதைப்பவன் உவமையையும் பொருளையும் தருக?

| **விதைகள் விழுந்த நிலம்** | **விதைகளுக்கு நடந்தவை** | **உவமையின் விளக்கம்** |
|---|---|---|
| **வழியோரம் விழுந்த நிலம்** | பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன. | உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான். |
| **மண் இல்லாப் பாறைப் பகுதியில் விழுந்த விதைகள்** | அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. எனினும் கதிரவன் மேலே எழ காய்ந்து வேரில்லாமல் போனது. | வார்த்தையை கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ, இன்னலோ நேர்ந்தவுடனே தடுமாற்றம் அடைவார்கள். |
| **முட்செடிகளின் இடையே விழுந்த விதைகள்** | முட்செடிகள் வளர்ந்து நெருக்கி விட்டன. | இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வப் பற்றும் உள்ளவர்கள் இவ்வார்த்தையை |

MRS.N.STELLA (B.A (HONS)

| | | |
|---|---|---|
| | | நெருங்குவதால் பயன் அளிக்க மாட்டார்கள். |

**415**. வயலில் தோன்றிய களைகள் பற்றிய உவமையை தருக?

ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆட்கள் தூங்கும் போது பகைவன் வந்து களைகளை விதைத்துச் சென்றான். பயிர் வளர்ந்து கதிர் விட்ட போது "ஐயா உமது வயலில் நல்ல விதைகள் அல்லவா விதைத்தீர் அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்று கேட்டார்கள். இது பகைவனுடைய வேலை என்றார். உடனே பணியாளர்கள் அதனைப் பறித்துக் கொண்டு வரட்டுமா என்று கேட்டனர். வேண்டாம் நீர் களைகளை பறிக்கும் போது அதனுடன் கோதுமையையும் பிடுங்கி விடக் கூடும் அறுவடை மட்டும் இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் முதலில் களைகளைப் பிடுங்கி நெருப்பில் போடுங்கள் கோதுமைகளையோ பின் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று கூறுவேன் என்றார்.

**416.** வயலில் தோன்றிய களைகள் மூலம் எமக்குக் கற்றுத் தரும் பாடம் யாது?

1. இறையாட்சிக்குள் நுழைய முயற்சி எடுக்கும் போது பல துன்பங்கள் ஏற்படும் அவற்றை நாம் எதிர் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.
2. இவ்வுவமை இறுதி நாளில் நல்லவர்கள் வாழ்வுக்கும் தீயவர்கள் நரகத்திற்கும் அனுப்பப்படுவார்கள் என்பதை எமக்கு எடுத்துக் காட்டகின்றது.
3. இவ்வுலகில் வாழும் போது இறைவனுக்குரிய வாழ்வு வாழ வேண்டும் எனக் கற்பிக்கப்படுகின்றது.

**417.** விதைப்பவன உவமையில் உணர்த்தப்படும் உண்மைகள் எவை?

1. நல்ல விதைகளை விதைத்தவர் - இயேசு,
2. நல்ல விதைகள் - மக்கள்,
3. களைகள் - தீயவன்,
4. தீய களைகளை விதைத்தவன் - அலகை,
5. அறுவடை- உலக முடிவு,
6. அறுவடை செய்வோர் - வானதூதர்கள்.

**418.** கடுகு விதை பற்றிய உவமையை தருக?

ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும் விடச் சிறியது. ஆனாலும் அது வரும் போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். (12 அடி உயரமுள்ளது) வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் பெரிய மரமாகும்.

**419.** கடுகு விதை உவமையின் மூலம் நமக்கு கற்றுத் தரும் பாடம் யாது?

இயேசு என்ற ஒரு மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை, இன்று வளர்ந்து எலகெங்கும் படர்ந்து எல்லா இன, நிற மொழி பேசும் மக்களையும் கொண்டு வளங்கும் ஒரு பெரிய மரமாகும். அது ஒரு தனி மதமாகும் என்ற செய்தி தரப்படுகின்றது.

**420.** புளிப்பு மா பற்றிய உவமையை தருக?

பெண் ஒருவர் புளிப்பு மாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறிற்று. உவமையின் பொருள் புளிப்பு மா விண்ணரசு (இறையரசு) சிறிதளவு

MRS.N.STELLA (B.A (HONS))

மா புளிப்பேறி பெருகுவது போல் இறையரசும் பலரைக் கொண்டமையும் என்பதை விளக்குகின்றது.

**421.** புதையல் பற்றிய உவமையை தருக?

இஸ்ராயேல் மக்கள் அன்னியர்களால் அடிமைகளாகக் கொண்ட செல்லப்படும் போது தமது உடமைகளை நிலத்தில் குழி தோண்டி புதைத்து விட்டுச் செல்வர். அவர்களின் அடுத்த தலைமுறையினர் அவ்விடங்களில் வேளாண்மை செய்வதற்காக அந்நிலங்களை பண்படுத்தும் போது தற்செயலாக அப்புதையலைக் கண்ட கொள்வர். உடனே தனக்குள்ள தெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்குவர். அப்புதையலை அடைய எத்தகைய தியாகத்தையும் செய்ய தயாராக இருந்தனர்.

**422.** புதையல் உவமை வழியாக நமக்கு கற்பிக்கப்படம் பாடம் யாது?

1. புதையலை கண்டு கொண்டதும் அதை அடைய தனக்குள்ள தெல்லாவற்றையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருப்பது போல், நாமும் இறையரசை கண்டு கொண்டதும் அதை அடைவதற்காக எமக்குள்ள எல்லா வற்றையும் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றும்
2. இறையரசு விலைமதித்தற்கரியது என்றும் கற்பிக்கப்படுகின்றது.

**423.** முத்து உவமை பற்றிய உவமையை தருக?

வணிகன் ஒருவன் விலை உயர்ந்த முத்தைத் தேடி அலைகின்றான். அதைக் கண்டு கொண்டவுடன் கனக்குள்ள எல்லாவற்றையும் விற்று அதை வாங்குகின்றான்.

**424.** முத்து உவமை வழியாக எமக்குக் கற்பிக்கப்படுவது யாது?

1. இறையரசை தேடி அலைந்து கண்டடைய வேண்டும்.
2. அதற்காக எதையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.
3. இறையரசு விலை மதிக்க முடியாத ஒன்று.

**425.** வலை உவமை பற்றிய உவமையை தருக?

விண்ணரசு கடலில் வீசப்படும் எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்ட வரும் வலைக்கு ஒப்பாகும். வுலை நிறைந்ததும் அதை இழுத்து கரையில் சேர்த்த பின் கரையில் உட்கார்ந்து நல்லவற்றை கூடைகளில் சேர்ப்பர். கேட்டவற்றை வெளியே எறிவர்.

**426.** வலை உவமை வழியாக எமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?

1. வலையில் அகப்பட்ட மீன்களை தரம் பிரித்தது போல் உலக முடிவிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் என தரம் பிரிக்கப்பட்டு நல்லவர்கள் விண்ணரசுக்கும் கெட்டவர்கள் தண்டனைக்கும் ஆளாக்கப்படுவர் என்று கற்பிக்கப்படுகின்றது.
2. வலையில் அனைத்து மீன்களும் அகப்பட்டது போல் விண்ணரசும் எல்லோருக்கும் உரியது என்பதும் கற்பிக்கப்படகின்றது. இதன் வழியாக கிறிஸ்தவம் அனைத்துலக மதம் என்று உணர்த்தப்படுகிறது.

**427.** எட்டுப் பேறுகள் பற்றிக் கூறும் நற்செய்திகள் எவை?

மத்தேயு, லூக்காஸ்

**428.** எட்டுப் பேறுகள் வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?

1. மலைப்பொலிவு
2. இறையரசின் சாசனம்



MRS.N.STELLA (B.A(HONS))

**427.** எட்டுப் பேறுகளை எழுதுக?

1. ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
2. துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
3. கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்
4. நீதிநிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவு காண்பர்
5. இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்
6. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
7. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.
8. நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

**429.** மத்தேயு நற்செய்தியில் 5,6,7, அதிகாரங்களில் அடங்கியுள்ள மலைப்பொழிவில் இடம் பெறும் படிப்பினைகள் எவை?

1. உப்பும் ஒளியும்
2. பழிவாங்குதல்
3. பகைவரிடம் அன்பாயிருத்தல்
4. அறச் செயல்கள்
5. நோன்பு இருத்தல்
6. உண்மைச் செல்வம்
7. கவலை வேண்டாம்
8. பொன்விதி
9. இடக்கமான வாயில்

10 சொல்லும் செயலும்

11. இருவகை அடித்தளங்கள்

**430.** **உப்பும் ஒளியும்** - மத்தேயு 5:13-16

நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும். அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். அது வேறு ஒன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுது தன் வீட்டிலுள்ள அனைவருக்கும் அது ஒளி தரும்.

**431.** உப்பும் ஒளியும் போதனையில் அடங்கியுள்ள அம்சங்கள்

1. உப்பு எவ்வாறு உணவிற்கு சுவையை கொடுக்கின்றதோ அதே போல் நாமும் உலகிற்கு உதவியாய் இருக்க வேண்டும்.
2. உப்பு உவர்ப்பற்று போனால் எந்தப் பயனும் இருக்காது. அதே போல் நாமும் எம்முடைய வாழ்க்கையை நல்ல வழியில் வாழ தவறுவோமானால் எந்தப் பயனும் இல்லாமல் போய் விடும்

2\. மெழுகுவர்த்தி தன்னை உருக்கி ஒளி கொடுக்கும் அதேபோல நாமும் மற்றவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**432. பழிவாங்குதல்**

பழைய ஏற்பாட்டில் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக உங்கள் வலக்கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தை காட்டு. ஒருவர் உனக்கு எதிராக வழக்குத் தொடுத்து உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலாடையையும் கொடு. ஒருவர் ஒரு கல் தொலைவு வரக் கேட்டால் இரு கல் தொலைவு செல். உங்களிடம் கேட்பவருக்கு கொடுங்கள் கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதே.

**433.** பழிவாங்குதல் போதனை எமக்கு கற்றுத் தருவது.

பழைய ஏற்பாட்டில் கண்ணுக்கு கண் என்று சொன்னது பழிவாங்குதலை கட்டப்படுத்தவே. ஆனால் இயேசு சொல்கிறார் பழிவாங்குதல் என்ற எண்ணமே கூடாது.

**434.** பழிவாங்குதல் என்ற யேசுவின் போதனை எமக்கு கற்றுத் தரும் பாடம் யாது?

பழிவாங்குதல் என்ற எண்ணத்தை முற்றாக அழிக்கப்பட வேண்டும். எமது எதிரியை அன்பால் வென்றெடுக்க வேண்டும் எனக் கற்றுத் தருகிறது.

**435. பகைவரிடம் அன்பாயிருத்தல்**

பழைய ஏற்பாட்டில் அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக. பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக. எனக் கூறியிருப்பதை கேட்டிருக்கின்றீர்கள். ஆனால் நான் உங்களுக்கு சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இவ்வாறு செய்தால் நீங்கள் உங்கள் விண்ணகத்தந்தையின் மக்கள் ஆவீர்கள்.

**436.** பகைவரிடத்தில் அன்பு செலுத்துங்கள் என்ற யேசுவின் போதனை எமக்கு கற்றுத் தரும் பாடம் யாது?

நாம் அன்பு செலுத்துபவரிடம் அன்பு செலுத்துவதால் பயன் ஒன்றுமில்லை. ஆனால் எம்மை வெறுப்பவர்களிலும் எமது பகைவரிடமும் அன்பு காட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் நாம் இறைதந்தையின் மக்களாக இருப்போம் என்று கற்பிக்கப்படுகின்றது.

**437. அறச் செயல்கள்**

மக்கள் பார்க்க வேண்டும் என்று உங்கள் அறச் செயல்களை செய்யாதீர்கள் இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்கு கைமாறு கிடைக்காது.

**438.** அறச் செயல்கள் என்ற யேசுவின் போதனை எமக்கு கற்றுத் தரும் பாடம் யாது?

வலது கை செய்வதை இடது கை அறியக் கூடாது என்று கூறப்பட்டள்ளது. நாம் அறச்செயல்கள் செய்வது மற்றவர்களுக்கு தெரியக் கூடாது. மற்றவர்கள் பார்க்க வேண்டும் புகழ வேண்டும் என்பதற்காக தர்ம காரியங்களை செய்யக் கூடாது. ஏனெனில் மறைவாக இருப்பதை காணும் இறைவன் அதற்குரிய கைமாறை தருவார் என்பதை படிப்பினையாகும்.

**439. நோன்பு இருத்தல்**

நீங்கள் நோன்பு இருக்கும் போது வெளிவேடக்காரனைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டும். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். தங்களுக்குரிய கைமாற்றை பெற்றுவிட்டார்கள்

MRS.N.STELLA (B.A HONS)

என உறுதியாக சொல்கின்றேன். ஆனால் நீங்களோ நோன்பு இருக்கும் போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தைக் கழுவுங்கள் அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது. மாறாக மறைவாய் இருக்கும் உங்கள் தந்தைக்கு தெரியும். மறைவாய் இருப்பதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைமாறு தருவார்.

**440.** இயேசு நோன்பு இருக்கும் செயல் பற்றி யாது கூறுனார்?
வெளிவேடக்காரர் நோன்பு இருக்கும் போது தாங்கள் நோன்பு இருப்பதை மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக முகத்தை விகாரப்படுத்தி கொள்கின்றார்கள். ஆனால் நீங்கள் நோன்பு இருப்பது மற்றவர்களுக்கு தெரியாமல் இருக்கட்டும். மறைவாய் இருப்பதை காணும் தந்தை உங்களுக்கு கைமாறு தருவாறு என்று கூறினார்.

**441.** நோன்பு இருக்கும் போது கடைப்பிடிக்க வேண்டியவை எவை?
1. தலைக்கு எண்ணெய் தடவ வேண்டும்.
2. முகத்தைக் கழுவ வேண்டும்.

**442. உண்மைச் செல்வம்**
மண்ணுலகில் உங்களுக்கு எனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்து விடும். திருடரும் அதைக் கன்னமிட்டத் திருடவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தை சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கு உங்கள் உள்ளமும் இருக்கும்.

**443.** உண்மைச் செல்வம் பற்றி இயேசுவின் போதனை யாது?
இவ்வளவு வாழ்வை சந்தோ'மாக வாழ்வதற்காக நாம் செல்வத்தை சேமிப்பதைவிட அந்த செல்வத்தைக் கொண்ட மறுவுலக வாழ்வில் நாம் சந்தோஷமாக நல்ல செயல்களை செய்ய வேண்டும் என்பதாகும்.

**444.** செல்வந்தர் விண்ணரசுக்குள் நுழைய முடியாது என்பதை எடுத்துக் காட்ட இயேசு கூறிய வார்த்தைகள்
செல்வந்தர் விண்ணரசில் நுழைவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்றார்.

**445.** செல்வந்தர் இவ்வுலகில் செல்வத்தை கொண்டு நல்ல செயல்கள் செய்யாவிடின் விண்ணரசில் நுழைய முடியாது என்பதை உணத்தும் உவமை யாது?
ஏழை இலாசரும் செல்வந்தரும்

**446. கவலை வேண்டாம்**
உயிர் வாழ எதை உடுத்துவது என்று நீங்கள் கவலை கொள்கின்றீர்கள் உணவை விட உயிரும் உடையை விட உடலும் உயர்ந்தவை அல்லவா? வானத்துப் பறவைகளை நோக்குங்கள் அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதும் இல்லை. உங்கள் விண்ணகத்தந்தை அவற்றிற்கு உணவு அளிக்கின்றார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?

**447.** கவலை வேண்டாம் என்ற போதனை வழியாக இயேசு எமக்கு கற்றுத் தருவது யாது?
கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒருமுழம் கூட்ட முடிறாது. எனவே கவலைப்படுவதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. நடப்பவை எல்லாம் இறைவன் விருப்பப்படியே நடப்பது என நினைத்து இன்றைய பிரச்சினையை இன்றே தீர்ந்துவிட வேண்டும் என்று கற்றுத் தருகின்றார்.

MRS.N.STELLA (B.A.HONS)

**448. பொன்விதி**

பிறர் உங்களுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றை அவர்களுக்கு நீங்கள் செய்யுங்கள்.

**449. இடுக்கமான வாயில்**

இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர் வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. விழியும் மிகக் குறுகியது இதைக் கண்டபிடிப்போர் சிலரே.

**450.** இடுக்கமான வாயில் என்ற போதனை வழியாக இயேசு எமக்கு கற்றுத் தருவது யாது? நல்ல வாழ்வுக்கான வழி குறுகியது. அதில் பல கஸ்டங்கள், இடையூறுகள், துன்பங்கள் வரும். இதன் வழியே பயணித்தால் வாழ்வு நிச்சயம்.

**451. சொல்லும் செயலும்**

என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவரே செல்வர். இறுதிநாளில் பலர் என்னிடம் ஆண்டவரே ஆண்டவரே உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா? என்பர் அதற்கு நான் அவர்களிடம் உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செய்படுவோரே, என்னை விட்டு அகன்று போங்கள் என வெளிப்படையாக அறிவிப்பேன்.

**452.** சொல்லும் செயலும் என்ற போதனை வழியாக இயேசு எமக்கு கற்றுத் தருவது யாது? ஆண்டவரே, ஆண்டவரே என வாயில் சொல்வதை விட்டு, உள்ளத்தால் உணர்ந்து நல்லதை செய்யுங்கள் அப்போது தான் கைமாறு கிடைக்கும்.

**453. இருவகை அடித்தளங்கள்**

நான் சொல்லும் வார்த்தைகளை கேட்டு அதன்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழை பெய்தது, ஆறு பெருக்கெடுத்து ஓடியது, பெருங்காற்று வீசியது ஆனால் வீடு விழவில்லை. ஏனெனில் அது பாறை மீது கட்டப்பட்டிருந்தது. நான் சொல்லும் வார்த்தையின் படி நடக்காதவர் மண்மீது வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பானவர். முழை பெய்தது, ஆறு பெருக்கெடுத்து ஓடியது, பெறுங்காற்று வீசியது அவை அவ்வீட்டை தாக்க அது விழுந்தது பேரழிவு நேர்ந்தது.

**454.** இருவகைஅடித்தளங்கள் என்ற போதனை வழியாக இயேசு எமக்கு கற்றுத் தருவது யாது? இறைவனின் வார்த்தையை கேட்டு அதன்படி நடப்பவர்கள் நல்ல வாழ்வைக் கண்டடைவர். இறைவனின் வார்த்தையின் படி வாழ்பவர்களது வாழ்வு அழிவுக்குரிய வாழ்வாக அமையும்.

**455.** இருவகை அடித்தளங்களும் எவை?

1. பாறை
2. மண்

**456.** இலங்கையில் பின்பற்றப்படும் ஒழுக்க விழுமியங்களில் பிரதிபலிக்கும் இறையாட்சி மதிப்பீடுகள்?

1. கரங்களை குவித்து "கடவுளுக்கு ஸ்தோத்திரம்" சொல்லுதல்.
2. வீட்டிலிருந்து வெளியே போகுமுன், ஒரு காரியத்தைச் செய்யுமுன் செபித்தல், சிலுவை அடையாளம் வரைதல்.
3. பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்
4. மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து ஒதுங்கியிருத்தல்.
5. பெரியோரை மதித்தல் உரிய கௌரவ மளித்தல்.
6. மூத்தோர், பெரியோர் முன்னிலையில் எழுந்து நிற்றல் அவர்களை விடமேல் ஆசனத்தில் அமராதிருத்தல்.

## பாடம் 12

## திருமுழுக்கும் உறிதிப்பூசுதலும்

**457.** நாம் இறையரசிற்குள் நுழைய எதைப் பெற்றிருக்க வேண்டும்?
திருமுழுக்கை

**458.** இயேசு திருமுழுக்குப் பற்றி நிக்கதேமுவுக்கு கூறியது யாது?
ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது.

**459.** இயேசு திருத்தூதர்களுக்கு கொடுத்த இறுதிக் கட்டளை யாது?
எல்லா இனத்தாரையும் சீடராக்கி அவர்களுக்கு திருமுழுக்கு கொடுங்கள்

**460.** திருமுழுக்கின் மூலம் நாம் பெறும் நன்மைகள் எவை?

1. சென்ம பாவத்திலிருந்தும், கன்ம பாவத்திலிருந்தும் விடதலை பெறல்
2. இறைவனின் பிள்ளையாதல்
3. மூவொரு கடவுள் வாழும் இல்லமாதல்
4. ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்றைப் பதித்திடல்
5. இறையரசுக்கு உரிமையாகுதல்
6. ஏனைய அருட்சாதனங்களைப் பெற தகுதி பெறல்
7. குருத்துவ மேய்ப்பு, இறைவாக்கு பணியில் ஈடுபடல்
8. கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புக்களாதல்
9. திருச்சபையின் அங்கத்தவராகுதல்.

**461.** திருத்தந்தை பெரிய லியோ திருமுழுக்குப் பற்றி யாது கூறினார்?
திருமுழுக்கின் மூலம் நீங்கள் தூய ஆவியின் ஆலயங்கள் ஆனீர்கள். கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றி விட்டீர்கள்.

**462.** புகுமுக அடையாளங்கள் எவை?

1. திருமுழுக்கு
2. உறுதிப்பூசுதல்
3. நற்கருணை

MR.N.STELLA (B.A (HONS)

**463.** ஞானப் பெற்றோராவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்?

1. புகுமுக அடையாளங்களை பெற்றிருத்தல்.
2. 16 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்.
3. கிறிஸ்தவ நம்பிக்கையில் வாழ்பவராக இருத்தல்.
4. கிறிஸ்தவ கடமைகள், பொறுப்புக்களை பற்றி அறிவு உடையவராக இருத்தல்.
5. திருச்சபையின் சட்ட திட்டங்களினால் விலக்கி வைக்கப்படாதவராக இருத்தல்.
6. குழந்தையின் பெற்றோரால் தெரிந்து கொள்ளப்பட்டவராய் இருத்தல்.
7. பிள்ளையின் பெற்றோர் அல்லாதவராய் இருத்தல்.
8. தங்களது கடமை பொறுப்புக்களை நிறைவேற்ற விருப்பம் உடையவராகவும் அதற்கான ஆற்றல் உடையவராகவும் இருத்தல்.

**464.** திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் அடையாளங்களும் அவற்றின் பொருளும்

1. தண்ணீர் - பாவங்களைக் கழுவுவதன் அடையாளம்
2. வெண்ணிற ஆடை – தூய்மையின் அடையாளம்
3. திருத்தைலம் பூசுதல் - திடப்படுத்தலின் அடையாளம்
4. பாஸ்கா திரி – உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியின் அடையாளம்

**465.** கிரேக்கத்தில் திருத்தைலத்தை எவ்வாறு அழைப்பர்?
கிறிஸ்மா

**466.** “கிறிஸ்மா” என்பதன் பொருள் யாது?
கிறிஸ்துவின் பெயரால் அர்ச்சிக்கப்படல்

**467.** கிறிஸ்மா தைலம் ஏன் பூசப்படுகின்றது?

1. தனது நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கும்.
2. தனது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை எதிர்த்தும் போராடுவதற்கும்

**468.** திருத்தைலம் பூசுதல் எதன் அடையாளமாக இருக்கின்றது?
திடப்படுத்தலின்

**469.** திருமுழுக்கின் மூலம் ஒரு கிறிஸ்தவன் பெறும் பணிகள் எவை?
1. அரச 2. குருத்துவ 3. இறைவாக்குரைத்தல்

**470.** திருமுழுக்கின் போது முக்கியமானதும், கட்டாயமானதுமான அடையாளம் எது?
தண்ணீர்

**471.** விண்ணகத்தில் இருப்பது என்பதன் கருத்து?
கிறிஸ்துவோடு இருப்பது

**472.** உறுதிப்பூசுதல் என்பதன் பொருள் யாது?
1. முதிர்ச்சியடைதல் 2. வளர்ச்சியடைதல் 3. முன்னேற்றமடைதல்

**473.** ஆவியானவரை குறிக்கும் அடையாளங்கள் எவை?
1. காற்று 2. நெருப்பு 3. நீர்த்தடாகம்

MRS.N.STELLA ( B.A ( HONS)

**474.** யோவான் நற்செய்தியில் ஆவியானவரைக் குறிக்கும் அடையாளம் எது?
நீர்த்தடாகம்

**475.** இயேசு விண்ணகம் செல்லும் முன் தான் வாக்களித்தது யாரை?
ஆவியானவரை

**476.** தூய ஆவியானவர் இயேசுவின் வாழ்வில் எவ்விதம் செயற்பட்டார்?

1. இயேசுவின் பிறப்பில் - யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்.தூய ஆவி உம்மீது வருவார் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும் ஆதலால் பிறக்கப் போகும் குழந்தை தூயது அக்குழந்தை இறைமகன் எனப்படும்.
2. இயேசுவின் திருமுழுக்கில் - ஆண்டவராகிய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்.
3. அப்போஸ்தலரிடம் அனுப்பியது – தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையை பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா, முழுவதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.

**477.** உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள்?

1. திருமுழுக்கு பெற்றிருத்தல்
2. 14 வயது நிறைவடைந்திருத்தல்.
3. ஒப்புரவு அடையாளத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. முறையான மறை அறிவைப் பெற்றிருத்தல்.
5. உறுதிப்பூசுதலைப் பெற முழுவிருப்பம் கொண்டிருத்தல்.
6. கிறிஸ்துவின் படை வீரனாக இருக்க ஆயத்தம் செய்தல்.
7. திருமுழுக்கு வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்தல்

**478.** உறுதிப்பூசுதல் வழியாக கிடைக்கும் கொடைகள்

1. திருமுழுக்கின் போது பெற்ற இறையருள் வளர்ச்சியடைகிறது.
2. திருச்சபையில் முழுமையான அங்கத்துவம் கிடைக்கின்றது.
3. இறைவனை "அப்பா தந்தாய்" என அழைக்கும் உரிமை கிடைக்கின்றது.
4. கிறிஸ்துவோடு இணைக்கப்படுகின்றோம்.
5. நிறைவாழ்விற்கு இட்டுச் செல்கின்றது.
6. கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ விசேட சக்தி கிடைக்கின்றது.
7. கிறிஸ்துவின் பெயரை அச்சமின்றி வெளிப்படுத்த சக்தி கிடைக்கின்றது.
8. வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சவால்களின் மத்தியில் உறுதியாக இருக்கவும் சவால்களுக்கு அஞ்சாது முகம் கொடுக்கவும் சக்தியும் பலமும் கிடைக்கிறது.

**479.** உறுதிப்பூசுதலை வழங்குபவர் யார்?

1. ஆயர்
2. வளந்தோருக்கான திருமுழுக்கின் போது குருவானவரால் உறுதிப்பூசுதல் வழங்கப்படுகின்றது.
3. மரணத்தருவாயில் இருக்கும் கிறிஸ்தவனாக இருப்பின் குருவானவரால் உறுதிப்பூசுதலை வழங்க முடியும்.

MRS.N.STELLA (B.A (HONS)

**480.** உறுதிப்பூசுதல் மூலம் கிடைத்த அருட்கொடைகளை வளர்த்துக் கொள்ள நீர் செய்யக் கூடிய செயல் 5 தருக?

1. இயேசுவைப் பற்றி இறைவாக்குரைப்பேன்.
2. கிறிஸ்துவின் சாட்சியாக முன்மாதிரியாக வாழ்வேன்.
3. தினமும் திருப்பலியில் பங்கு கொள்வேன்.
4. மறைக்கல்வி வகுப்புக்கு ஒழுங்காகச் செல்வேன்.
5. பீடப்பணியாளராக பணி புரிவேன்.

**481.** தூய ஆவியானவரைப் பெற்ற ஒருவர் யாருக்கு ஒப்பிடப்படுகின்றார்?
போர் வீரனுக்கு

## பாடம் 13

## குணமளிக்கும் அருளடையாளங்கள்

**478.** குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை?

1. ஒப்புரவு அருளடையாளம்
2. நோயில் பூசுதல் அடையாளம்.

**479.** இவ்விரு அருளடையாளத்தையும் ஏன் குணமளிக்கும் அருளடையாளங்கள் என அழைக்கப்பகின்றது?
இவ்விரு அருளடையாளங்கள் வழியாக ஆன்ம உடல் நலம் கிடைப்பதால் இவ்விரு அருளடையாளத்தையும் குணமளிக்கும் அருளடையாளம் என்கின்றனர்.

**480.** ஒப்புரவு அரளடையாளத்தை குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

1. மனமாற்றத்தின் அருளடையாளம்
2. பாவக் கழுவாய் அருளடையாளம்
3. பாவசங்கீர்த்தனம்
4. மன்னிப்பின் அருளடையாளம்

**481.** மனமாற்றத்தின் அருளடையாளம் என்பதன் பொருள் யாது?
தனது பாவ நிலையை ஏற்று, அதற்காக மன்னிப்புப் பெற்று இறைவனிடம் மீண்டும் திரும்பி வருதலை குறிக்கின்றது.

**482.** பாவக் கழுவாய் அருளடையாளம் என்பதன் பொருள் யாது?
நமது பாவங்களுக்காக மனம் வருந்துவதன் முக்கியத்துவமும் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்வதன் முக்கியத்துவமும் இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

**483.** பாவசங்கீர்த்தனம் என்பதன் பொருள் யாது?
ஒவ்வொருவரும் தம் பாவங்களை அறிக்கைசயிட்டு அவற்றிற்கு மன்னிப்பு வேண்டதலைக் குறிக்கின்றது.

**484.** மன்னிப்பின் அருளடையாளம் என்பதன் பொருள் யாது?
பாவம் மன்னிக்கப்படுவதனால் மன அமைதி கிடைப்பதை குறிக்கின்றது.

**485.** உள்ளார்ந்த மனம் வருந்துதல் என்பது யாது?
கடவுளின் இரக்கமுள்ள அன்பிற்குப் பதில் கூற இறையருளால் ஈர்க்கப்படுகின்ற நெருங்கிய உள்ளத்தின் இயக்க நிலையாகும். இது செயல் வழிப்பாவங்களுக்கான மனத்துயரத்தையும் அவற்றை வெறுத்து ஒதுக்குவதையும் எதிர் காலத்தில் மீண்டும் பாவம் செய்யாமலிருக்கும் உறுதிப்பாட்டையும் கடவுளின் உதவியில் நம்பிக்கை வைத்திருப்பதையும் உள்ளடக்கியது ஆகும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**486.** உள்ளார்ந்த மனவருந்தலுக்கு ஒருவர் செய்ய வேண்டியது யாது?

1. பாவங்களுக்காக மனம் வருந்துதல்.
2. உள்ளத்தில் உருவாகும் துயரையும் செய்த குற்றத்தையும் வெறுப்பதும்.
3. மீண்டும் பாவம் செய்வதில்லை என தீர்மானம் எடுப்பது.

**487.** மனம் வருந்துதல் எத்தனை வகைப்படும்?

**02**

1. உண்மையாக மனம் வருந்துதல்
2. பயத்தினால் மனம் வருந்துதல்.

**488.** உண்மையாக மனம் வருந்துதல் என்பது யாது?

அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வதை அடிப்படையாக வைத்து அன்பின் காரணமாக ஏற்படும் மனம் வருந்தலாகும். இது அன்பின் மனம் வருந்தல் எனப்படும்.

**489.** பயத்தினால் மனம் வருந்துதல் என்பது யாது?

விண்ணக வாழ்வை அல்லது இறை அரசை இழந்து நரகத்தின் வேதனைகளுக்கு உள்ளாக நேரிடும் என்ற பயத்தினால் மனம் வருந்துதலை குறிக்கின்றது. இது தூய ஆவியின் தூண்டுதலால் கிடைக்கும் இறை கொடையாகும். பயத்தினால் மனம் வருந்தினாலும் பாவ மன்னிப்பு அருளடையாளத்தை பெற்றாலே பாவங்கள் மன்னிக்கப்படும்.

**490.** ஒப்புரவு அருளடையாளத்தை பெற விருப்பும் ஒருவர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் எவை?

1. ஆன்ம சோதனையில் ஈடுபடுதல்.
2. செய்த பாவங்களுக்கு மனம் வருந்துதல்.
3. மீண்டும் அந்தப் பாவங்களை செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.
4. குருவானவரிடம் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறல்.
5. குருவானவர் சொல்லும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்.

**491.** உடையை அல்ல உள்ளத்தைக் கிழித்துக் கொள்ளுங்கள் என்பதன் பொருள் யாது?

செய்த குற்றத்தைச் சீர் செய்து கொள்வதாகும்.

**492.** நீங்கள் உங்கள் உடைகளை கிழித்துக் கொள்ள வேண்டாம் இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் எனக் கூறிய இறைவாக்கினர்?

யோவேல்

**493.** மனம் வருந்துவதற்கான தவச் செயல்கள் எவை?

1. செபம் செய்தல். 2. நோன்பு இருத்தல். 3. தர்மம் செய்தல்
4. துன்பன்பதுயரங்கள் ஏமாற்றங்களை பொறுமையோடு சகித்தல்
5. ஏவ்வளவு துன்பமாக இருந்தாலும் தரப்படும் பொறுப்புக்களை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுதல்

**494.** ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பெறும் நன்மைகள் எவை?

1. இறைவனுடனும் அயலவருடனும் உறவு கட்டியெழுப்பப்படுகிறது.
2. பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கின்றது.
3. உள்ளார்ந்த அமைதி கிடைக்கின்றது.
4. மீண்டும் பாவம் செய்யாதிருக்க ஆற்றல் கிடைக்கின்றது.

**495.** ஒப்புரவு அருளடையாளத்துடன் தொடர்புடைய இறைவார்த்தைகள் எவை?

1. மனமாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட மனம் மாறிய பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உறுதியாகச் சொல்கிறேன்.

2. ''இன்று சேவல் கூவு முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்'' என ஆண்டவர் கூறியதை பேதுரு நினைவு கூர்ந்து வெளியே சென்று மனம் வருந்தி அழுகின்றார்.

MRS.N.STELLA (B.A (HONS))

**496.** உண்மையான மனம் வருந்துதலுக்கும் பயத்தினால் ஏற்படும் மனம் வருந்துதலுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைத் தருக?

1. உண்மையான மனம் வருந்துதல் மூலம் செய்த பாவத்திற்கு மன்னிப்புப் பெறலாம். ஆயினும் சாவான பாவத்திற்கு பாவசங்கீர்த்தனம் மூலமே மன்னிப்பைப் பெறலாம்.

2. விண்ணக வாழ்வை இழந்து நரகத்தின் வேதனைகளுக்கு ஆளாக வேண்டி வரும் என்ற பயத்தினால் மனம் வருந்தினால் மன்னிப்புக் கிடைக்காது ஒப்புரவு அருளடையாளத்தின் மூலமே மன்னிப்பைப் பெறலாம்.

**நோயிற்பூசுதல்**

**497.** நோயிற்புசுதல் என்பதன் கருத்து யாது?
கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் அல்லது வயோதிப நிலைக்கு உட்பட்டிருக்கும் போது ஒருவருக்கு ஆன்மீக வல்லமையையும் மன அமைதியையும் உடல் நலனையும் பெற்றுக் கொடுக்கும் அருளடையாளமாகும்.

**498.** நோயிற் பூசுதல் ஏன் வழங்கப்படுகின்றது?
நோயாளரைத் திடப்படுத்துவதற்கு

**499.** நோயிற் பூசுதலுக்கு அவசியமானது எது?
நோயாளரின் நம்பிக்கை

**500.** இயேசு நோயாளரைக் குணப்படுத்திய போது அவர்களின் நம்பிக்கை வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் எவை?

1. இயேசு முடக்குவாதமுற்றவரை நோக்கி ‘‘மகனே துணிவோடிரு உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன’’ என்றார்.

2. கைசூம்பியவரை நோக்கி ‘‘உமது கையை நீட்டும்’’ என்றார். அவர் நீட்டினார் நலமடைந்தார்.

3. இயேசு பெரும்பாடுடைய பெண்ணை நோக்கி ‘‘உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது அமைதியுடன் போ, நீ நோய் நீங்கி நலமாயிரு’’ என்றார்.

**501.** தூய யாக்கோபு நோயிற்பூசுதல் பற்றி யாது கூறினார்?
உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவர் பெயரால் அவர் மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார்.

**502.** நோயிற் பூசுதலை பொது நிலையினரும் வழங்கலாம் என கூறும் திருமுகம் எது?
யாக்கோபு திருமுகம்

**503.** நோயிற் பூசுதல் யாருக்கு வழங்கப்படுகிறது?
1. வயோதிபர் 2. படுக்கையோடு நோயுற்ற நிலையில் உள்ளவர்.

**504.** நோயிற் பூசுதல் வழியாகக் கிடைக்கும் நன்மைகள் எவை?

1. ஆன்மீக வல்லமை
2. மன அமைதி
3. உடல் நலமடைதல்
4. பாவ மன்னிப்பு

**505.** திருத்தந்தை 6ம் சின்னப்பரின் “நோயாளரின் தூய பூசுதலின் படிப்பினை யாது?
கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்கு ஒலிவ் அல்லது வேறொரு மூலிகையிருந்து பெறப்பட்டு முறையாக ஆசீர்வதிக்கப்பட்ட தைலத்தை நெற்றியிலும் கைகளிலும் பூசி செபிக்கவும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**506.** நோயிற் பூசுதலின் அடையாளத்தின் போது சொல்லும் செபம் யாது?

இத்தூய பூசுதலாலும் தமது இரக்கத்தினாலும் இறைவன் தூய ஆவியின் வரம் தந்து உமக்கு உதவுவாராக ஆமென். உமது பாவங்களிலிருந்து மீட்டு மீட்பளித்து அவரது இரக்கத்தினால் உம்மைத் தேற்றுவாராக ஆமென்.

**507.** "நோயிற் பூசுதல்" அவஸ்தைப் பூசுதல் என்று ஏன் அழைக்கப்பட்டது?

மரணப்படுக்கையில் உள்ளவர்களுக்கு மட்டும் இவ்வருளடையாளம் வழங்கப்பட்டதால் இது அவஸ்தைப் பூசுதல் என அழைக்கப்பட்டது.

**508.** நோயிற் பூசுதல் சடங்கு முறை ஒழுங்கு முறையில் தருக?

1. ஆரம்பச் சடங்கு
2. பாவமன்னிப்புச் சடங்கு
3. இறைவார்த்தைச் சடங்கு
4. நம்பிக்கையாளர் மன்றாட்டு
5. தலை மீது கரங்களை வைத்தல
6. நோயாளி மீது தைலத்தைப் பூசுதல்
7. நற்கருணை வழங்குதல்
8. ஆசீர் வழங்குதல்

**509.** நோயிற் பூசுதலின் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள்கள் எவை?

1. தனிப்பட்ட முறையில் தமதும், முழுத்திருச்சபையினதும் நன்மைக்காக நோயாளியைக் கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்தல்.
2. நோயாளியினால் அல்லது வயோதிபத்தால் ஏற்படும் வேதனைகளைக் கிறிஸ்தவ பண்புடன் ஏற்றுக் கொள்ளத் தேவையான சக்தி, அமைதி, திடம் கிடத்தல்.
3. நோயாளி தனது பாவங்களுக்கு ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பாவ மன்னிப்புப் பெறும் சந்தர்ப்பம் இல்லை எனில் இவ்வருளடையாளத்தினால் மன்னிப்பைப் பெறல்.
4. அவருடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக நன்மை விளையுமாயின் உடல் நலமடைதல்.
5. நித்திய வாழ்வை நோக்கிக் கடந்து செல்ல ஆயத்தம் செய்தல்.
6. நோயாளியின் நம்பிக்கைக்கும் எதிர் நோக்கிற்கும் ஊட்டமளித்து வாழ்க்கையில் முன் நோக்கிச் செல்ல உ வழங்க முடியும். வழங்க முடியும்.தவுதல்.

**510.** விபூதிப் புதனன்று குருவானவர் நெற்றியில் விபூதியைப் பூசும் போது கூறும் வார்த்தைகள் எது?

நீர் மண்ணாயிருக்கிறீர் மண்ணுக்கே திரும்புவாய்," "மனம் திரும்பி நய்செய்தியை நம்புங்கள்"

## பாடம் 14

## குருத்துவம்

**510.** சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் எவை?

1. குருத்துவம் 2. திருமணம்

**511.** சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்விரு அருளடையாளங்களும் ஏனைய அருளடையாளங்களில் இருந்தும் எவ்வாறு வேறுபடுகின்றது?

1. இவை இரண்டுக்கும் மறைதூதுப் பணியை ஆற்றும் பொறுப்பைத் தருகின்றது.
2. இறைமக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பைத் தருகின்றது.
3. தமதும், பிறரதும் மீட்புக்காக செயற்பட அழைப்பும் பொறுப்பும் தருகின்றது.

**512.** பணிக்குருத்துவத்தின் மூன்று நிலைகளும் எவை?

1. ஆயர் நிலை 2. குருத்துவம் 3. திருத்தொண்டர்

MRS.N.STELLA (BA (HONS))

**513.** ஆயரின் பணிகள் எவை?

1. இறைமக்களின் தலைவராக அவர்களை வழிநடத்துதல்
2. திருத்தூதர்களின் பிரதிநிதியாகவும் ஆயர்கள் மன்றத்தின் உறுப்பினராகவும் செயற்படல்.
3. குருக்களை வழிநடத்துதல்.
4. இறைவார்த்தைப் பணியை இறைவழிபாடுகளை, மேய்ப்புப் பணி, இரக்கப்பணி ஆகியவற்றைக் கண்காணித்தல்

**514.** குருக்களின் பிரிவுகள் எத்தனை?

2

1. மறைமாவட்ட குருக்கள்
2. துறவறச் சபைக் குருக்கள்.

**515.** மறைமாவட்ட குருக்கள் எனப்படுவோர் யார்?

இவர்கள் ஆயரின் தலமைத்துவத்தின் கீழ் பொது நிலையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்குப் பணி புரிந்து அவர்கள் இறையரசை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுபவர்கள்.

**516.** துறவறச் சபைக் குருக்கள் எனப்படுவோர் யார்?

துறவறச் சபையின் தலைவராக விளங்கும் குருவானவரின் கீழ் குறிப்பிட்ட சபையின் சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவித்து வாழ்பவர்கள்.

**517.** மறைமாவட்ட குருக்களுக்கான வார்த்தைப் பாடுகள் எவை?

1. கீழ்ப்படிதல்
2. குருத்துவ தூய்மை

**கீழ்ப்படிதல்** - மறைமாவட்ட ஆயரும் அவருக்கும் பின் வருபவர்களுக்கும் கீழ்ப்படிதல் ஆகும். இந்த வாக்குறுதியை குருத்துவம் பெறும் நாளில் ஆயர் முன்னிலையில் கொடுப்பர்.

வழங்க முடியும்.

**குருத்துவ தூய்மை அல்லது குருத்துவ மணத்துறவு** – திருமணமாகாது தமது முழு வாழ்வையும் இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

**518.** குருக்களின் கடமைகள் எவை?

1. திருப்பலி ஒப்புக் கொடுத்தல்
2. மறையுரை ஆற்றுதல்
3. இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல்
4. மக்களின் உண்மையான ஆயனாக செயற்படல்.
5. மறைமாவட்ட ஆயருடன் இணைந்து பணியாற்றுதல்

**519.** திருத்தொண்டர்களின் கடமைகள் யாது?

1. திருமுழுக்கு வழங்குதல்
2. மரணச் சடங்குகளை நடாத்துதல்
3. திவ்விய நற்கருணை ஆசீர் வழங்குதல்
4. திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைங் போதித்தல்
5. திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயரும் குருக்களும் உதவுதல்

MRS.N.STELLA (B.A (HONS)

**520.** திருநிலையினர் மட்டில் பொதுநிலையினரின் கடமைகள் எவை?

1. அவர்களுக்காகச் செபித்தல்
2. பங்குப் பணிகளில் உதவுதல்
3. இறையரசை பரப்பும் பணிகளில் உதவுதல்
4. திருவழிபாட்டுச் சபைகளில் உதவுதல்
5. மறைக்கல்விப் பணிகளில் உதவுதல்
6. பொதுப்பணிகளில் உதவுதல்
7. அவர்களைப் பராமரித்தலும் பாதுகாத்தலும்

**521.** குருத்துவம் என்னும் அருளடையாளத்தை வழங்க அதிகாரம் உடையவர் யார்?
மறைமாவட்ட ஆயர்

**522.** குருத்துவத்தை வழங்கும் சடங்கு முறை?
ஆயர் திருநிலைப்படுத்தப்படுபவரின் தலை மீது கைகளை வைத்து செபிப்பதன் மூலமும் அருள் பொழிவு வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலமும் இந்த அருளடையாளத்தை வழங்குவார்.

**523.** குருத்துவத்தைப் பெற தகுதியுடையோர் யார்?

1. திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் பெற்றிருத்தல்.
2. திருமணம் செய்யாமல் வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரியாக வாழ தீர்மானம் எடுத்தல்.
3. இறை அழைப்பைப் பெற்றிருத்தல்
4. அவர்களது பெற்றோர் திருமண அருளடையாளத்தைப் பெற்றிருத்தல்
5. நல்ல பண்புடையவராக இருத்தல்.
6. நலமான உடல் நலமுடையவராக இருத்தல்.
7. தேவையான பயிற்சிக் காலத்தை நிறைவு செய்திருத்தல்.
8. தானாக விரும்பி குருத்துவத்தில் இணைதல்.

**524.** ஆயர்களை நியமிக்கும் அதிகாரமுடையவர் யார்?
திருத்தந்தை

## பாடம் 15
## திருமணம்

**524.** திருமணம் என்பது யாது?
கணவனும் மனைவியும் மனம் ஒருமித்து ஒருவருக்கு ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும் முறிவுபடாத பிரிக்க முடியாத உடன்படிக்கை ஆகும்.

**525.** உடன்படிக்கை என்பதன் பொருள் யாது?
ஒரு விடயம் தொடர்பாக இருவர் சம்பந்தப்பட்டு அதை செய்ய விருப்பம் தெரிவித்து செய்து கொள்ளும் சம்மதமே உடன்படிக்கையாகும். இதில் இருந்து ஒருவர் விலக நினைத்தாலும் விலக முடியாது இது உறுதியானது.

**526.** கத்தோலிக்கத் திருமணத்தின் பண்புகள் எவை?
1. ஒருமை 2. கட்டவிழாமை

**527.** ஒருமை என்பது யாது?
ஒரு ஆண் ஒரு பெண்ணை அல்லது ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளலாம் என்பதெ உருமை ஆகும்.

**528.** கட்டவிழாமை என்பதன் பொருள் யாது?
கணவனும் மனைவியும் விவகாரத்து செய்ய முடியாது என்பதாகும்.

MRS N STELLA (B.A (HONS)

**529.** கத்தோலிக்க திருமணத்தின் நோக்கம் யாது?

1. அந்நியோன்னிய அன்பால் முழுமை அடைதல்.
2. குழந்தைகளைப் பெற்று நல்லவர்களாக வளர்ப்பதும்

**530.** இறைவார்த்தை

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்

**531.** கத்தோலிக்கத் திருமணத்தின் சட்ட ரீதியான தடைகள் எவை?

1. 18 வயதிற்கு குறையாதிருத்தல் ( 23 - 29 க்கும் இடைப்பட்ட வயதில் திருமணம் செய்வது சுகதேகியான குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவும் )
2. தானாக விரும்பி திருமணம் செய்தல்
3. ஒருவர் பிறர் தாரத்தை தனதாக்கிக் கொள்ள விரும்பி கொலை செய்வதும் பிறர் தாரத்தை விரும்பி தனது தாரத்தைக் கொலை செய்வதும் குற்றமாகும். இவ்வாறான குற்றம் புரிந்தவருடன் திருமண உறவை மேற்கொள்ள முடியாது.
4. இரத்த உறவில் திருமணம் செய்ய இயலாது.
5. கலப்புத் திருமணம் செய்ய முடியாது

**532.** கத்தோலிக்கத் திருமணத்தின் வயதெல்லை?

18 வயதிற்கு குறையாதிருத்தல் ( 23 - 29 க்கும் இடைப்பட்ட வயதில் திருமணம் செய்வது சுகதேகியான குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவும் )

**533.** திருமண ஒப்பந்தத்தை (வாக்குறுதியை) தருக?

(பெயர்) ஆகிய நான் உன்னை என் மனைவியாக, கணவனாக ஏற்றுக் கொள்கின்றேன். இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்குப் பிரமாணிக்கமாய் இருந்து என் வாழ்நாள் எல்லாம் உன்னை நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கின்றேன்.

**534.** திருமணம் என்னும் அருளடையாளத்தை நிறைவேற்றுபவர் யார்?

திருமணம் செய்து கொள்ளப் போகும் இருவருமாவர்.

**535.** திருமணம் என்னும் அருளடையாளத்தை வழங்கும் போது குருவானவரின் பங்கு யாது?

திருச்சபையின் சட்ட பூர்வமான சாட்சியாகவுள்ளார்.

**536.** திருமண சிவில் சட்டம் யாது?

இலங்கை ஜனநாயக அரசின் சட்ட ஒழுங்குகளின்படி எல்லாத் திருமணங்களும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இதன்படி ஆலயங்களில் நடைபெறும் கத்தோலிக்கத் திருமணங்களும் அரச பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. ஆதைச் செய்பவர் பங்குக் குருவானவராவார். அவர் பதிவாளராகச செயற்பட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கத்தோலிக்கர் அல்லாத ஒரு குரு முன்னிலையில் அல்லது பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்ய கத்தோலிக்கருக்கு அனுமதியில்லை. அத்தகைய திருமணங்கள் அருளடையாளமாக முடியாது.

**537.** கத்தோலிக்க திருச்சபை விவகாரத்தைப் பற்றி கூறுவது யாது?

திருச்சபை விவகாரத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. ஏனெனில் திருமணத்தை செல்லுபடியற்றதாக்க திருச்சபையாலும் முடியாது. ஏனெனில் இறைவன் முன்னிலையில் செய்த உடன்படிக்கையாக இருப்பதால்.

**538.** கத்தோலிக்க திருச்சபை விவகாரத்தை ஏற்கும் சந்தர்பங்கள் எவை?

1. சுய விருப்பமின்றி செய்யப்பட்ட திருமணம்
2. திருமணத்திற்கு சட்டரீதியான தடை இருந்தும் அனுமதி இன்றி நிறைவேற்றப்பட்ட திருமணம்

MRS.N.STELLA (B.A (HONS)

**539.** கத்தோலிக்க திருமணத்தை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ள பின்பற்ற வேண்டியவை எவை?

1. இருவரும் கத்தோலிக்கராக இருத்தல்.
2. மனம் ஒருமித்த அன்பும் பிரமாணிக்கமும்
3. தூய்மையான வாழ்க்கை
4. புரிந்துணரும் தன்மை
5. தியாகம்
6. குடும்பத்தின் ஒற்றுமைக்காகச் செயற்படுதல்.
7. தம்பதிகள் ஆன்மீக வாஞ்சையோடு திருமணக் கடமைகளை நிறைவேற்றுதல்.

## பாடம் 16
## துறவற வாழ்வு

**538.** துறவற வாழ்வு என்பது யாது?
உலகத்தாரிடமிருந்து பிரிந்து இலௌகீக காரியங்களில் ஈடுபடுவதை மட்டுப்படுத்தி கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு சான்று பகர்ந்து கிறிஸ்தவத்தின் உத்தமதனத்தை உறுதிப்படுத்தி மனிதன் எப்படியுமல்ல இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழும் நோக்குடன் தனியாகவோ, சிறு குழுவாகவோ வாழும் வாழ்வாகும்.

**539.** துறவற வாழ்வின் படிகள் எவை?

1. தபோதனர்
2. ஏகாந்திகள் அல்லது வனாந்திகள்
3. துறவிகள்

**540.** தபோதனர் எனப்படுவோர் யார்?
வீடுகளில் இருந்து கொண்டே திருமண வாழ்வைத் துறந்து விரத்துவத்தை அனுசரித்து பலவிதமான ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்தவர்களே தபோதனர்கள் ஆவர்.

**541.** ஏகாந்திகள் அல்லது வனாந்திகள் எனப்படுவோர் யார்?
வீடுகளில் இரந்து கொண்டு கிறிஸ்தவ உத்தம தனத்தை பிரமாணிக்கமாய் வாழுதல் கடினம் என்பதை உணர்ந்து பல தபோதனர் உலக வாழ்விலிருந்து விலகி தங்கள் குடும்பங்களை விட்டு எகிப்து, சிரியா போன்ற வனாந்திரங்களுக்கு சென்று வாழ்க்கை நடத்துபவர்களை ஏகாந்திகள் என்பர்.

**542.** துறவிகள் எனப்படுவோர் யார்?
வனாந்தரங்களில் தனியாக வாழ்ந்தவர்கள் ஒரு தலைமைத் துறவியின் கீழ் சமூகமாக தினமும் குறிப்பிட்ட நேரங்களில் ஞான வாசனை செபம் தியானம் வேதாகமப் படிப்பு என பொது ஆன்மீக முயற்சிகளில் ஈடுபடுவோர் துறவிகள் எனப்படுவர்.

**543.** திருச்சபையின் பாரம்பரியத்தின் படி முதல் துறவி யார்?
தேப்ஸ் சின்னப்பர்

MRS.N.STELLA (B.A (HONS)

**544.** துறவிகளின் பிதாப்பிதா யார்?
எகிப்து அந்தோனியார்

**545.** துறவற குழு வாழ்வுக்கு வித்திட்டவர் யார்?
புனித பக்கோமியாஸ், ஆசீர்வாதப்பர்

**546.** துறவற வாழ்வை ஒழுங்குபடுத்த உழைத்தவர்கள் யார்?
1. புனித பசில் 2. புனித ஜெறோம் 3. புனித அகுஸ்தீனார் 4. புனித அம்புறோசியார்

**547.** கீழைத்தேய நாடுகளில் துறவற வாழ்வுக்கான ஒழுங்குகளை எழுதியவர்?
தூய பசில்

**548.** மேலை நாட்டில் துறவற வாழ்வை அறிமுகம் செய்து வளர்த்தவர்கள் யார்?
1. ஆசீர்வாதப்பர் 2. அகுஸ்தீனார் 3. கஸியன்

**549.** மேலை நாட்டிற்குரிய துறவற வாழ்வுக்கான ஒழுங்கு முறைகளை எழுதியவர் யார்?
தூய ஆசீர்வாதப்பர்

**550.** துறவற வார்த்தைப்பாடுகள் எத்தனை? அவை எவை?
**3**
1. **கற்பு:-** மணத்துறவு நிலையில் இறையரசுக்காகத் தமது முழுவாழ்வையும் அர்ப்பணித்தல்
2. **ஏழ்மை:-** இவ்வுலகப் பொருட் செல்வங்கள் மட்டில் பற்றற்று உரிமை கோராது இருத்தல்
3. **கீழ்ப்படிதல்:-** இறை சித்தத்தை ஏற்று தமது சபைத் தலைவர்களுக்கு பணிந்து வாழ்தல்.

**551.** துறவற வாழ்வின் பண்புகள் எவை?
1. குழும வாழ்வு :- துறவிகள் குழுமமாக வாழ்வர். (ஒன்றாகச் செபித்தல், ஒன்றாக உண்ணுதல்
2. செப வாழ்வு :- துறவற வாழ்வின் இன்றியமையாத ஒரு பண்பாகும்
3. பணி வாழ்வு :- இறையாட்சி தூதுரைப் பணிக்காகத் தம்மை அர்ப்பணிப்பர்.
உதாரணம் :- ஆசிரியப்பணி, சமூக சேவை

**552.** துறவற சபைகளை வகைப்படுத்துக?
1. குருத்துவம் சார்ந்த துறவிகள் 2. குருத்துவம் சாராத துறவிகள்

**553.** குருத்துவம் சார்ந்த துறவற சபைகள் எவை?
1. அமல மரித்தியாகிகள் சபை 2. சில்வெஸ்ரர் பெனடிக் சபை

**554.** குருத்துவம் சாராத துறவிகள் யார்?
1. அருட்சகோதரர்கள் 2. அருட்சகோதரிகள்

**555.** அமலமரித் தியாகிகள் சபையின் பணிகள் எவை?
1. ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவித்தல்
2. கல்விப் பணி
3. மறைக்கல்விப் பணி
4. மறையுரை ஆற்றுதல்.

**556.** சில்வெஸ்ரர் பெனடிக் சபையின் பணிகள் எவை?
1. செப வாழ்வு
2. கல்விப் பணி
3. பங்குப் பணி
4. இறை மகிமைக்காகக் குழுமமாக வாழுதல்.

MRS.N.STELLA (B.A (HONS)

**557.** குருத்துவம் சாராத துறவற சபைகள் எவை?

1. மாறிஸ் சபை
2. அன்புச் சகோதரிகள் சபை
3. தூய ஜோண் பப்ரிஸ் டி லாசால் சகோதரர் சபை
4. பிரான்சிஸ்கன் மறைதூதுச் சகோதரர் சபை

**558.** மாறிஸ் சகோதரர்களின் பணிகள் எவை?

1. கல்விப்பணி
2. இளைஞர்களுக்கான சுய தொழிற்பயிற்சி

**559.** அன்புச் சகோதரர் சபையின் பணிகள் எவை?

1. கல்விப்பணி
2. சமூகப் பணி

**560.** தூய ஜோண் பப்டிஸ் டி லாசால் சகோதரர் சபையின் பணிகள் எவை?

1. கல்விப்பணி
2. இளைஞர் உருவாக்கப் பணி

**561.** பிரான்சிஸ்கன் மறைதூதுச் சகோதரர் சபையின் பணிகள் எவை?

1. மறையை அறிவித்தல்
2. சிறுவர் இல்லங்களை நடாத்துதல்

**562.** அருட்சகோதரிகள் சபைகள் எவை?

1. திருக்குடும்ப கன்னியர் சபை
2. நல்லாயன் கன்னியர் சபை
3. தூய திருத்தூதர்கள் கன்னியர் சபை
4. அன்புச் சகோதரிகள் சபை
5. திருச்சிலுவை கன்னியர் சபை
6. ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை

**563.** திருக்குடும்ப கன்னியர் சபையின் பணிகள் எவை?

1. கல்விப்பணி 2. சமூகப்பணி 3. சிறுவர் 4. இளையோர்
5. குடும்பப் பணி 6. மறைதூதுரைப் பணி 7. பங்குப்பணி

**564.** நல்லாயன் கன்னியர் சபையின் பணிகள் எவை?

1. கல்விப் பணி
2. இளம் பெண்கள் வளர்ச்சியும் பராமரிப்பும்
3. அனாதைகள் முதியோர் இல்லங்கள் நடாத்துதல்

**565.** தூய தூதர்களின் கன்னியர் சபையின் பணிகள் எவை?

1. கல்விப்பணி
2. சிறுவர் பராமரிப்பு
3. இளைஞர், யுவதிகள் பணி

**566.** அன்புச் சகோதரிகள் சபையின் பணிகள் எவை?

1. கல்விப் பணி
2. வயோதிபர் இல்லம் நடாத்துதல்
3. மறைக்கல்விப்பணி
4. பங்குப்பணி

MRS.N.STELLA (B.A (HONS)

**567.** திருச்சிலுவைக் கன்னியர் சபையின் பணிகள் எவை?

1. மருத்துவப் பணி
2. கல்விப்பணி
3. சமூகப்பணி
4. பங்குப் பணி
5. மறைக்கல்விப் பணி

**568.** ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையின் பணிகள் எவை?

1. முதியோர் ஏழைகள் பராமரிப்பு

## பாடம் 17

## பொதுநிலையினர் மறைத்தூதுப் பணி

**569.** பொதுநிலையினர் என்பவர் யார்?
திருநிலையினர் துறவறத்தார் தவிர்ந்த இறைமக்களே பொது நிலையினர் ஆவார்.

**570.** பொது நிலையினர் திருத்தூதுப் பணிக்கான அழைப்பை எதனூடாகப் பெறுகின்றனர்?
திருமுழுக்கினூடாக.

**571.** திருத்தூதுப் பணியை பொதுநிலையினராகிய நாம் எவ்வாறு முன்னெடுக்கலாம்?
நாம் வாழும் உலகில் சான்று பகிர்தல் ஊடாக

**572.** "இறைமக்கள்" என்ற பதம் யார் யாரை உள்ளடக்குகின்றது?
திருநிலையினர், பொதுநிலையினர், துறவறத்தார் அனைவரையும்

**573.** பொதுநிலையினரின் சாட்சிய வாழ்வுக்கு மிகச் சிறந்த களங்கயள் எவை?

1. குடும்பம்
2. தாம் வாழும் சூழல்
3. தொழில் புரியும் இடம்
4. பங்குத்திருச்சபை

**574.** பொதுநிலையினரின் பணி பற்றி கூறும் இறைவாக்கு பகுதி எது?
திருத்தூதர் 18: 26

**575.** பொதுநிலையினரின் பணிக்கான அருட்கொடைகளை எமக்கு வழங்குபவர் யார்?
பரிசுத்த ஆவியானவர்

**576.** கிறிஸ்துவின் முப்பணிகள் எவை?

1. **குரு** – தூய்மைப்படுத்தல் பணி
2. **ஆசிரியர்** - கற்பித்தல் பணி
3. **அரசர்** - வழிநடத்தும் பணி

**577.** இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க அப்பொழுது உங்கள் நற்செயல்களை கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றிப் புகழ்வார்கள் (மத் 5:18) இந்த நற்செய்தி வசனம் பொது நிலையினரின் எப்பணிகள் பற்றி கூறுகின்றது?

1. நற்செய்தி அறிவுப்புப் பணி
2. தூய்மைப்படுத்தல்

**578.** பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி பற்றிய விதித் தொகுப்பு 2ம் வத்திக்கான் சங்கத்தினால் எப்போது வெளியிடப்பட்டது?
1965.11.18 ல்

**579.** "இன்றைய திருச்சபைக்கு உடனடித்தேவை ஆர்வமுள்ள பொதுநிலையினரே" என்ற கோரிக்கையை முன் வைத்த பாப்பரசர் யார்?
6ம் சின்னப்பர்

**580.** இறைமக்களின் பொதுக்குருத்துவம் பற்றிப் பேசும் இறைவார்த்தைப் பகுதி எது?

"நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர் அரச குருக்களின் கூட்டத்தினர் தூய மக்களினத்தார் அவரது உரிமைச் சொத்தான மக்கள்"

**581.** பொது நிலையினர் பங்கேற்பை அதிகரிக்கக் கூடிய அமைப்புக்கள் எவை?

1. அன்பியங்கள்
2. அருட்பணிச் சபைகள்
3. மரியாயின் சேனை
4. வின்செென்ற் டி போல் சபை
5. ஆலயப் பாடகர் குழாம்
6. கத்தோலிக்க மறைப் பாடசாலை
7. திருப்பாலத்துவ சபை
8. லக்றிவி
9. இயேசுவின் திரு இருதய சபை
10. கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
11. இளம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம்
12. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்

**582.** பொதுக் குருத்துவத்தின் மூன்று பணிகள் எவை?

1. மேய்ப்புப்பணி 2. குருத்துவப்பணி 3. இறைவாக்குப்பணி

**583.** பொதுநிலையினரின் பங்கேற்புப் பற்றி 2ம் வத்திக்கான் சங்கம் கூறுவது என்ன?

தம் அறிவு, தகுதி, மேன்மைக்கு ஏற்ப திருச்சபையின் நலனை சார்ந்தவற்றில் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அவர்களுக்கு உரிமை உண்டு. சில வேளைகளில் அது அவர்களது கடமையும் ஆகின்றது. இந்த அலுவல் இதற்கு என்று திருச்சபையால் அமைக்கப் பெற்ற அமைப்புக்களின் மூலம் தேவைக்கேற்ப நிறைவேற்றப்படலாம். (திருச்சபை இல: 37)

**584.** ஒரு பங்கில் பொதுநிலையினர் பணிகள் அதிகரிப்பதற்கு இறை மக்கள் மத்தியில் என்ன வகையான உணர்வு அதிகரிக்கப்பட வேண்டும்?

குழும உணர்வு அதிகரிக்கப்பட வேண்டும்

**585.** "ஆசிபா (ASIPA)" என்றால் என்ன?

ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை

**586.** ASIPA யின் விரிவாக்கம் யாது?

ASIA INTEGRAL PASTORL APPROCH

**587.** குருத்துவத்தின் இரு பிரிவுகளும் எவை?

1. பணிக்குருத்துவம்
2. பொதுக்குருத்துவம்

**588.** பொதுநிலையினர் ஆற்றக் கூடிய பணிகள் எவை?

1. பீடப்பணியாளர்
2. வாசகர்
3. திருவழிபாட்டு மன்றாட்டுகளுக்கு தலைமை ஏற்றல்
4. செப வழிபாடுகளை நடாத்துதல்
5. மறைக் கல்வியைப் போதித்தல்
6. தொடர்பு ஊடகங்களினூடாக நற்செய்தியை அறிவித்தல்

**589.** அன்பியம் என்றால் என்ன?

அயலில் வாழும் சில கிறிஸ்தவ குடும்பங்கள் ஒன்று சேர்ந்து இறைவார்த்தையின் ஒளியில் சிந்தித்து இறையன்பு பணியில் ஈடுபடுவதன் மூலம் திருச்சபையின் பணியில் தம்மை இணைத்துக் கொள்ளும் செயற்பாடே அன்பியமாகும்.

**590.** கத்தோலிக்கமறைப் பாடசாலை என்பது யாது?

சிறுவர்களுக்கு மறையை அறிவித்தலாகும். இப்பணியை குருக்கள் துறவிகளோடு இணைந்து பொது நிலையினரும் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவுகின்றது.

MRS.N.STELLA ( B.A (HONS)

**591.** கத்தோலிக்க மறைப் பாடசாலையின் குறிக்கோள் யாது?

1. இறையரசைப் பரப்புதல்
2. கிறிஸ்துவோடு ஆழ்ந்த உறவை ஏற்படுத்துதல்.
3. விழுமியங்கள் நிறைந்த கத்தோலிக்க சிறார்களை உருவாக்குதல்

**592.** கத்தோலிக்க மறைப் பாடசாலையின் பணி யாது?

1. வாரம் தோறும் மறைப் பாடசாலையை நடாத்தி மாணவர்களை கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்தல்.
2. தினம் ஒன்றை நடத்துதல்
3. திருவிவிலிய அறிவுப் போட்டியை நடாத்துதல்
4. சுய விருப்புடன் முன் வந்து சிறார்களுக்கு மறைக்கல்வி வழங்குதல்.
5. மறையாசிரியரின் அறிவைக் காலத்திற்கு ஏற்றவாறு வளர்த்தல்.
6. தேசிய மறையாசிரியர் பரீட்சைக்காக மறையாசிரியர்களை ஆயத்தம் செய்தல்

**593.** மறையை அறிவித்தல் என்பது குருக்கள், துறவிகளின் பணிமட்டுமல்ல, பொதுநிலையினரின் இறைவாக்குப் பணியாகும் என கூறும் நூல்?

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி - அதிகாரம் - 904

**594.** "இறைவாக்குப் பணியின் பிராதான பணியாக விளங்குவது மறையை அறிவித்தலாகும" என கூறும் நூல்?

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி - அதிகாரம் - 905

**595.** மரியாவின் சேனை என்றால் என்ன?

பொது நிலையினரால் பொதுநிலையினருக்காக மரி அன்னையின் பரிந்துரையோடு திருச்சபைத் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படும் புனிதத் தன்மை வாய்ந்த ஓர் திருத்தூதுப் பணியாகும். இச் சபை திரு பிராங்டவ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இது இன்றைய கிறிஸ்தவ உலகில் பரந்ததும் கன்கு திட்டமிடப்பட்டதுமான ஓர் பொது நிலையினரின் மறை தூது இயக்கமாகும்.

**596.** மரியாயின் சேனை சபை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

திரு பிராங்டவ் என்பவரால்

**597.** மரியாயின் சேனையின் குறிக்கோள் யாது?

1. கிறிஸ்துவை அறிந்து தூய வாழ்க்கை வாழுதல்.
2. மரியன்னையை முழுமனதுடன் அன்பு செய்து அவரை உலகிற்கு அறிமுகம் செய்து அர்ப்பணிப்புடனும் தெளிவான குறிக்கோளுடனும் வாழுதல்.
3. செபத்தினாலும் செயலினாலும் தனது ஆன்மீக வாழ்வை உறுதி உள்ளதாக்கி கொள்வதுடன் அதன் வழியாகச் சமுதாயத்தை புனிதப்படுத்தல்.
4. மறைதூதுப் பணிக்காகவும் அதன் பிரதான நோக்கமாகிய ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும் செயற்படுதல்.

**598.** மரியாயின் சேனையின் பணி யாது?

1. சிறுவர்களுக்கு கற்றுக் கொடுத்தல்.
2. நற்செய்தியை எடுத்துச் செல்லும் தூதுப் பணியில் ஈடுபடுதல்.
3. செபமாலையின் ஊடாக மரியன்னை பக்தியை வளர்த்தலும் பரப்புதலும்
4. வீடு, சந்திப்பும் தேவைகளை ஆராய்ந்து பார்த்தலும்.
5. வைத்தியசாலைகளை தரிசித்தலும் நோயளரைச் சந்தித்தலும்

MRS.N.STELLA (B.A HONS)

**599.** இயேசுவின் திரு இருதயச் சபை என்றால் என்ன?

இயேசுக் கிறிஸ்து நமக்குக் காட்டும் அன்புக்குப் பிரதியன்பு காட்ட அவரால் நிறுவப்பட்டு தூய ஆவியின் பிரசன்னத்தில் தொடர்ந்து நிலவும் மாபெரும் அப்போஸ்தலிக்க சபை.

**600.** இயேசுவின் திரு இருதயச் சபையின் குறிக்கோள் யாது?

1. திரு இருதயப் பக்தியை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அர்ப்பணத்துடன் செயற்படுதல்.

**601.** 2. பங்குப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தல் உதவுதல்.

3. சமுதாயத்தில் முன்மாதிரிகையான தூய்மையான வாழ்வு வாழ்தல்

4. இறைவார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுதல்

**602.** இயேசுவின் திரு இருதயச் சபையின் பணிகள் எவை?

1. மாதத்திற்கு ஒருமுறையேனும் திருமணித்தியாலம் நடாத்துதல்
2. முதல் வெள்ளிக்கிழமைகளில் திருப்பலியில் பங்குபற்றித் திவ்வியநற்கருணை உட்கொள்ளல்.
3. நற்கருணை திருவிழா, திரு இருதயத்தின் பெருவிழா, கிறிஸ்து அரசர் பெருவிழா நடாத்துதல்
4. மாதத்தில் ஒருமுறையேனும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுதல்.
5. மாதத்தின் முதல் வியாழக்கிழமைகளில் குடும்பமாகவோ அல்லது தனித்தோ வீடுகளில் திருமணித்தியாலம் செய்தல்.

**603.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் (YCS) என்பது யாது?

இவ்வமைப்பு **அதிமேன்மை தங்கிய லியோ ஜோசப் கர்த்தினால் கர்டயின் ஆண்டகையால்** ஆரம்பிக்கப்பட்டது. இன்று உலகம் முழுவதும் பரவி வளர்ந்துள்ளது. தற்போது 110 நாடுகளில் இவ்வமைப்புச் செயற்படுகிறது. இதன் சர்வதேச தலைமைப்பீடம் பிரான்சிலும் ஆசியாவுக்கான தலைமைப்பீடம் பிலிப்பைனிலும் உள்ளது. இதன் விருது வாக்கு "நாம் புரட்சி செய்ய மாட்டோம் புரட்சி நாம் ஆவோம்". இதில் 13 - 19 இடைப்பட்ட வயதையுடைய கத்தோலிக்க மாணவ மாணவியர் உறுப்பினராகலாம். மாணவர்களின் பிரச்சனைகள் எதிர்ப்புக்கள் பற்றி கலந்துரையாடி நேரில் வழிகாட்டி மனிதத்துவத்தை வளர்க்கக் கூடிய வகையில் அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப செயல்படும் அமைப்பாகும்.

**604.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தில் அங்கத்துவம் பெறும் வயதெல்லை யாது?

13 – 19 இடைப்பட்டவர்கள்

**605.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

லியோ ஜோசப் கர்த்தினால் கர்டயின் ஆண்டகையால்

**606.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் எத்தனை நாடுகளில் செயற்பட்ட வருகின்றது?

110 நாடுகளில்

**607.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் சர்வதேச தலைமைப்பீடம் அமைந்துள்ள இடம்?

பிரான்ஸ்

**608.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் ஆசியாவிற்கான தலைமைப்பீடம் அமைந்துள்ள இடம்?

பிலிப்பைன்

**609.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் விருது வாக்கு யாது?

"நாம் புரட்சி செய்ய மாட்டோம் புரட்சி நாம் ஆவோம்"

MRS.N.STELLA (B.A (HONS)

**610.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் குறிக்கோள் யாது?

1. கிறிஸ்துவின் வாழ்வில் மிளிர்ந்த மதிப்பீடுகளையும் மனநிலையையும் தமக்குள் வளர்த்துக் கொள்ளுதல்.
2. மாணவர்களின் பிரச்சனைகள், கல்வியினால் கிடைக்கும் சாதகமான விளைவுகள் பற்றி உண்மை நிலையை ஆராய்ந்து அவர்களை நிறைவான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லல்.
3. பணிவு, நல்லுறவு, உண்மை, சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம், நீதி என்பவற்றினூடாக இறையாட்சிக்காக செயற்படல்.

**611.** இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் துணைக்குறிக்கோள் யாது?

1. உண்மையான தலைமைத்துவத்தை ஏற்படுத்தல்.
2. சாதூரியத்தையும் ஆற்றல்களையும் வளர்த்தல்.
3. மனிதாபிமானத்தைக் கட்டியெழுப்புதல்.
4. மனப்பாங்கு, கொள்கை மாற்றத்தை உருவாக்குதல்.
5. தன் குடும்பம் மற்றும் சமூகம் பற்றிய அறிவை வளர்த்தல்.
6. ஆன்மீகப் பண்புகளைக் கொண்ட நிறைவான ஒரு மனிதனை உருவாக்குதல்.
7. மூவொரு கடவுள், திருவிவிலியம், திருச்சபை பற்றிய அறிவை வளர்த்தல்.
8. இறையரசின் மதிப்பீடுகளால் நிறைந்த ஓர் கிறிஸ்தவனை உருவாக்குதல்.

**612.** கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் செயற்படி முறைகள் எவை?

கத்தோலிக்க மாணவ இயக்கத்தின் செயல்முறை அதன் ஆன்மீகமாகக் கருதப்படுகின்றது. அதன் படிமுறைகள் மூன்றாகும்.

1. பார்த்தல் - See (Awareness) கிறிஸ்துவின் கண்களால் உலகைப் பார்த்தல்.
2. தீர்மானித்தல் - Judge (Reflection) கிறிஸ்துவின் மனநிலையில் உலகை விபரித்தல்
3. செயல் - Act (Action) கிறிஸ்து செயற்பட்டவாறு செயற்படல்.

**613.** கட்டிளமைப் பருவத்தில் இருப்போரின் வாழ்வைக் கட்டியெழுப்பி உறுதிபெறச் செய்வதற்கு அவசியமான 3H எவை?

1. Holy Eucharist – திருப்பலி
2. Holy Bible – திருவிவிலியம்
3. Holy Rosary – திருச் செபமாலை

**614.** தூய வின்சன் டி போல் சபை என்பது யாது?

மிகவும் வறுமைப்பட்ட ஏழை, எளியவர்கள், அனாதைகள், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோர் நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள், வயோதிபர், கைவிடப்பட்டோர் போன்றவர்களுக்கு உதவும், அன்பு காட்டும் சர்வதேச தொடர்புடைய ஓர் திட்டமிடப்பட்ட பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க பக்திச் சபையாகும். **அருளாளர் பிறடிக் ஓசானம்** அவர்களால் கி.பி 1833 இல் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

**615.** தூய வின்சன் டி போல் சபை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

அருளாளர் பிறடிக் ஓசானம் அருளாளர் பிறடிக் ஓசானம்

**616.** தூய வின்சன் டி போல் சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

கி.பி. 1833

MRS.N.STELLA (B.A (HONS))

**617.** தூய வின்சன் டி போல் சபையால் எதவி பெறுபவர்கள்?

1. ஏழை எளியவர்கள்
2. அனாதைகள்
3. அனார்த்தங்களால் ாதிக்கப்பட்டவர்கள்
4. நோயாளிகள்
5. மாற்றுத் திறனாளிகள்
6. வயோதிபர்கள்
7. கைவிடப்பட்டோர்

**618.** தூய வின்சன் டி போல் சபையின் குறிக்கோள் யாது?

1. இனம், மதம், சாதி, நிறம் ஆகிய பேதங்களைத் தவிர்த்து அயலானுக்கு உதவும் இரக்கப்பணி மூலம் தனது கிறிஸ்தவ வாழ்வை வெளிப்படுத்துவதற்கு வழி வகுத்தல்.
2. இதனைச் சமூக சேவையாக மட்டும் கருதாது இரக்கத்தின் செயலாக நினைத்துச் செயற்படல்.

**619.** தூய வின்சன் டி போல் சபையின் பணிகள் யாது?

துன்பப்படும் அல்லற்படும் மக்களுடைய வேதனைகளைக் கண்டு அதனை தமதாக்கிக் கொண்டு அவர்கள் மத்தியில் மேற்கொள்ளும் பணிகளாவன:-

1. அடுத்தவருக்கு உதவுதல், தனது கரிசனையையும், நட்பையும் வெளிப்படுத்துதல்.
2. தனது ஆற்றல்களையும், திறமைகளையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளல்.
3. வயோதிப இல்லங்களை நடாத்துதல்.
4. பாலர் பாடசாலைகளை நடாத்துதல்.
5. சிகிச்சை முகாம்களை நடாத்துதல்.

**620.** கட்டிளமைப் பருவத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளக் கூடிய சபைகள் எவை?

1. இளையோர் மரியாயின் சேனை.
2. மரியாயின் சிறுவர் சபை.
3. புனித வின்சன் டி போல் சபை

**621.** கட்டிளமைப் பருவத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளக் கூடிய இயக்கங்கள் எவை?

1. ஆலய பாடகர் குழாம்
2. கத்தோலிக்க மறைப் பாடசாலை
3. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்.
4. இயேசுவின் திரு இருதயக் கூட்டம்.

## பாடம் 18

## சூழலை பாதுகாத்தல்

**609.** செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த **சியடைஸ்** என்பவர் சூழல் பற்றி கூறியது யாது?

நதிகள் நமது சகோதரர்கள் அவை நமது தாகத்தை தீர்க்கின்றன. நமது படகுகளை இடத்துக்கிடம் எடுத்துச் செல்கின்றன. எங்களுடைய மற்றும் பிள்ளைகளினதும் பசியைப் போக்குகின்றன. நிலம் நம்மிலேயே ஓர் பகுதியாகும். நாம் நிலத்திலேயே ஓர் பகுதியினராவோம். நறுமணம் வீசும் மலர்கள் நம் சகோதரிகளாகும். காட்டிலே ஓடி, ஆடி விளையாடும் மான்கள், குதிரைகள், கழுகுகள் நமது சகோதரர்கள் ஆகும். மலை உச்சிகளில் புற்தரைகளில் காணப்படும் வளங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு குடும்பத்திற்குரியவை ஆகும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**610.** செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த **சியடைஸ்** என்பவர் நதியை பற்றி கூறியது யாது?

1. நதிகள் நமது சகோதரர்கள்
2. நமது தாகத்தை தீர்க்கின்றன
3. நமது படகுகளை இடத்துக்கிடம் எடுத்துச் செல்கின்றன.
4. எங்களுடைய மற்றும் பிள்ளைகளினதும் பசியைப் போக்குகின்றன.

**611.** செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த **சியடைஸ்** என்பவர் நிலம் பற்றி கூறியது யாது?

1. நிலம் நம்மிலேயே ஓர் பகுதியாகும்.

**612.** செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த **சியடைஸ்** என்பவர் மலர்கள் பற்றி கூறியது யாது?

நம் சகோதரிகள்

**613.** செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த **சியடைஸ்** என்பவர் மலர்கள் பிராணிகள் பற்றி கூறியது யாது?

நமது சகோதரர்கள்

**614.** படைப்பு வரலாற்றைக் கூறும் மரபுகள் எவை?

1. முதல் மரபு 2. இரண்டாம் மரபு

**615.** உலகப் படைப்பு எழுதப்பட்ட மரபு யாது?

குருமரபு

**616.** உலகப்படைப்பு எழுதப்பட்ட காலப்பகுதி எது?

கி.மு 6ம் நூற்றாண்டு

**617.** முதல் வரலாற்றுக்குரிய மரபு எது?

P மரபு

**618.** இரண்டாம் வரலாற்றுக்குரிய மரபு எது?

J மரபு

**619.** இறைவன் மனிதனுக்குக் கொடுத்த கட்டளை யாது?

பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்

**620.** மனிதப் படைப்பின் சிறப்பு யாது?

இறைசாயலாகப் படைக்கப்பட்டது.

**619.** "ஆளுதல்" என்பதன் எபிரேயப் பதம் யாது?

றதா

**620.** "றதா" என்பதன் பொருள் யாது?

பராமரிப்பு

**621.** படைப்பின் இரண்டாம் கதையின் படி இறைவன் மனிதனுக்கு கொடுத்த பொறுப்புக்கள் எவை?

1. பயிரிடுதல் - உழைத்து உருவாக்குதல்
2. பாதுகாத்தல் - பராமரித்தல்

**622.** உழைப்பின் வழி உருவாக்குதல் என்பதை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?

அபாத் (abath) அபாட்

அபாத் - உழைத்து உருவாக்குதல்

**623.** பாதுகாத்தல் என்பதன் எபிரேய பதம் யாது?

ஷமார் (Shamar)

**624.** இறைவனின் படைப்பைப் பாதுகாக்கா விட்டால் ஏற்படும் தீமைகள் எவை?

1. நோய் 2. வரட்சி 3. புயல்
4. மண்சரிவு 5. சுனாமி 6. வெள்ளம்

MRS.N.STELLA (B.A (HONS)

625. சூழலைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பு உம்மிடம் கொடுக்கப்பட்டிருந்தால் அதன் மட்டில் உமது செயற்பாடு யாது?

1. இயற்கையை அன்பு செய்து மதித்தல்
2. நிலத்தின் வளத்தைப் பாதுகாத்தல்
3. வாழும் சூழலை அழகுபடுத்தல்.
4. சூழல் சமநிலையைப் பேணுதல்.
5. சூழல் மாசடைவதைத் தவிர்க்க உதவுதல்.

626. மனிதப் படைப்பைப் பற்றிக் கூறும் மரபு எது?
யாவே மரபு

627. மனிதப் படைப்பின் மூன்று படிகளும் எவை?
மண்ணில் இருந்து மனித உடல் படைக்கப்படுதல்.
2. அவனின் நாசிகளில் ஊதி உயிர் கொடுக்கப்படுகின்றது.
3. துணையை அவன் விலாவில் இருந்து படைத்தல்.

628. "வாழ்வளிக்கும் மரம்" என்பதன் பொருள் யாது?
சாகா மரம்

629. "நன்மை தீமை" அறியும் மரம் என்பதன் பொருள் யாது?
சுயாதீனம், எதையும் செய்யும் ஆற்றல்

630. ஏவாளுக்குப் பெயரிட்டது யார்?
ஆதாம்

631. இறைவன் பெண்ணைப் படைத்து ஆணிடம் கூட்டி வந்தபோது ஆதாம் கூறியது என்ன?
"இதோ, என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்றுஅழைக்கப்படுவாள்.

## பாடம் 19
## சமாதானம்

632. சமாதானம் என்பதன் எபிரேயச் சொல் யாது?
ஷாலொம்

633. ஷாலொம் என்பதன் பொருள் யாது?
உள்ளார்ந்த அமைதி

634. அமைதியின் நான்கு தூண்களும் எவை?
1. உண்மை 2. நீதி 3. அன்பு 4. சுதந்திரம்

635. உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் ஆகிய நான்கும் அமைதியைத் தாங்கும் தூண்கள் என்று கூறிய திருத்தந்தை யார்?
திருத்தந்தை 23ம் அருளப்பர்

636. அமைதி நீதியால் விளையும் பயிர் என்றவர் யார்?
எசாயா இறைவாக்கினர்

637. அமைதியைப் பற்றிக் கூறும் சுற்றுமடல் யாது?
அவனியில் அமைதி

638. அவனியில் அமைதி என்ற சுற்று மடலை எழுதியவர் யார்?
திருத்தந்தை 23ம் அருளப்பர்

MRS.N.STELLA (B.A (HONS)

**639.** அமைதி அல்லது சமாதானம் என்பதன் பொருள் யாது?

சகோதர அன்பாலும் இறையன்பாலும் பாரபட்சமற்ற தன்மையாலும் கட்டியெழுப்பப்படுவது.

**640.** அமைதி பற்றிய கிறிஸ்தவப் படிப்பினைகள் எவை?

1. பிறரையும் அவர்களது உரிமைகளையும் மதித்தல்.
2. மற்றவரின் தேவை மட்டில் விழிப்பாயிருத்தல்.
3. சகோதர அன்போடு செயற்படுதல்.
4. நீதியைக் கட்டியெழுப்புதல்

**641.** அமைதி பற்றி கூறும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின் அதிகாரங்கள் எவை? 2302, 2306

**642.** அமைதி ஏன் அவசியம்?

மனித வாழ்வைப் பாதுகாக்கவும் அதனைக் கட்டியெழுப்பவும் அவசியமாகும்.

**643.** அமைதிக்கு எதிரான குணங்கள் யாவை?

1. பொறாமை 2. வைராக்கியம் 3. பழிவாங்குதல்

**644.** அமைதியை பற்றிக் கூறும் மலைப்பொழிவு பகுதி எது?

அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.

**645.** அமைதியை ஏற்படுத்த இன்று திருச்சபை கையாளும் ஒரு வழி?

ஓப்புரவு அருளடையாளத்தை ஏற்படுத்தி பாவங்களுக்கு மன்னிப்பளித்து மனித உள்ளங்களில் சமாதானத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுகின்றது.

**646.** அமைததிக்கு எதிரானவர்கள் பற்றி இயேசுவின் போதனை யாது?

1. தம் சகோதர, சகோதரிகளிடம் சினம் கொள்பவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்.
2. தம் சகோதரனையோ சகோதரியையோ முட்டாள் என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவர்.
3. அறிவிலியே என்பவர் எரிநரகத்திற்கு ஆளாவர்.

**647.** அமைதியை ஏற்படுத்துதல் தொடர்பாக இயேசுவின் போதனை யாது?

1. உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்.
2. உங்களைத் துன்புறுத்துவோருக்காக செபியுங்கள்.

**648.** சமாதானத்தைக் கட்டியெழுப்பத் தேவையானவை?

1. நீதி தேவை.
2. அன்பு தேவை
3. பலவீனமானவர்களைப் பாதுகாக்க வேண்டும்.
4. வன் செயல்களைக் களைதல் வேண்டும்.
5. மனித உயிர்களைக் கொலை செய்யக் கூடாது.
6. மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

**649.** அமைதிக்கு எதிரான செயல் என்ன?

போர்

**650.** போருக்கான காரணங்கள் எவை?

1. அநீதி 2. பொருளாதார ஏற்றத்தாழ்வு
3. பொறாமை 4. அவநம்பிக்கை

MRS.N.STELLA (B.A (HONS)

**651.** போர் ஏற்படுவதைத் தடுக்க செய்யக் கூடியவை எவை?

1. போர் கருவிகளை உற்பத்தி செய்வதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருதல்
2. போருக்குப் பயன்படுத்தும் பணத்தை வறுமையை ஒழிக்கப் பயன்படுத்துதல்.
3. மக்கள் தேவையான அளவு உணவு, உடல் நலம், கல்வி அறிவு பெற அனைத்துலக நிறுவனங்கள் முயற்சி எடுத்தல்.
4. மனித மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தல்.

**652.** அமைதியை ஏற்படுத்துவதில் சிறந்த முன்மாதிரிகையாளர் யார்?
புனித பிரான்சிஸ் அசீசியார்

**653.** மரம் செடிகளுடன் உரையாடும் புனிதர் யார்?
புனித பிரான்சிஸ் அசீசியார்

**654.** புனித பிரான்சிஸ் அசீசியாரின் அமைதிக்கான செபத்தை எழுதுக?
ஆண்டவரே உமது அமைதியின் கருவியாக என்னை ஆக்கியருளும் எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும் எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும் எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும் எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும் எங்கு துன்பம் உள்ளதோ அங்கு இன்பத்தையும் நான் பரப்ப அருள் தாரும். நான் ஆறுதலுக்காக அலைவதை விட்டு ஆறுதலைக் கொடுக்க உழைப்போனாக என்னைப் பிறர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விடுவித்து பிறரைப் புரிந்து கொள்ள உழைப்போனாக என்னை பிறர் அன்பு செய்ய வேண்டும் என்பதை விடுத்து பிறரை அன்பு செய்ய முற்படுவோனாக ஏனெனில் கொடுப்பதன் மூலம் தான் பெற்றுக் கொள்ள முடியும். மன்னிப்பதன் மூலம் தான் மன்னிப்படைய முடியும் இறப்பதன் மூலம் தான் முடிவில்லாத வாழ்வுக்கு பிறக்க முடியும்.

**655.** நாம் அமைதியின் கருவிகளாக இருக்க செய்ய வேண்டியவை எவை?

1. எப்போதும் அமைதியாக இருத்தல்.
2. ஒருபோதும் நன்மைக் கெதிராக செயற்படாதிருத்தல்.
3. நல்ல மனதை எம்முள் ஏற்படுத்தல்.
4. நீதிக்கும், உண்மைக்கும், தியாகத்திற்கும் மதிப்பளித்தல்.
5. பெற்றுக் கொண்டதற்கு நன்றி கூறுதல்.
6. கொடுத்ததை மறந்து வாழுதல்
7. நற்செய்தியை வெளிப்படுத்துதல்.

**656.** பாடசாலை சமூகத்தினுள் சமாதானத்தை பேணக் கூடிய வழிகள் 5 தருக?

1. சக மாணவருடன் சண்டையிடுவதைத் தவிர்த்தல்.
2. இனிய பண்பான வார்த்தைகளைப் பேசுதல்
3. மாணவரின் கடமைகளை அன்பாக செய்வித்தல்.
4. அமைதியாக இருத்தல்.
5. தேவையில் இருப்போருக்கு உதவுதல்.

MRS.N.SHEELA (B.A.(HONS))

## பாடம் 20

## ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்கள்

**657.** விண்ணக பேரின்பத்தை அடைய இருக்க வேண்டிய தகுதிகள்?
ஆன்மீக உடல் சார் இரக்கச் செயல்களை செய்தல்

**658.** ஆன்மீக இரக்கச் செயல்கள் என்றால் என்ன?
ஒருவருடைய ஆன்ம நலன் கருதி செய்யும் இரக்கச் செயல்

**659.** ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்கள் 7 தருக?

1. அறிவற்றோருக்கு கற்பிப்பது
2. ஐயமுள்ளோருக்கு நம்பிக்கை ஊட்டுவது.
3. துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது.
4. பாவிகளை மனம் திருப்புவது.
5. நிந்தைகளை பொறுமையோடு சகிப்பது.
6. குற்றங்களை மன்னிப்பது.
7. வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் செபிப்பது.

**660.** உடல் சார்ந்த இரக்கச் செயல் என்பது யாது?
ஒருவருடைய உடல் சார்ந்த நன்மை கருதி செய்யும் இரக்கச் செயலாகும்.

**661.** உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் 7 யும் தருக?

1. பசித்தோருக்கு உணவு கொடுப்பது.
2. தாகமாயிருப்போருக்கு குடிக்கக் கொடுத்தல்.
3. உடையற்றோருக்கு உடை கொடுப்பது.
4. அனாதைகளுக்கு இல்லிடம் அளிப்பது.
5. நோயாளரைத் தரிசிப்பது
6. சிறையிலிருப்போரை தரிசிப்பது.
7. இறந்தோரை அடக்கம் செய்வது.

**662.** ஆன்மா சார்ந்த இரக்கச் செயல் பற்றி கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் (300)

**663.** உடல் சார்ந்த இரக்கச் செயல் பற்றி கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் (301)

**664.** இரக்கச் செயலுக்கு அடிப்படையாக அமைவது எது?
அன்பு

**665.** ஒருவர் மீதும் காட்டும்அன்பு செயல் வடிவம் பெற வேண்டும் என்பதை தூய யாக்கோபு எவ்வாறு கூறினார்?
ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் அல்லாதிருக்கும் போது அவர்களுள் உடலுக்குத் தேவையான எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து "நலமே சென்று வாருங்கள்" குளிர்ந்து காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள் என்பரென்றால் அதனால் பயன் என்ன. (யாக் 2:15-16)

**666.** இரக்கச் செயல்கள் பற்றி தோபி 1: 11 ல் கூறப்படுவது யாது?
பசியுற்றோருக்கு உணவும் ஆடையற்றோருக்கு ஆடையும் அளித்து வந்தேன் என் இனத்தாருள் யாருடைய சடலமாவது நினிவே நகர மதில்களுக்கு வெளியே எறியப்பட்டிருக்கக் கண்டால் அதை அடக்கம் செய்து வந்தேன்.

MRS.N.STELLA (B.A (HONS))

**667.** இறுதித் தீர்ப்பு எப்போது இடம் பெறும்?
இயேசுவின் இரண்டாம் வருகையின் போது

**668.** இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள வேண்டியது யாது?

1. இறை கட்டளைகளை கடைப்பிடித்தல்.
2. ஆன்ம, உடல் சார்ந்த இரக்கச் செயல்களை செய்தல்.

**669.** ஆன்ம இரக்கச் செயல் என்பது யாது?
ஒருவருடைய ஆன்ம நலன் கருதியே இரக்கச் செயல்கள் ஆன்ம இரக்கச் செயல் எனப்படும்

**670.** உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்றன இங்கு குறிப்பிடப்படும் மனிதனின் அடிப்படைத் தேவை என்பது யாது?
உணவு, நீர், உடை, இல்லிடம், நோய், துன்பத்தில் ஆறுதல் அளிப்பதாகும்.

## பாடம் 21
## திருச்சபையின் சட்டங்கள்

**671.** திருச்சபைத் தலைவர்களின் தலையாய பொறுப்பும் கடமையும் எது?
அனைத்து கத்தோலிக்க மக்களை இறைவார்த்தைக்குள் நேரிய வழியில் பயணிக்க தேவையான பின்னணியை அமைத்துக் கொடுத்தல்

**672.** நாம் இறைமக்களாக வாழ்வதற்கு எமக்கு உதவுவது எது?

1. இறை கட்டளைகள் - 10
2. திருச்சபையின் கட்டளைகள் - 05

**673.** இறை கட்டளைகள் எத்தனை? அவை எவை?
10

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர் என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.
3. ஓய்வு நாளைத் தூயதாக கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.
4. உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யதே.
7. களவு செய்யாதே.
8. பிறருக்கு எதிராக பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் மனைவினைக் காமுறாதே.
10. பிறருக்குரியது எதையுமே கவர்ந்நிட விரும்பாதே.

**674.** திருச்சபையின் சட்டங்கள் எத்தனை? அவை எவை?
**05**

1. ஞாயிறு தினங்களிலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்கு கொள்வது.
2. வருடத்தில் ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவது.
3. பாஸ்கா காலத்தில் திவ்விய நற்கருணையை உட்கொள்வது.
4. ஒரு சந்தி நாட்களில் ஒரு சந்தியும் சுத்த போசனமும் அனுசரித்தல்.
5. திருச்சபையின் செயற்பாட்டிற்கு உதவுதல்.

MRS.N.STELLA (B.A (HONS))

**675.** திருச்சபையின் சட்டங்களில் தவிர்க்கப்பட்ட சட்டம் எது?
திருமணத்தடையுள்ள உறவு முறையாரோடு திருமணம் செய்யாது இருப்பது.

**676.** ஞாயிறு தினங்களிலும் கடன் திரு நாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கு கொள்வது என்பது யாது?
ஞாயிறு திருப்பலியில் பங்கு கொள்வது தன் மேல் சுமத்தப்படும். ஓர் சுமையாக கருதாது. இறைவன் மட்டில் எமக்குள்ள அன்பையும் நன்றியையும் தெரிவிக்கும் சந்தர்ப்பமாகக் கொண்டு முழுத் திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும். முழுத் திருப்பலியில் பங்கு கொள்ளல் என்பது வருகை பாடல் முதல் இறுதிப்பாடல் வரை திருப்பலியில் பங்கு கொள்வதாகும்.

**677.** ஞாயிறு திருப்பலியில் பங்கு பற்றாமல் இருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள்?
1. நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருத்தல்
2. அண்மித்த ஆலயங்களில் திருப்பலி நடைபெறாமை,
3. மிக முக்கிய பணியில் ஈடுபட்டிருத்தல்

**678.** ஞாயிறு திருப்பலியில் பங்கு பற்றாமல் இருக்கும் சந்தர்ப்பம் ஏற்படின் அவர் அன்றைய தினத்திற்கு பதிலாக வேறு எத்தினத்தில் திருப்பலியில் பங்கு கொள்ளலாம்?
ஞாயிறு தினத்திற்கு முதல் நாள் மாலைத் திருப்பலியில்

**679.** வருடத்தில் ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளத்தை பெறல் என்பதன் பொருள் யாது?
பொதுவாக 7 வயதை தாண்டும் போது பாவமன்னிப்பு பெற பிள்ளைகள் ஆயத்தப்படுத் தப்படுகின்றனர். சாவான பாவத்தை ஒருவர் செய்தால் உடனடியாக பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும். எனினும் கிறிஸ்தவன் ஒருவன் அடிக்கடி பாவ மன்னிப்பு பெறுதல் நல்லது. அவ்வாறு இல்லாவிடினும் வருடத்தில் ஒரு முறையாவது பாவ மன்னிப்பு பெறுதல் வேண்டும். ஒப்புரவு அருளடையாளத்தை பெறுவதன் பயன் பாவங்களுக்கு மன்னிப்பும் பாவநாட்டங்களிலிருந்து விலகி வாழவும் அருள் கிடைக்கின்றது.

**680.** சாவான பாவங்கள் எவை?
கொலை, கொள்ளை, விபச்சாரம்

**681.** கிறிஸ்தவன் ஒருவன் திருவிழாக்கள் முன் ஏன் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும்?
அருள் நிலையோடு விழாக்களில் பங்கு கொள்வதற்காக.

**682.** பாவமன்னிப்பு பெற வேண்டிய திருவிழாக்கள் எவை?
1. பாஸ்கா விழா (உயிர்ப்பு தினம்)
2. கிறிஸ்து பிறப்பு விழா
3. ஆலயத் திருவிழா

**683.** பாஸ்கா காலத்தில் நற்கருணையை உட்கொள்ளல் என்பதன் பொருள் யாது?
திருப்பலியின் பங்கு கொள்ளும் ஒவ்வொரு பொழுதும் நற்கருணையை பெற வேண்டும். ஏனெனில் திருப்பலி முழுமை லெபற நற்கருணையை பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக பாஸ்கா காலத்தில் (தபக்காலத்தில்) நற்கருணை பெறுதல் கட்டாயமானது. ஏனெனில் எமது ஆன்மாவை நலமடையச் செய்ய வேண்டியது நமது கடமை ஆகும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**684.** கிறிஸ்தவர்கள் குறிப்பிட்ட நாட்களில் ஒரு சந்தியும் சுத்தபோசனமும் அனுசரிப்பது என்பது பொருள் யாது?

கிறிஸ்தவ பக்தியிலும் நம்பிக்கையிலும் வாழும் கிறிஸ்தவனுக்குள்ள கடமைகளுள் இது ஒன்றாகும். இதில் சுத்த போசனம் என்பது தரைவாழ் மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருத்தல் ஆகும். இத்தகைய நாட்களாவன.

1. விபூதிப்புதன்
2. பெரிய வெள்ளி
3. வருடத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமை ஒருசந்தி என்று ஒரு நாளில் ஒரு வேளை நிறை உணவை உண்ணுதல் ஆகும்.

**685.** கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கும் புனிதமான நாட்கள்?

1. விபூதிப்புதன்
2. பெரிய வெள்ளி
3. வருடத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமை

**686.** கிறிஸ்தவர்கள் குறிப்பிட்ட நாட்களில் ஒரு சந்தியும் சுத்தபோசனமும் அனுசரிப்பதன் நோக்கங்கள் யாது?.

1. தனது பாவங்களுக்கு பரிகாரமாக
2. மனதை கட்டுப்படுத்த பயிற்றுவிப்பதற்காக
3. இயேசுவை 40 நாட்கள் உணவு உண்ணாதிருந்ததை பின்பற்றும் நோக்குடன்.

**687.** ஒரு சந்தி பிடிக்கும் வயதெல்லை யாது?

18 – 60

**688.** ஒருசந்தி பிடிப்பதில் விலக்கப்பட்டவர்கள்?

1. நோயுற்றோர்
2. வயோதிபர்
3. சிறுவர்கள் (1 – 17)

**689.** திருச்சபையின் செயற்பாட்டிற்காக உதவுதல் என்பதன் பொருள் யாது?

திருச்சபையின் நிலைத் திருத்தூதனாக தம்மால் முடிந்தளவு தியாகம் செய்வதையே இது குறிக்கின்றது. ஆலயத்தினதும் அங்கு பணி புரிவோரினதும் செயற்பாட்டிற்கும் பங்கிலுள்ள வெவ்வேறு இரக்கச் சபைகளின் தேவைகளுக்காகவும் பணி. பொருள் செய்வதைக் குறிக்கின்றது.

## பாடம் 22
## இயேசு கற்பித்த செபம்

**687.** இறை மனித உரையாடலிற்காக இயேசு எமக்கு அளித்த முழுமையான எடுத்துக்காட்டு எது?

பரலோக மந்திரம்

**688.** இறைவார்த்தை

"ஆண்டவரே யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுத் கொடும்."

**689.** இயேசு கற்றுக் கொடுத்த செபம் பற்றிய விடயம் அடங்கியுள்ள நற்செய்திகள் எவை?

1. மத்தேயு 2. லூக்கா

**690.** இயேசு பரலோக மந்திரத்தை யாருக்காக கற்றுக் கொடுத்தார்?

சீடர்களுக்காக



MRS.N.STELLA (B.A (HONS))

**691.** இறைவனை நாம் அப்பா தந்தை என அழைக்கும் உரிமையை பெற உதவுவது?
திருமுழுக்கு

**692.** கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின் படிப்பினை பரலோக மந்திரம் பற்றி யாது கூறுகின்றது?
திருமுழுக்கின் மூலம் கடவுளின் சுவீகாரப் பிள்ளைகளான எமக்கு கடவுளை அப்பா, தந்தையே என அழைக்கும் உரிமையை இயேசு வெளிப்படுத்தியிருக்கின்றார். விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்னும் சொல் ஒரு இடத்தை குறிப்பதன்று மாறாகக் கடவுளின் இறையாட்சி, தூய்மை, நேர்மையாளர் உள்ளங்களில் அவரது உடனிப்பு ஆகியவற்றை குறிக்கின்றது.

**693.** கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின் படி விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்னும் விவிலிய சொல் குறிப்பது யாது?
கடவுளின் இறைமாட்சி, தூய்மை, நேர்மையாளர் உள்ளங்களில் அவரது உடனிருப்பு என்பதைக் குறிக்கின்றது.

**694.** புகழ்ச்சியும், வேண்டுதலும் உள்ளடக்கிய செபம் யாது?
பரலோக மந்திரம் (இயேசு கற்பித்த செபம்)

**695.** பரலோக மந்திரத்தில் புகழ்ச்சிக்குரிய வாழ்த்துக்கள் எத்தனை உண்டு?
**03**

1. விண்ணுலகிலிருக்கின்ற எங்கள் தந்தையே உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக.
2. உமது ஆட்சி வருக.
3. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல் மண்ணுலகிலும் நிறைவேறுவதாக.

**696.** பரலோக மந்திரத்தில் (இயேசு கற்பித்த செபத்தில்) வேண்டுதல்கள் எத்தனை உண்டு அவை எவை?
**04**

1. எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தந்தருளும்
    - இறைவார்த்தை
    - நற்கருணை
2. எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரைநாங்கள் மன்னித்துள்ளது போல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்.
3. எங்கள் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
4. தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்.

**697.** “ஆமென்” என்பதன் பொருள் யாது?
செபத்தின் மூலம் நாம் கேட்பது தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் செய்யும் நம்பிக்கை அறிக்கையாகும்.

**698.** **இடைவெளி நிரப்புக.**
இயேசு கற்பித்த செபம் ……………………….. சுருக்கமாகும்.
**முழு நற்செய்தியினதும்**

**699.** பரலோக மந்திரத்தை செபிக்கும் முறையை தருக?
எமது விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன என்னும் உறுதியுடன் எளிய பிள்ளைக்குரிய நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியான உறுதிப்பாட்டுடனும் தாழ்ச்சியுடனும் செபிக்க வேண்டும்.

MRS.N.STELLA (B.A (HONS))

**700.** இயேசு கற்பித்த செபத்தின் பண்புகள் எத்தனை? அவை எவை?

**05**

1. இறை புகழ்ச்சி
2. இறைவணக்கம்
3. வேண்டுதல்
4. மன்னிப்பு
5. இறை பாதுகாப்பை வேண்டுதல்

**701.** இயேசு கற்பித்த செபத்தின் பண்புகளை விளக்குக.

1. இறை புகழ்ச்சி – விண்ணகத்திலிருக்கின்ற எங்கள் தந்தையே உமது பெயர் தூயதெனப் போற்றப்படுக.
2. இறைவணக்கம் - உமது ஆட்சி வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.
3. வேண்டுதல் - இன்று தேவையான உணவை எங்களுக்கு தாரும்
4. மன்னிப்பு – எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்.
5. இறை பாதுகாப்பை வேண்டுதல் - எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும் தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்.

**702.** பரலோக மந்திரத்தை செபிக்கும் முன் நாம் செய்ய வேண்டியவை எவை?

எமக்கு குற்றம் செய்தவர், எம்மைத் தண்டித்தவர், எமக்கு தீங்கு செய்தவர், எம்மை ஏளனம் செய்தவர் அனைவரையும் மன்னிக்க வேண்டும்.

## பாடம் 23

## மரியன்னை பக்தி

**702.** மரியன்னை பக்தி முயற்சிக்கான பின்னணி யாது?

மரியாள் எலிசபெத்திடம் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் “பேறுபெற்றார் என்பர்” எனக் கூறியது.

**703.** மரியன்னைக்கு நாம் வணக்கம் செலுத்துவதற்கான காரணங்கள் எவை?

1. இறைவனின் தாயாக இருப்பதால்
2. சென்ம பாவமில்லாமல் உற்பவித்ததால்
3. தாய்மை நிலையை அடைந்தாலும் பிரசவத்தின் முன்னும் பின்னும் கன்னிமையை பாதுகாத்தமையால்.
4. இறையருள் மிகப் பெற்றமை.
5. அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டமையால்.
6. ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டமையால்

**704.** அன்னை மரியாளின் அமலோற்பவம் பற்றி திருத்தந்தை 9வது பியூஸ் (பயஸ்) கூறியது யாது?

எல்லா வல்ல இறைவனது தனித்துவமான அருளாளும் சலுகையாலும் மனுக்குல மீட்பர் இயேசுக் கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டும் தூய கன்னி மரியா கருவாக உருவான போதே சென்ம பாவ தோஷத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்.

MRS.N.STELLA (B.A (HONS))

**705.** 3ம் நூற்றாண்டிலிருந்து சொல்லப்படும் மரியாவின் செபத்தை எழுதுக?

இறைவனின் பரிசுத்த மாதாவே இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடி வந்தோம். நாங்கள் எங்கள் அவசரங்களில் வேண்டிக் கொள்வதற்கு தாயே நீர் பாரா முகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவருமாய் மோட்ச மகிமையுடையவருமான நித்திய கன்னிகையே. சுகல விதமான ஆபத்துக்களிலிருந்தும் எம்மைக் காத்துக் கொள்ளும்.

**706.** திருச்சபையால் மரியன்னைக்கு செலுத்தப்படுவது வணக்கமா? ஆராதனையா?

வணக்கம்

**707.** ஆராதனை யாருக்கு செலுத்தப்படுகின்றது?

மூவொரு கடவுளுக்கு (தந்தை, மகன், தூய ஆவிக்கு)

**708.** தூய கன்னி மரியா பிறக்கும் போது சென்ம பாவத்தோடா பிறந்தார்?

இல்லை

**709.** நாம் சென்ம பாவத்திலிருந்து விடுதலை பெற எமக்கு உதவுவது எது?

திருமுழுக்கு

**710.** விண்ணேற்றம் என்பது யாது?

தனது சொந்த வல்லமையினால் விண்ணகம் செல்வது.

**711.** விண்ணேற்றம் அடைந்தவர் யார்?

இயேசுக் கிறிஸ்து

**712.** விண்ணேற்பு என்பது யாது?

ஒருவர் இன்னொருவரால் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவது.

**713.** விண்ணேற்பு அடைந்தவர் யார்?

தூய மரியாள்

**714.** தூய மரியாளின் விண்ணேற்பு எதற்கு முன்னடையாளமாக உள்ளது?

கிறிஸ்தவர்களின் உயிர்ப்புக்கு

**715.** தூய மரியாவின் விண்ணேற்புப் பற்றி கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் கூறுவது யாது?

அனைத்து சென்ம பாவ தோ'த்திலிருந்து பாதுகாக்கப்பட்டு அமல உற்பவியான கன்னி மரியா தமது இவ்வுலக வாழ்வின் முடிவில் தம் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்திற்கும் அரசியாக ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டார்.

**716.** **இறைவார்த்தை**

"நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துச் செல்வேன்."

**717.** தான் அன்பு செய்யும் அனைவரும் தம்முடன் இருக்க வேண்டும் என்று இயேசுவின் விருப்பம் எச் செபத்தில் காணப்படுகின்றது?

இறைவேண்டல் செபம் (இறுதிச் செபம் அல்லது பிரியா விடைச் செபம்)

**718.** **இறைவார்த்தை**

"தந்தையே அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டுமே என விரும்புகின்றேன்.

MRS.N.STELLA ( B.A ( HONS)

**719.** மரியன்னை செபமாலை ஏந்தியவாறு பல தடவைகள் காட்சியளித்துள்ளார். இக் காட்சிகள் எமக்கு உணர்த்தும் செய்திகள் யாது?

1. நாம் மிகவும் துன்பமான காலத்தில் வாழ்கின்றோம் என்பதை இறைவன் அறிந்துள்ளார்.
2. துன்பமான காலத்தில் மரியன்னை தனது அன்னைக்குரிய அன்பை விசேட விதமாக காட்டுகின்றார் என்பதுமாகும்.

**720.** பாத்திமா நகரில் தேவ அன்னை யாருக்கு காட்சி கொடுத்தார்?

1. லூசியா
2. ஜசிந்தா
3. பிரான்சிஸ்கோவுக்கு

**721.** எப்போது பாத்திமா நகரில் தேவ அன்னை காட்சி கொடுத்தார்?

கி.பி 1917.05.13 – 10.13 ம் திகதி வரை

**722.** தேவ அன்னை பெர்ணதேத்துக்கு எங்கு காட்சி கொடுத்தார்?

லூர்து நகரில்

**723.** தேவ அன்னை பெர்ணதேத்துக்கு எத்தனை முறை காட்சி கொடுத்தார்?

18 முறை

**724.** தேவ அன்னை பெர்ணதேத்துக்கு எத்தனையாம் ஆண்டு காட்சி கொடுத்தார்?

கி.பி 1858. 02. 11ம் திகதியில்

**725.** பெர்ணதேத்துக்கு தேவ அன்னை கொடுத்த காட்சி வழியாக எமக்கு உணர்த்தப்படுவது யாது?

செபமாலைப் பக்தியின் மாண்பு பற்றி

**726.** 16ம் நூற்றாண்டில் இந்தியாவில் வேளாங்கன்னி நகரில் இறை அன்னை யாருக்குக் காட்சி கொடுத்தார்?

1. முடவனான சிறுவனுக்கு
2. பாலை விலைக்கு வாங்குபவருக்கும்

**727.** இறை அன்னை வேளாங்கன்னி அன்னை செய்த புதுமை யாது?

முடவனான சிறுவனை நடக்கச் செய்தது.

**728.** செபமாலை என்பதன் ஆங்கிலச் சொல் யாது?

Rosary – றோசரி

**729.** செபமபலை என்பதன் இலத்தீன் சொல் யாது?

Rosariyum – றோசாரியும்

**730.** "றோசாரியும்" என்பதன் பொருள் யாது?

றோசாமலர்ப் பூங்கா

**731.** செபமாலை வழியாக நாம் எவற்றை நினைவு கூருகின்றோம்?

இயேசுவினதும், மரியன்னையினதும் வாழ்க்கை மறையுண்மையையும், முக்கிய நிகழ்ச்சிகளையும்

**732.** நாம் ஏன் அனுதினமும் செபமாலை சொல்ல வேண்டும்?

1. நாம் மனந்திரும்ப
2. பிறர் மனந்திரும்ப

MRS.N.STELLA (B.A (HONS)

**733.** பரிசுத்த திருச்சபை ஒவ்வொரு வருடமும் தேவ அன்னைக்கு எடுக்கும் விழாக்கள் எவை?

1. தை 01 – தூய மரியாள் இறைவனின் அன்னை
2. மாசி 02 – காணிக்கை அன்னை
3. வைகாசி 31– எலிசபெத்தை சந்தித்ததை
4. ஆவணி 15 – விண்ணேற்பு
5. புரட்டாதி 08 – பிறப்புத் திருவிழா
6. மார்கழி 08 – அமல உற்பவம்

**734.** மரியன்னை திருச்சபையின் அன்னை என்பதற்கான சான்றுகள் எவை?

1. இயேசு சிலுவை அடியில் தம் தாயை சீடர்களின் தாயாக ஒப்படைத்தல்.
2. இயேசுவின் விண்ணேற்றத்திற்கு முன்னும், பின்னும் சீடர்களுடன் கூட இருந்தமை.
3. திருத்தந்தை 6 வது பவுல் எழுதிய ''விசுவாசத்தின் மறை பொருள்'' என்ற சுற்று மடலின் படி.

**735.** திருத்தந்தை 6வது பவுல் எழுதிய ''விசுவாசத்தின் மறைபொருள்'' என்ற சுற்றுமடலின் இலத்தீன் பெயர் யாது?

மிஸ்டேறியும் பிடெயி

**736.** திருத்தந்தை 6வது பவுல் எழுதிய ''விசுவாசத்தின் மறைபொருள்'' என்ற சுற்று மடலில் உள்ள விடயங்கள் எவை?

1. மரியன்னை உலகில் வெவ்வேறு பகுதிகளில் காட்சி கொடுத்து வந்தமை.
2. நாம் அன்றாட வாழ்வில் அனுபவித்த அவரின் பரிந்துரைகளும்
3. மரியன்னை திருச்சபையின் அன்னை என்றும்

**737.** தேவ அன்னையிடம் இருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய நல்ல பண்புகள் 5 தருக?

1. இறைவனுக்கு கீழ்பபடிந்தது போல் நானும் இறைசித்தத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பேன்.
2. இறைவன் தனக்கு கொடுத்த பொறுப்புக்கள் கடமைகளை விருப்புடன் நிறைவேற்றியது போல் நானும் வீட்டில், பாடசாலையில், சமூகத்தில் எனக்குள்ள பொறுப்புக்கள், கடமைகளை விருப்புடன் நிறைவேற்றுவேன்.
3. எலிசபேத்திற்கு உதவி செய்தது போல் நானும் தேவையில் இருப்போருக்கு உதவி செய்வேன்.
4. தேவ அன்னையாக இருந்தும் தன்னை தாழ்த்திப் பொறுமையுடனும் அன்பாகவும் மற்றவர்களோடு உறவு கொண்டது போல் நானும் என்னைத் தாழ்த்தி அயலவருடனும், சக மாணவருடனும் அன்பாக இருப்பேன்.
5. கானாவூர் திருமண நிகழ்வில் மற்றவர்களின் கஸ்டத்தை உணர்ந்து இயேசு வழியாக உதவி செய்தது போல் நானும் கஸ்டத்தில் இருப்போருக்கு என்னால் இயன்றளவும் அல்லது ஏனையோரின் உதவியைப் பெற்றும் செய்வேன்.
6. இறைவனிடம் மற்றவர்களுக்காக பரிந்துரைப்பது போல் நாம் என் அயலவருக்காகவும், என்னைத் துன்புறுத்துவோருக்காகவும் நண்பருக்காகவும் இறைவனிடம் செபிப்பேன்.

MRS.N.STELLA (B.A (HONS))

**சிறு குறிப்பு**

1. **இறை அன்னை பாத்திமா நகரில் காட்சியளித்தல்**

கி.பி 1917ல் வைகாசி மாதம் 13ம் திகதியிலிருந்து ஐப்பசி மாதம் 13ம் திகதி வரையான காலப்பகுதியில் பலமுறை போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ எனற மூன்று சிறுவருக்கு தேவ அன்னை காட்சியளித்தார். கேதுறு மரத்தில் தோன்றிய ஒளிக்கதிர்கள் மத்தியில் செபமாலையைச் செபிக்குமாறு பணித்தார். இறை அன்னை லூர்து நகரில் காட்சியளித்தல். கி.பி 1858 மாசி மாதம் 11ம் திகதி பிரான்சின் லூர்து நகரில் பெர்ணதேத் என்ற சிறுமிக்கு **18 முறை** காட்சியளித்து செபமாலைப் பக்தியின் மாண்பை வெளிப்படுத்தினார்.

**738.** போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ எனற மூன்று சிறுவருக்கு தேவ அன்னை காட்சியளித்த ஆண்டு?
கி.பி 1917

**739.** போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் யாருக்கு தேவ அன்னை காட்சியளித்தார்.
லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ

**740.** போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ எனற மூன்று சிறுவருக்கும் தேவ அன்னை காட்சியளித்து கூறியத என்ன?
செபமாலையைச் செபிக்குமாறு

**741. 2. இறை அன்னை லூர்து நகரில் காட்சியளித்தல்.**

**742.** இறை அன்னை லூர்து நகரில் காட்சியளித்தல். கி.பி 1858 மாசி மாதம் 11ம் திகதி பிரான்சின் லூர்து நகரில் பெர்ணதேத் என்ற சிறுமிக்கு **18 முறை** காட்சியளித்து செபமாலைப் பக்தியின் மாண்பை வெளிப்படுத்தினார்.

**743.** இறை அன்னை லூர்து நகரில் காட்சியளித்தது எத்தனையாம் ஆண்டு?
கி.பி 1858

**744.** லூர்து நகரில் லூர்து நகரில்லூர்து நகரில் காட்சியளித்தது யாருக்கு?
பெர்ணதேத்துக்கு

**745.** இறை அன்னை லூர்து நகரில் பெர்ணதேத்துக்கு எத்தளை முறை காட்சியளித்தது யாருக்கு?
18

**746.** இறையன்னை காட்சி கொடத்த லூர்து நகர் எங்குள்ளது?
பிரான்சில்

3. **இறை அன்னை வேளாங்கன்னி நகரில் காட்சியளித்தல்.**

16ம் நூற்றாண்டில் இந்தியாவில் வேளாங்கன்னி என்னும் நகரில் மரியன்னை பால் விற்பனை செய்யும் முடவனான ஒரு சிறுவனுக்கு ஒரு குளத்தினருகில் காட்சியளித்தார். அவள் தன் கையிலேந்திய குழந்தைக்கு குடிக்க கொடுப்பதற்காக சிறுவனிடம் பால் கேட்டாள். சிறுவன் அவளின் வேண்டுகோளை நிறைவேற்றினான். பால் விற்பனை செய்யும் இடத்திற்குச் சென்று பால் குறைந்திருக்கும் நேரம் தாமதமானதிற்கும் மன்னிப்புக் கேட்டான். ஆனால் பாத்திரத்தில் பால் குறைந்திருக்க வில்லை. இதனால் பாலை விலைக்கு வாங்குபவர் சிறுவனுடன் குளத்தினருகே வந்த போது அவள் அந்த இருவருக்கும் காட்சியளித்தால். பின்பு வேளாங்கன்னி கிராமத்தில் அச்சிறுவனுக்கு மீண்டும் காட்சியளித்ததோடு முடவனான அச்சிறுவனுக்கு குணமளித்தார்.

MRS.N.STELLA (B.A (HONS)

**747.** சதா சகாய அன்னையின் நவநாளின் பண்புகள் எவை?
எங்களதும் பிறரதும் வாழ்க்கையில் இவ்வுலக மறுவுலக அன்றாட தேவைகளைப் பெற்றுக்
**748.** கொள்ளவும் அதன் மூலம் இறையன்பை அனுபவிக்கவும் அருள் கிடைக்கின்றது.

**749.** ஏன் கத்தோலிக்க திருச்சபை திருவழிபாடுகளில் மரியன்னைக்கு சிறப்பான இடத்தைக் கொடுக்கின்றது?

1. அவர் இயேசுவின் தாயாக இருப்பதால்
2. இயேசுவை பின்பற்றுபவராக இருப்பதால்
3. திருச்சபையின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றி வரும் பணிக்காக.

**750.** மரியன்னையின் பக்தி என்பது யாது?
மரியன்னைக்காக நடாத்தப்படும் பக்தி முயற்சிகள் யாவும் மரியன்னை பக்தி முயற்சிகள் எனப்படும்.

## பாடம் 24

## திருப்புகழ்மாலை

**741.** திருப்புகழ் மாலை என்பது யாது?
தினமும் குறிப்பிட்ட வேளைகளில் இறைவனைப் புகழ்வதற்காக திருச்சபையால் அதிகாரப் பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட செமே திருப்புகழ் மாலை எனப்படும்.

**742.** திருப்புகழ்மாலை சொல்லும் வேளைகள் எத்தனை? அவை எவை?
04

1. காலை
2. மதியம்
3. மாலை
4. இரவு

**743.** **இறைவார்த்தை**
“ஆண்டவரே விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும்.”

**744.** திருப்புகழ் மாலைச் செபத்தை செபிக்கும் வேளைகளின் அடிப்படையில் எத்தனையாகப் பிரிக்கலாம்? அவை எவை?
**04**

1. காலைத் திருப்புகழ் மாலை
2. மதியத் திருப்புகழ் மாலை
3. மாலைத் திருப்புகழ் மாலை
4. இரவுத் திருப்புகழ் மாலை

**745.** மாலைத் திருப்புகழ் மாலையை எவ்வாறு அழைப்பர்?
வெஸ்பம்

**746.** திருப்புகழ் மாலைக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் தருக?

1. நாளிகைத் திருவழிபாடு
2. கட்டளைச் செபம்
3. திருச்சபையின் அதிகாரப் பூர்வச் செபம்
4. புகழ்ச்சிச் செபம்

**747.** இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திருப்புகழ் மாலை எவ்வாறு அழைக்கப்பட்டது?
கட்டளைச் செபம்

**748.** ஏன் திருப்புகழ் மாலை கட்டளைச் செபம் என அழைக்கப்படுகின்றது?
குருக்களும், துறவிகளும் கட்டாயமாக இச்செப வழிபாட்டை நிறைவேற்ற வேண்டும் என்பதால்.

**749.** இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு பின் திருப்புகழ்மாலை எவ்வாறு அழைக்கப்பட்டது?
நாளிகை திருவழிபாடு



MRS.N.STELLA ( B.A ( HONS))

**750.** ‘‘இடைவிடாது செபித்தல்’’ பற்றிய திருத்தூதர்களின் படிப்பினைக்கேற்ப திருப்புகழ் மாலையை செபத்தால் ஏற்படும் நன்மைகள் எவை?

1. அன்றை நாள் முழுவதும் புனிதப்படுத்தப்படுகின்றது.

2. இதனால் இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கினால் பெறும் குருத்துவத்தில் பங்கு பெறுகின்றனர்.

3. முறையாக செபிக்கும் போது மணமகனுடன் உரையாடும் மணமகளின் குரலாக அமைகின்றது.

4. திருச்சபை ஆன்மீகத்தில் வளர்கின்றது.

**751.** திருப்புகழ் மாலையின் புகழ்ச்சிப்பாடலில் நற்செய்தியில் இருந்து எத்தனை பாடல்கள் எடுக்கப்படுகின்றன?

**03**

1. செக்கரியாவின் பாடல்

2. மரியாவின் பாடல்

3. சிமியோனின் பாடல்

**752.** திருப்புகழ்ச்சியின் புகழ்ச்சிப்பாடல் எந்த நற்செய்தியில் இருந்து எடுக்கப்படுகின்றது?
லூக்காஸ் நற்செய்தி

**753.** திருப்புகழ் மாலை யூத மக்களால் பின்பற்றப்பட்டது என்பதற்கான சான்று யாது?
ஸ்பானிய இனத்தைச் சேர்ந்த பெண் துறவியான ‘‘எஜேரியா’’ என்பவர் கி.பி 381-384 ல் ஜெருசலேமிற்கு திருயாத்திரை சென்ற போது யூதர்கள் மத்தியில் இவ்வழக்கம் காணப்பட்டதாக தமது நாட்குறிப்பேட்டில் எழுதியுள்ளதின் படி.

**754.** திருப்புகழ் மாலைக்கு பதிலாக பொதுநிலையினரால் சொல்லப்படும் செபம் யாது?
மூவேளைச் செபம்

**755.** திருவழிபாட்டின் பகுதிகள் எவை?

1. திருப்பலி

2. அருளடையாளம்

3. திருப்புகழ்மாலை

**756.** திருப்புகழ் மாலையின் ஒழுங்கமைப்பு யாது?

1. முன்னுரை
2. பாடல்
3. 1ம் திருப்பாடல்
4. 2ம் திருப்பாடல்
5. 3ம் திருப்பாடல்
6. இறைவார்த்தை
7. இறைவார்த்தைக்குப் பதில்
8. புகழ்ச்சிப் பாடல் (செக்கரியாவின் பாடல், மரியாவின் பாடல் )
9. விசுவாசிகளின் மன்றாட்டு
10. இயேசு கற்பித்த செபம்
11. இறுதி மன்றாட்டு

**757.** புகழ்ச்சிப் பாடலில் காலைத் திருப்புகழ் மாலை வழிபாட்டில் எப்பாடல் பாடப்படுகின்றது?
செக்கரியாசின்

**758.** புகழ்ச்சிப் பாடலில் மாலைத்திருப்புகழ் மாலை வழிபாட்டில் எப்பாடல் பாடப்படுகின்றது?
மரியாவின்

MRS.N.STELLA (B.A (HONS)

**759. சிறுகுறிப்பு**

**மரியாவின் புகழ்ச்சிப் பாடல்** :-

அதைக் கேட்ட மரியா பின்வருமாறு கூறினார். "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமு றையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.

**செக்கரியாவின் புகழ்ச்சிப் பாடல்** :-

பிள்ளையின் தந்தை செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரைத்த இறைவாக்கு, "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார். தும் தூய இறைவாக்கினர் வாயினால் தொடக்கம் முதல் அவர் மொழிந்த படியே அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காக தோன்றச் செய்தார். நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார். அவர் நம் மூதாதையருக்கு இரக்கம் காட்டி தமது தூய உடன்படிக்கையையும் நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவு கூர்ந்தார்".

**சிமியோனின் புகழ்ச்சிப் பாடல்** :-

"ஆண்டவரே உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி, இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை" என்றார்.

**760.** "திருப்புகழ் மாலை" என்ற பெயரால் இச்செபம் அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
இதன் மூலம் எக்காலத்திற்கும் உரியவராகிய இறைவனை ஒவ்வொரு வேளையும் இடையறாது புகழ்வதால் ஆகும்.

## பாடம் 25
## தியானம்

**761.** தியானம் என்பதில் எதிர்பார்ப்பது எது?
மனதை ஒரு நிலைப்படுத்தல் மட்டுமல்ல இறைவனோடு உறவு கொண்டு இறைவார்த்தையினால் ஊட்டம் பெற்று இறைவனில் ஒன்றிணைந்து அவரின் பிரசன்னத்தை உய்த்துணர்வதாகும்.

**762.** கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின் படி தியானம் என்பது யாது?
தேடல்

**763.** தேடலுக்கான விடயங்கள் எத்தனை? அவை எவை?

1. கிறிஸ்தவ வாழ்வின் குறிக்கோள்
2. கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டிய முறை

**764.** தேடல் என்பதன் பொருள் யாது?
எம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்ப்பதை அறிந்து அதற்குரிய பதிலை வெளிப்படுத்துவதாகும்.

**765.** கத்தோலிக்கரது தியானத்திற்கு அடித்தளமாக இருப்பது யாது?
இறைவார்த்தை

MRS.N.STELLA (B.A(Hons))

**766.** லெக்சியோ டிவினா தியான முறை எத்தனையாம் நூற்றாண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது?

16ம் நூற்றாண்டில் இருந்து

**767.** லெக்சியோ டிவீனா தியான முறையின் படிகள் எத்தனை? அவை எவை?

**04**

1. கியோ – திருவிவிலியத்தை வாசித்தல்
2. மெடிடாசியோ – வாசிக்கப்பட்ட இறைவார்த்தையை தியானித்தல்
3. ஒராசியோ – வாசிக்கப்பட்ட இறைவார்த்தையின் ஒளியில் செபித்தல்.
4. கொண்டெம் பிலாசியோ – தியானித்த இறைவார்த்தையின் மூலம் இறைவனில் ஒன்றித்து நிலைத்திருத்தல்.

**768.** ஆழ் நிலைத் தியானத்தின் படிமுறைகள் எத்தனை? அவை எவை?

**02**

1. செவிமடுத்தல் - இறைவார்த்தைக்கு செவிமடுத்தல்
2. தியானித்தல் - இறைவார்த்தையைத் தியானித்து தமது வாழ்வில் அது எவ்வளவு தூரம் செயற்படுத்தப்படுகிறது எனத் தேடிப் பார்த்து தூய்மையான வாழ்வு வாழத் தீர்மானித்தல்.

**769.** குவைட்ரீசம் என்ற பேதகத்தின் கொள்கை யாது?

ஆண்டவரில் நிலைத்திருத்தல்

**770.** குவைட்ரீசம் என்ற பேதகம் உருவாகிய காலப்பகுதி எது?

17ம் நூற்றாண்டு

**771.** ஜன்சென்சம் என்னும் பேதகத்தின் கொள்கை யாது?

இறை ஆசீரைப் பெற்றுக் கொள்வதற்கு முற்றும் முழுமையாகத் தூய்மை நிலையில் இருக்க வேண்டும். முழுமையான உயர் நிலையை அடையாதவர்கள் ஆழ்நிலைத் தியானத்தில் ஈடுபட முடியாதென்றும் கற்பித்தது.

**772.** இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் தியானம் பற்றித் திருச்சயையில் மறு சீரமைப்பு ஏற்பட பங்களிப்பு செய்தவர்கள்?

1. தூய அவிலா தெரேசாள் 2. தூய சிலுவை அருளப்பர் 3. ஆசீர்வாதப்பர் சபையாளர்
4. கார்மேல் துறவற சபையினர்

**773.** இலங்கையில் பின்பற்றப்படும் தியானத்தின் படிமுறைகள் எவை?

1. தினமும் அதிகாலையில் துயில் எழுதல்.
2. முகம் கழுவிய பின் தண்ணீர் அல்லது தேநீர் அருந்துதல்.
3. இலகுவான முறையில் அமருதல்.
4. சுவாசப் பயிற்சியில் ஈடுபடுதல்.
5. புதிய நாளுக்காக நன்றி கூறிச் செபித்தல்.
6. அந்நாளுக்குரிய நற்செய்தி வாசகத்தை அல்லது திருவிவிலியப் பகுதியை வாசித்தல்.
7. அந்நற்செய்திப் பகுதியுடன் தனது வாழ்வை ஒப்பிட்டுப் பார்த்தல்.
8. நற்செய்தியின் படி வாழத்தவறிய சந்தர்ப்பங்களுக்காக ஆண்டவர் இயேசுவிடம் மன்னிப்புக் கேட்ட
9. எதிர் காலத்தில் நற்செய்தி தரும் படிப்பினைகளின் படி வாழத் தீர்மானம் எடுத்தல்.
10. அந்நற்செய்தியின் படி இன்னும் அதிகமாகச் செய்யக் கூடியவை தொடர்பாக சிந்தித்தல்.
11. குடும்பத்தினர், நண்பர்கள் பற்பல துன்பங்களின் மத்தியில் வாழ்வோரின் தேவைகளுக்காக செபித்தல்.
12. மீண்டும் சுவாசப் பயிற்சி எடுத்தல்.
13. படிப்பதற்கு ஆரம்பித்தல்.

MRS.N.STELLA (B.A (HONS))

MRS.N.STELLA (B.A (HONS)